
# தர்மசக்கரம்



துந்துபி ஞு மார்கழி மீ சக்கரம் 31 ஆரம் 12

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை, எலமனூர் ஸ்டேஷன், திருச்சி ஜில்லா.

## இதுவரை புதிய திட்டத்தின்கீழ் புதுப்பித்துக்கொள்ளாத டிபாசிட் சந்தாதாரர்களுக்கு

# முக்கிய அறிவிப்பு

காகிதவிலை உயர்வு, தபால் கட்டண உயர்வு காரணமாக தர்மசக்கர ஆண்டு சந்தா ரூ. 15-00 ஆகவும் டிபாசிட் சந்தா ரூ. 150-00 ஆகவும் 1—6—82 முதல் உயர்த்தப்பெற்றது. இவ்விபரம் தர்மசக்கரத்தில் 1—6—82 முதல் வெளியிடப்பட்டு வருகிறது.

டிபாசிட் சந்தா ரூ. 100-00 செலுத்தி உள்ளவர்கள் மேற்கொண்டு ரூ. 50-00 அனுப்பி வைக்கவேண்டுமென்று பல மாதங்கள் தர்மசக்கரத்தில் வெளியிட்டாயிற்று. இதுவரை இன்னும் பலர் செலுத்தவில்லை. ரூ. 50-00 செலுத்தாதவர்களின் நிலைமையை நிர்ணயமாக இப்போது தீர்மானிக்கவேண்டியதாகிறது.

1. ரூ. 50ஐ 31—12—82க்குள் செலுத்தி தங்கள் டிபாசிட் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுதல்;
2. தங்கள் டிபாசிட் ரசிதை அனுப்பி ரூ. 100ஐ வாபஸ் பெற்றுக்கொள்ளுதல்;

மேற்கூறிய இரண்டு முறைகளுள் தாங்கள் தீர்மானிக்கிற முறையை 31—12—82க்குள் நிறைவேற்றிவிட வேண்டும். அப்படி 31-12-82க்குள் நிறைவேற்றாத சந்தாதாரர்களுக்கு அவர்களின் டிபாசிட் தொகை ரூ. 100ஐயும் ஏழு ஆண்டுகளுக்குத் தர்மசக்கர ஆண்டு சந்தாவாகப் பதிந்துகொண்டு இதழ் அனுப்பி வைக்கப்படும் என்பதையும் இம்முறையில் அவர்கள் டிபாசிட் செய்த தொகை ரூ. 100ம் ஏழு ஆண்டு சந்தாவுக்குச் சரியாகிவிடுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பழைய ரசீது கிடைக்காத அன்பர்கள் கடிதம் மூலம் எங்களுக்கு எழுதித் தெரிவிக்கலாம்.

காரியதரிசி

---

# ஸ்ரீ ராமகிருஷ்ணமடம்-ராமேஸ்வரம்

1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் தேதி இம்மடாலயம் துவக்கப் பெற்றது. அன்று முதல் இங்கு மஹேஸ்வர பூஜை முறையில் அன்னம் வழங்குதல் நடைபெற்று வருகிறது. இதில் யாத்ரிகர்களும், உள்ளூர் பள்ளி மாணவர்கள் சிலரும் கலந்துகொள்கின்றனர். இவ்வாண்டு செப்டம்பர், அக்டோபர் ஆகிய இரண்டு மாதங்களிலும் எல்லா வேளைகளிலும் 1972 பேர் உணவு ஏற்றுக் கொண்டனர். அதற்கான உணவுச் செலவு ரூ. 4647. உண்டியல் மூலமாகவும், அன்பர்கள் நேரில் அளித்ததன் மூலமாகவும் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் வந்த நன்கொடை வரவு ரூ. 615. மூலதனமாக வைத்துக்கொண்டு வட்டியை மட்டும் செலவிடுமாறு வந்த தொகை ரூ. 7,000. இம்மடாலயத்தைப் புதுப்பிக்கும் வேலை நடைபெற்றுவருகின்றது. இதற்கு அக்டோபர் முடிய ஆன கட்டடச்செலவு சுமார் ரூ. 2,70,000 ஆகும்.

# தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

| சக்கரம் 31 | துந்துபி ஹூ மார்கழி மீ | ஆரம் 12 |
|---|---|---|

## பொருளடக்கம்



| வருட சந்தா : | உள்நாடு | ரூ. 15-00 | வெளிநாடு | ரூ. 35-00 |
|---|---|---|---|---|
| தனி இதழ் | ,, | ரூ. 1-50 | ,, | ரூ. 3-00 |

## அந்தர்யோக விவரங்கள்

இராமநாதபுரம் ஜில்லா—சாத்தூரில் 19—12—82 ஞாயிற்றுக்கிழமை

*இடம்: எட்வர்டு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி (பஸ் ஸ்டாண்டுக்கு எதிரில்)*
*நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை*
*நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்*

மதுரை ஜில்லா—தேனியில் 22—12—82 புதன்கிழமை

*இடம்: ஸ்ரீ கணேச கந்தபெருமாள் ஆலயம், தியாகராஜ நகர்*
*நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை*
*நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்*
*உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 1-50 செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.*

*[தொடர்ச்சி பின்பக்கம் பார்க்க]*

## அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

திருநெல்வேலி ஜில்லா—தர்சநல்லூரில் 26—12—82 ஞாயிற்றுக்கிழமை
இடம்: சிவப்பிரகாச வித்யாலயம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்

வடஆற்காடு ஜில்லா—மேக்களூரில் 1—1—83 சனிக்கிழமை
இடம்: ஸ்ரீ நவநீத கோபாலகிருஷ்ண ஆலயம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 2—1—83 ஞாயிற்றுக்கிழமை
இடம்: ஸ்ரீ விவேகானந்த கல்லூரி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-50; மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

வடஆற்காடு ஜில்லா—ஆரணியில் 2—1—83 ஞாயிற்றுக்கிழமை
இடம்: கோட்டை ஸ்ரீ கைலாசநாதர் ஆலயம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

பெரியார் ஜில்லா—சிவன்மலையில் 2—1—83 ஞாயிற்றுக்கிழமை
இடம்: சஷ்டி சங்க அன்னதான மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—விருதுநகரில் 9—1—83 ஞாயிற்றுக்கிழமை
இடம்: S.S. அண்ணாமலை நாடார் கல்யாண மண்டபம் (பெரியகாளியம்மன் கோவில்)
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜங்ஷனில் — 9—1—83 ஞாயிற்றுக்கிழமை
இடம்: ம. தி. தா. இந்து மேல்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி பரானந்தர்

மதுரை ஜில்லா—திருமங்கலத்தில் 9—1—83 ஞாயிற்றுக்கிழமை
இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த தபோவனம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-15 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி போதானந்தர்

# தர்ம சக்கரம்

சக்கரம் 31 துன்மதி ௵ தை — துந்துபி ௵ மார்கழி

1982

प्रज्ञानं ब्रह्म

எழுமின் விழிமின் செந்நெறி சார்மின்

ஆசிரியர்
சுவாமி நித்தியானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

# பொருளடக்கம்

---

## ஆண்டு சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

தர்ம சக்கரம் தை மாத இதழ் முதல் அடுத்த மார்கழி மாத இதழ் வரை பன்னிரண்டு இதழ்களும் ஒரு சக்கரமாகக் கணக்கிடப்படுகிறது.

தர்ம சக்கரத்தில் வரும் விஷயங்கள் செய்தித் தாள்களில் உள்ளவைபோன்று தாற்காலிகமானவைகளாக இல்லாமல் நிரந்தரமான தத்துவ ஆராய்ச்சியாக இருக்கின்றன. ஆதலால் ஓர் ஆண்டுக்கான பொருளடக்கத்தை அச்சாக்கி மார்கழி மாத இதழுடன் வைத்து அனுப்புகிறோம். தை முதல் மார்கழி முடிய பன்னிரண்டு மாத தர்மசக்கர இதழ்களையும் அப்பொருளடக்கத்தை வைத்து பைண்டு செய்து கொண்டால் ஒரு நல்ல புத்தகமாக அமையும். நாம் படிப்பதற்கும் மற்றவர்களுக்குப் படிக்கத் தருவதற்கும் வசதியாக இருக்கும்.

ஆதலால் தர்ம சக்கரத்தில் புதிய சந்தாதாரர்கள் சேரும் போது தை இதழ் முதலே சந்தாதாரராய்ச் சேர்ந்துகொண்டு பயன்பெறக் கோருகிறோம். அன்பர்கள் முயன்று தை மாத இதழ் முதலே புதிய சந்தாதாரர்களை அறிமுகப்படுத்திப் பலரையும் ஆத்மிக வாழ்க்கையில் ஈடுபடச் செய்யக் கோருகிறோம்.

குறிப்பிட்ட அளவே இதழ்கள் அச்சாக்கப்படுவதால் கூடிய விரைவில் தை மாதம் புதுப்பித்துக் கொள்ள வேண்டிய பழைய சந்தாதாரர்களும் உடன் புதுப்பித்துக்கொண்டு மற்றும் பலரையும் புதிய சந்தாதாரர்களாக அறிமுகம் செய்யக் கோருகிறோம். ஆண்டு சந்தா 1—6—82 முதல் ரூ. 15-00 ஆகவும் சகாய சந்தா ரூ. 10-00 ஆகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. சந்தா தொகையை அனுப்பும்போது மறவாமல் தங்கள் சந்தா எண்ணையும் குறிப்பிடக் கோருகிறோம்.

प्रज्ञानं ब्रह्म

# தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 31 | துந்துபி ௵ மார்கழி ௴ | ஆரம் 12

## பிரார்த்தனை

नमोऽस्तु विष्णवे तस्मै यस्याभिन्नामिदं जगत् ।
ध्येयः स जगतामाद्य प्रसीदतु ममाव्ययः ॥

— विष्णु पुराणम्

*நமோऽஸ்து விஷ்ணவே தஸ்மை யஸ்யாபின்னாமிதம் ஜகத் ।*
*த்யேய: ஸ ஜகதாமாத்ய ப்ரஸீதது மமாவ்யய: ॥*

— *விஷ்ணு புராணம்*

பிரபஞ்சத்திற்கு அபின்னமாயிருக்கும் விஷ்ணுவை வழுத்துகிறேன். ஜகத் காரணனாகிய அவனைத் தியானிப்போம். மாறாத பொருள் எனக்குக் கருணைபுரிவதாகுக.

ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்
தெழிகுரல் அருவித் திருவேங் கடத்து
எழில்கொள் சோதி எந்தைதந்தை தந்தைக்கே.

— *திருவாய்மொழி*

# அருள் விருந்து

ஐக்கிய வழிபாட்டில் மனவுறுதி தானே வந்தமைகிறது.

நெடிது வாழ்ந்திருப்பதிலும் மேலானது நன்கு வாழ்ந்திருப்பது.

விவாதித்துச் சந்தேகம் என்னும் தொற்றுநோயை அகற்றமுடியாது.

பரஞானத்தில் பிரபஞ்ச சம்பந்தமான அனைத்தையும் தியாகம் பண்ணு.

பரஸ்பர நட்பு இருக்குமிடத்து அபிப்பிராய வித்தியாசம் கேடு விளைவிக்காது.

தளர்வுறாதே; சகித்தல் வாயிலாக ஆகாததை ஆகும்படி செய்வது உனக்குச் சாத்தியம்.

துன்பத்தைத் தானே ஏற்றுக்கொள்ளுதலின் வாயிலாக மனிதன் பிறர்க்கு நலன் செய்கிறான்.

துயரத்தைக் கருத்தில் வாங்காதே; அதை வாங்குவதன் வாயிலாக அதற்கு நீ வலிவு தருகிறாய்.

நூலறிவு அமைதியை நல்காது. நேர்மையான வாழ்வே அமைதியுற்றிருப்பதற்கு ஏற்ற உபாயம்.

துயரம் மனிதனைக் கீழ்மையில் ஆழ்த்துகிறது. மகிழ்வோ அவனை மேல் நிலைக்கு உயர்த்துகிறது.

நல்வழியில் போகிறவனை நல்லார் பின்பற்றுகின்றனர். ஆதிக்கம் செலுத்துகின்றவனுடைய உதவியை உலகம் நாடுகிறது.

நல்லொழுக்கம் தனி மனிதனை மட்டும் மேன்மைப்படுத்துவதன்று; சமுதாயம் முழுவதையுமே அது மேன்மைப்படுத்துகிறது.

பந்தபாசம் மனதை ஒட்டியதாம். மனத்தெளிவு அடைகிறவன் அக்கணமே எல்லாத் தொல்லைகளினின்றும் விடுதலை பெறுகிறான்.

மரம் வெயிலை வாங்கிக்கொண்டு பிறர்க்கு நிழல் தருகிறது. நல்லார் துன்பத்தை ஏற்றுக்கொண்டு பிறர்க்கு நலன் செய்கின்றனர்.

வானத்தில் பறக்கும் பறவை அடையாளம் எதையும் விடுவதில்லை. அங்ஙனம் சான்றோர் உலகில் இன்ப துன்பம் எதையும் பொருட்படுத்துவதில்லை.

சத்தியத்தைக் கடைப்பிடிப்பவன் சமுதாயப் பழக்கவழக்கத்துக்கு உட்படவேண்டிய அவசியமில்லை. மற்று, தான் செய்த பிழை ஏதேனும் இருக்குமாகில் அதை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

## பரமஹம்சர் புகட்டிய

# பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் பக்தர்களோடு உரையாடிக் கொண்டிருக்கிறார். அவர் பகர்ந்ததாவது: "எனக்கும் காட்சி ஒன்று தென்பட்டது. (பக்தரிடம்) நீ பார்த்தது யாது என்பதைப் பற்றிப் பகர்வாயாக."

பக்தர்: "உலக வாழ்வு என்னும் மாசின் மீது ஒரு சிலர் அமர்ந்திருந்தனர். வேறு சிலர் சிறிது தூரத்தில் சுத்தமான இடத்தில் அமர்ந்திருந்தனர். இவையே நான் கண்ட காட்சி."

பரமஹம்சதேவர்: "நீ கண்ட காட்சி உலகத்தவருடைய பரிதாபகரமான நிலையைப் பற்றியது. உலகப்பற்றுடையவர்கள் அமர்ந்திருந்த இடம் அழுக்கு நிறைந்தது. மற்று, பற்று அற்றவர்களோ பரமனுக்குப் பக்கத்தில் சுத்தமான இடத்தில் அமர்ந்திருந்தனர். பற்று உடையவர்களும் பகவத் தியானம் பண்ணுவார்களானால் படிப்படியாக அன்னவர்கள் உள்ளத்திலிருந்து உலகப்பற்றுக்கள் ஒன்றன் பின் ஒன்றாக அகன்று போகின்றன. காமத்தினின்றும் காசு ஆசையினின்றும் விடுபட்டவன் பாக்கியவான். பிறகு உலக பந்தங்கள் எவையும் அவனுடைய மனதை வந்து தாக்க மாட்டா. ஆரம்பத்தில் இவை போன்ற வாசனைகள் என் உள்ளத்தை வந்து தாக்கலாயின. ஆனால் ஆழ்ந்து ஜபம், தியானம் செய்த பிறகு இப்பொல்லாத வாசனைகள் என் உள்ளத்தினின்று அகன்று பட்டுப்போயின. அவைகள் அகன்றுபட்டுப் போன பிறகு மனத்தூய்மையில் நான் முற்றிலும் நிலைபெற்றவனானேன். உள்ளத்தினின்று காமத்தை அறவே அகற்றுவது சாமானியமான செயலன்று. சாதகன் அதன் பொருட்டுப் பெரிய முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். அத்துடன் ஈசுவர கிருபையையும் அவன் நாடி நிற்கவேண்டும். சுமார் ஆறுமாத காலம் நான் தீவிரமாக ஆத்ம சாதனங்களில் ஈடுபட்டேன். அதன் பிறகு ஏதோ ஒருவித விபரீதமான உணர்ச்சி என் உள்ளத்தில் உருவெடுத்தது. அந்த உணர்ச்சியை நான் சிறிதேனும் ஆமோதிக்கவில்லை. பரநாட்டம் பிடித்தவனாக ஒரு மரத்தடியில் தரையின்மீது வீழ்ந்து வணங்கினேன். கண்ணீரும் கம்பலையுமாக அம்பிகையிடம் நான் செய்த பிரார்த்தனையாவது: 'தாயே, இத்தகைய தகாத எண்ணத்துக்கு உள்ளத்தில் இடம் தருவதுதான் என்னுடைய கதி என்றால் நான் ஒருபொழுதும் அதற்கு உடந்தையாகமாட்டேன். பொல்லாத எண்ணத்துக்கு உள்ளத்தில் இடம் தந்து வாழ்ந்திருப்பதைவிடக் கத்தியால் கழுத்தை அறுத்துக்கொண்டு சாவது மேல்.' இங்ஙனம் நான் பிரார்த்தனை பண்ணிய பிறகே மனத்தூய்மையில் நிலைபெற்றவனானேன்."

பக்தர்களிடம் மேலும் பரமஹம்சதேவர் மொழிந்ததாவது: "மனது காமத்தினின்றும் காசு ஆசையினின்றும் விடுபடுமாகில் அது மனிதன் பெறுகிற பெரிய பேறு ஆகும். பிறகு வேறு எந்த இடைஞ்சலும் வந்து அத்தகைய சாதகனை உலக பந்தபாசங்களில் ஆழ்த்தமாட்டாது. இங்ஙனம் உலக ஆசைகள் அறவே அகன்றுபோனபிறகே ஆத்ம சாதகன் பிரம்மானந்தத்தில் திளைத்திருக்க வல்லவனாகிறான்."

சசிபூஷண் சக்கரவர்த்தி என்னும் மாணாக்கன் அண்மையில் பரமஹம்சதேவரிடம் அடிக்கடி வரலாயினன். அன்னவன் ஈசுவர சந்திர வித்யாசாகரின் கல்லூரியிலே பட்டப் படிப்புக்குப் படித்துக்கொண்டிருந்தான். அவனைக் குறித்துப் பரமஹம்சர் பேசலானார்: "அந்த இளைஞனுக்குச் சிறிது காலம் செல்வத்தைப் பற்றிய எண்ணம் உள்ளத்தில் உதிக்கும். ஆனால் அதி விரைவில் அந்த எண்ணத்தைத் தாண்டி அவன் மேல் நோக்கிச் செல்லுவான். வேறு சில இளைஞர்கள் இருக்கிறார்கள். அன்னவர்கள் உள்ளத்தில் காசு ஆசை சிறிதளவாவது வடிவெடுப்பதில்லை. இங்கு வருகிற இளைஞர்களில் சிலர் விவாகம் பண்ணிக்கொள்ள

மாட்டார்கள். பரத்தின்பொருட்டே மனதை அவர்கள் செலுத்தி வருவார்கள்.

"மானுடன் ஒருவனைப் பந்தபாசத்தில் கட்டுப்படுத்தி வைப்பவை காமமும், காசு ஆசையுமாம். இவ்விரண்டு பந்தங்களிலின்று தன்னை விடுவித்துக்கொண்டவனே பாரமார்த்திகப் பெருநிலையில் ஊறியிருக்கும் பெருமக்களை அறிந்து கொள்ள வல்லவனுகிறுன். ஒரு மானுடன் தான் கையில்எடுத்துச் சென்ற வைரத்தின் விலை என்னவாக இருக்கக்கூடும் என்று கத்தரிக்காய்க் கடைக்காரனைக் கேட்டான். அவன்அந்த வைரத்தை நோட்டம் பார்த்தான். பிறகு மதிப்பும் போட்டான். 'இந்த வைரத்துக்கு நான் இரண்டு கூடைக் கத்தரிக்காய் தருகிறேன். அதற்குமேல் ஒரு காய் கூடத்தரமாட்டேன்' என்றுன்."

எல்லாரும் கொல்லென்று நகைத்தார்கள். இளைய நரேந்திரன் பெரும் சிரிப்புச் சிரித்தான். அதற்குக் காரணம் அதன் உட்பொருள் அவனுக்கு நன்கு விளங்கிவிட்டது. பரமஹம்சதேவர் கணித்ததாவது: 'இந்த இளம் நரேந்திரனுக்கு ஒரு கூற்றின் உட்பொருளை அறிந்துகொள்ளும் திறமை நன்கு அமைந்திருக்கிறது. நம்மை ஆட்கொண்ட நிர்வாணி நுண்ணறிவே வடிவெடுத்தவர். எப்பொருளை என்ன பாங்கில் ஆராய்ச்சி பண்ணினுலும் அதில் அடங்கியிருக்கும் கருத்தை நேரே கிரஹிக்கும் திறமை அவரிடத்து நன்கு அமைந்திருந்தது. இத்தகைய அமைப்பைத் தெய்வ சம்பத் என்றே சொல்லலாம். பகவத்கீதை, பாகவதம் ஆகிய நூல்களின் அடிப்படைக் கோட்பாட்டை அவர் இரண்டொரு சொற்களில் சொல்லி முடித்து விடுவார்.

"சின்னஞ்சிறு வயதிலிருந்தே காமத்துக்கும் காசு ஆசைக்கும் அடிமைப்படாது வாழ்ந்திருப்பது பெறுவதற்கரிய பேருகும். ஜன்மாந்திரங்களில் செய்த தவத்தின் விளைவாகவும் தெய்வ அனுக்ரஹத்தின் வாயிலாகவும் யாரோ ஒரு சிலர்க்குத்தான்இத்தகைய தூய மனநிலை பிறப்பிலிருந்தே வந்தமைகிறது. இத்தகைய தூய மனநிலை வாய்க்கப்பெருதவர்கள் எல்லாம் சாமானியமான உலக மக்களாகின்றனர். கடவுளுக்குப் படைப்பதற்குப் பொருத்தமான கனி யாது என்னும் கேள்வி வருகிறது. காக்கை, குருவி கொத்திய கனிகளைத் தெய்வத்துக்குப் படைப்பது பொருந்தாது. சாதாரண மக்களே அத்தகைய கனிகளை அருந்தத் தயங்குகின்றனர். கடவுளுக்குப் படைக்கும் பொருள் யாண்டும் சுத்தமானதாயிருக்கவேண்டும். அதே விதத்தில் ஈசனுடைய அடியார்கள் பிறவியிலிருந்தே தூயவர்களாக வாழ்ந்துவருகிறுர்கள்.

"இனி, மக்களுள் இன்னெரு கூட்டத்தார் இருக்கின்றனர். அவர்கள் இளம் பிராயத்தில் புல்லிய செயல்கள் பலவற்றில் ஈடுபடுகின்றனர். பின்பு விருத்தாப்பியத் தசையில் கடவுள் வழிபாட்டிலும் ஆத்மசாதனங்களிலும் ஈடுபடுகின்றனர். இப்படிச் செய்வதில் சிறிது நலன் உண்டு. பிறவி முழுதிலுமே பொல்லாங்கில் ஈடுபடுகிற கூட்டத்தைவிட இக்கூட்டம் மேலானது என்று மொழியலாம்."

ஒரு பிரமுகருடைய தாயார் கேள்வி ஒன்றைக் கிளப்பினர். "சமுதாயத்தில் விலைமாதர்கள் இருக்கின்றனர். அன்னவர்களுக்கு எவ்விதத்திலாயினும் விமோசனம் உண்டா?"

பரமஹம்சர் கொடுத்த விடையாவது: "ஆம். அவர்களும் விமோசனம் அடையக் கூடும். அதற்கேற்ற நிபந்தனை உளது. வெறும் மேற்போக்கான பிரார்த்தனை பண்ணுவது போதாது. தாங்கள் செய்த தீய செயலைக் குறித்துக் கசிந்துருகி வருந்துதல் வேண்டும். தெரியாமல் செய்த குற்றத்தை உள்ளூர உணருதல் வேண்டும். மீண்டும் அதுபோன்ற தீய செயலில் தாங்கள் ஈடுபடுவதில்லை என்ற தீவிரமான தீர்மானம் உள்ளத்தில் உதிக்கவேண்டும். இங்ஙனம் அறவே மனம் திருந்தியமைந்தவர்களும் விமோசனம் அடைவார்கள். இறைவனுடைய நாமத்தை நா சொல்லுகிறது. ஆனுல் உள்ளத்தில் ஒருவிதமான உணர்ச்சியுமில்லை. இப்படிச் சொல்லுதற்கும் கிளிப்பிள்ளை பேசுதற்கும் எந்தவிதமான வித்தியாசமுமில்லை. உள்ளத்தில் உணர்ச்சி ததும்பி எழவேண்

டும். கண்ணீரும்கம்பலையுமாகப் பரமனிடத்துப் பிரார்த்தனே பண்ணவேண்டும். உருகி இளகிப்போன இரும்புக்குப் புதிய வடிவுதரலாம். அதற்கு நிகராக 'வல்வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே' என்னும் கோட்பாட்டுக்கிணங்கப் பரம்பொருளிடத்து உருகிப் பிரார்த்தனே பண்ணுகிறவர்கள் மனத்தகத்துப் புதிய சொரூபம் எடுக்கின்றனர்.''

அப்போது இன்னிசைக் கருவிகளோடு கூடிய சங்கீதம் துவங்கியது. அதைப் பாடியவர் சங்கீத வித்வானுக இருந்தார். அது அவருக்குத் தொழிலாகவும் இருந்தது. கௌராங்கதேவர் துறவறம் பூணுவதைப் பற்றியதாக அவருடைய பாடல் அமைந்திருந்தது. கௌராங்கதேவர் கேசவபாரதியிடமிருந்து சந்நியாசம் ஏற்றுக்கொண்டார். பாடலின் உட்பொருள் வருமாறு :

'கேசவ பாரதியாருடைய குடிசையிலே நான் கண்ட காட்சியைக் குறித்துக் கூறுவது யாது என்பது எனக்கு விளங்கவில்லை. கௌராங்க தேவர் தம்முடைய தெய்விக இன்னியல்புக்கேற்பத் தாரை தாரையாகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார்.'

இப்பாடலைக் கேட்டதும் பரமஹம்ச தேவருக்கு ஆனந்தப் பரவச சமாதி கூடியது. மற்றொரு பாட்டில் பிருந்தாவனத்திலே கோபி ஒருத்தி கிருஷ்ணனிடமிருந்து பிரிந்திருந்ததன் விளைவாகப் பட்ட துயரத்திற்கு விளக்கமாக அமைந்திருந்தது. கண்ணனைத் தேடி மாதவி புஷ்பச் சோலை ஒன்றில் அவள் அலைந்து திரிந்தாள்.

''மாதவி பூஞ்சோலையே, என்னுடைய தூய அன்புக்கு இலக்காக இருக்கும் கண்ணனை என்னிடம் திருப்பி ஒப்படைத்து விடுவாயாக. எனக்கு யாண்டும் இன்பமூட்டும் கண்ணனைத் திருப்பித் தந்துவிடுவாயாக. அவன் எனக்கே உரியவன். அத்தகையவனை நீ மறைத்து வைத்திருப்பது பொருந்தாது. தயவு கூர்ந்து அவனைத் திருப்பி என்னிடம் தந்துவிடு. இந்த நல்ல காரியத்தை நீ செய்து வைப்பாயாகில் நான் எப்பொழுதுமே உனக்கு அடிமையாயிருப்பேன். அவன் என் உயிருக்கு உயிர். தண்ணீர் இல்லாது மீன் எப்படி வாழமாட்டாதோ அங்ஙனம் கண்ணனைப் பிரிந்து வாழ்ந்திருக்க எனக்கு இயலாது. என் உயிருக்குயிராயிருக்கும் கண்ணனை உன்னுடைய ஹிருதய கமலத்தில் மறைத்து வைத்திருக்கிறாய். நான் கபடமேதும் அறியாத பிருந்தாவனச் செல்வி. என்னை ஏமாற்றி என் உயிருக்குயிராய் இருப்பவனை நீ கவர்ந்துகொண்டு போயிருக்கிறாய். எனக்கு இன்பம் நல்கும் கண்ணனை நாடி நான் உயிர் துறக்கும் நிலையில் இருக்கிறேன். அவனைப் பிரிந்திருந்து இனி ஒரு கணமேனும் வாழ்ந்திருக்க எனக்கு இயலாது. என்னுடைய மாதவனைக் காணாவிடில் நான் உயிர் துறப்பேன். தயை கூர்ந்து என் உயிருக்குயிராயிருக்கும் கண்ணனை என்னிடம் திருப்பிக்கொடுத்துவிடு.''

பரமஹம்சதேவர் இடையிடையே அப்பாடகருடன் கூடித் தாமும் பாடிவந்தார். சிற்சில இடங்களில் பாடலில் அமைந்திருந்த கருத்துக்களைத் தம் போக்கில் சிறிது மாற்றியமைத்தும் பாடலாயினர்.

பாடலில் தொடர்ந்து வந்த கருத்து ஒன்றுவது: 'மதுராபுரி இங்கிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது? அந்த மதுராபுரியில் தான் என் உயிர்க்குயிரான கண்ணன் வசித்து வருகிறான்.'

இத்தகைய உள்ளத்தை உருக்குகிற கருத்து வாய்ந்த பாடலைப் பாடிக்கொண்டிருக்கையில் பரமஹம்ச தேவருக்குச் சமாதி நிலை கூடியது. அவருடைய மேனி வார்த்த விக்ரஹம் போன்று அசையாதிருந்தது. அந்தப் பரவச நிலையில் அவர் நெடுநேரம் மூழ்கியிருந்தார்.

படிப்படியாக அவருடைய மனது சமாதி நிலையினின்று இவ்வையக வியவஹார நிலைக்குக் கீழே இறங்கி வந்தது. ஆயினும் அவருடைய மனதில் பெரும் பகுதி பரத்தில் ஈடுபட்டதாகவே இருந்தது. இடையிடையே பேச்சுவார்த்தைகள் அவருடைய வாயினின்று வெளியே வருவனவாயின. சில வேளைகளில் அவர் தமக்குத் தாமே பேசிக்கொண்டார். வேறு சில வேளைகளில் தாம் வழிபடும் தெய்வமாகிய அன்னை பராசக்தியிடம் தம்முடைய கருத்துக்களைச் சமர்ப்பித்தார்.

# எந்நாள் கண்ணி

( தாயுமானவர் இயற்றியது ) உ

8-11 விண்ணவன் தாள்என்னும் விரிநிலா மண்டபத்
[தில்
தண்ணீர் அருந்தித் தளர்வுஒழிவது எந்நாளோ.

உலக நடைமுறையில் 'வீடுபெற நில்' என்பது கோட்பாடு. ஜீவனோபாயத்துக்கு வேண்டிய தொழில்களை நாடிப் பகல்பொழுதெல்லாம் மக்கள் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று பாடுபட்டு ஏதோ பொருளைச் சம்பாதித்துக்கொண்டு பொழுது முடியும் பொழுது அவரவர் வீட்டுக்கு வந்து சேருகின்றனர். அதில் அவர்களுக்கு ஒருவித அகமகிழ்வு உண்டாகிறது. நிம்மதியாக இரவைத் தங்கள் வீட்டில் கழிக்கின்றனர். ஆனால் இங்ஙனம் அன்னவர்கள் வசித்து வரும் வீடு நிரந்தரமாக அவர்களுக்குச்சொந்தமானதன்று. பிரபஞ்ச வாழ்வே அநித்தியமாயிருக்கும்பொழுது இப்பிரபஞ்சத்தின்கண் எந்தப் பகுதியும் யாருக்குமே சொந்தமானதன்று. எக்காரணத்தை முன்னிட்டும் மனிதன் ஒருவன் எந்தப் பெருநிலையினின்று பெயர்த்து எடுக்கப்படமாட்டானோ அதுவே அவனது சொந்தமான வீடாகிறது. பரமனது சந்நிதியே உயிர்களனைத்திற்கும் சொந்தமான இருப்பிடமாகிறது. அப்பரமனை விட்டுப்பிரிந்து பிரபஞ்ச வாழ்க்கையில் உழன்றுகொண்டிருப்பதற்கிடையிலும் உயிர்களனைத்திற்கும் நிரந்தரமான இருப்பிடமாயிருப்பது இறைவனுடைய சாந்நித்தியமேயாம்.

சிதாகாசத்திலே இப்பிரபஞ்சம் இடம் பெற்றிருக்கிறது. ஆதலால்தான் பிரபஞ்ச வாழ்வு என்னும் இன்னல்களுக்கிடையிலும் உயிர்வகைகளனைத்தும் ஒருவித ஓய்வு பெற்று நிம்மதியாக வாழ்ந்து வருகின்றன. அங்ஙனம் பிரபஞ்ச வாழ்வில் பெறுகிற இன்பம் இடையிடையே தடைப்படுகிறது. தடைப்படுவதால்தான் உயிர்வகைகளுக்குப் பிரபஞ்சவாழ்வில் விரக்தி வருகிறது. அதைத் தொடர்ந்து பரநாட்டமும் தானாக வந்து வாய்க்கிறது. பரநாட்டத்தில் கருத்தைச் செலுத்துவதற்கேற்பப் பரமானந்தமும் தானாகவே வடிவெடுக்கின்றது. பிரபஞ்ச வாழ்விலுள்ள பரந்த நிலா வெளிச்ச இன்பத்தோடு அப்பரமானந்தம் இங்குச் சீர்தூக்கப்படுகிறது. இன்பத்தை நாடிக் காலமெல்லாம் உலகெல்லாம் தேடியலைகிற உயிர்வகைகளுக்கு யதாஸ்தானமாயிருப்பது பரமன் எனப் பகரப்பெறும் சிதாகாசமாம். அதை நான் விரைவில் அடைந்து இன்புற்று இருப்பேனாக என்பது இக்கண்ணியின் கருத்து.

8-12. வெய்யபுவி பார்த்து விழித்துஇருந்த அல்லல்
[அறத்
துய்ய அருளில் துயிலுநாள் எந்நாளோ.

வெய்ய-வெப்ப; புவி-பூவுலகம்; துய்ய—நித்திரை கொள்ள.

பிரபஞ்ச வாழ்க்கை யாண்டும் துன்பம் நிறைந்தது. ஆனால்இன்பம் தருகிற இனிமையான உலகம் போன்று காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆதலால்தான் உயிர்வகைகள் அதிலே கட்டுண்டு கிடக்கின்றன. நாட்டத்துக்கேற்றவாறு சிறிது இன்பமும் இந்நிலவுலகிலே வந்து வாய்க்கிறது. தினையளவு இன்பம் பெறுவதற்கு ஈண்டு மனிதன் பனையளவு பாடுபடுகிறான். நிலையற்ற நிலவுலகிலே நிலையற்ற இன்பத்தை நாடுவது வீண் என்னும் விவேகம் நாளடைவில் மனிதனுக்கு வந்து வாய்க்கிறது. அந்த விவேகத்தின் வலிவுக்கேற்றபிரகாரம் பிரபஞ்ச வாழ்வில் விரக்தியும் மனிதனுக்கு வந்து அமைகிறது. இதில் வைத்துள்ள பற்றுதலும் மயக்கமும் ஒழிதற்கேற்பப் பரமானந்தம் தானாகவே அவனுக்குச் சொந்தமாகிறது. அது தேடிப் பெறுகிற செல்வம் அன்று. எப்பொழுதுமே தனக்குச் சொந்தமாக அது அவனிடத்திலிருந்து வருகிறது. பிரபஞ்ச வாழ்வில் பற்று ஒழிதற்கேற்ப அதை அவன் உணர்கிறான். அறவே பற்று நீங்குமிடத்துத் தனக்கு நிஜநிலையாக உள்ள பரத்தின் மகிமையைச் சாதகன் அனுபூதியில் அறிய வருகிறான். அத்தகைய அனுபூதி சாதகன் ஒருவனுக்கு அதிவிரைவில் வ்ந்து அமையவேண்டும் என்பது இக்கண்ணியில்

அமைந்துள்ள கருத்து ஆகும்.

**8-13.** வெய்ய பிறவிவெயில் வெப்பமெலாம் [விட்டுஅகல
ஐயன்அடி நிழல் அணையுநாள் எந்நாளோ.

இன்பம் தருவதுபோன்று மையல் ஊட்டித் துன்பத்தில் மனிதனை ஆழ்த்துவது இப் பிரபஞ்ச வாழ்வின் போக்காகும். ஆனால் மனிதன் படைத்திருக்கும் மையல் வியப்புக் குரியதாம். அதை ஒட்டகத்தின் பாங்கோடு ஒப்பிடலாம். ஒட்டகம் என்னும் விலங்குக்கு முள் செடியைத் தின்பதில் மகிழ்வுமிக உண்டாகிறது. உதட்டில் முள் தைத்துக் கொண்டு ரத்தம் சொட்டுகிற நிலையிலும் முள் செடியைத் தின்பதை அவ்விலங்கு விட்டொழிப்பதில்லை. அதே விதத்தில் பிரபஞ்ச வாழ்வினின்று மனிதன் ஓயாது மொத்துண்டு கிடக்கிறவேளையிலும் பிரபஞ்சப் பற்றுதலை அவன் விட்டொழிப்பதில்லை. அதினின்று அவனுக்குத் தாற்காலிகமாக வந்து வாய்க்கிற இன்பத்தை நாடியே அவன்யாண்டும் போய்க்கொண்டிருக்கிறான். நிழலின் அருமை வெயிலில் வாடுகிறவனுக்கு மட்டுமே விளங்குகிறது என்பது உலகம் அறிந்த விஷயமாம். அதே விதத்தில் பரநாட்டத்தினின்று வடிவெடுக்கின்ற பேரானந்தத்தின் மகிமை பிரபஞ்ச வாழ்வில் அடியுண்டு கிடப்பவனுக்கே நன்கு விளங்குகிறது. போதும் இப்பிரபஞ்ச வாழ்வின் மயக்கம் எனத் தெளிவுற்றுப் பரநாட்டத்தில் தீவிரமாக ஈடுபடுகிறவனுக்கே அதன் மஹிமை நன்கு விளங்குகிறது. அத்தகைய பேறு அதிவிரைவில் தனக்கு வாய்க்கவேண்டுமென்பது இக்கண்ணியின் உட்பொருள்.

**8-14.** வாதைப் பிறவி வலைகடலை நீந்தஐயன்
பாதப் புணைஇணையைப் பற்றுநாள் எந்நாளோ.

வாதை-துன்பம். புணை-கப்பல்.

உயிர்களனைத்தும் பிறப்பெடுப்பதில்பற்று மிக வைத்திருக்கின்றன. அங்ஙனம் பிறப்பெடுப்பதில் அமைகிற பயன் மிகச் சிறிதேயாம். அதனால் விளைகிற துன்பத்துக்கோ அளவில்லை. பிரபஞ்ச வாழ்க்கை முழுதுமே துன்பம் மிக நிரம்பப் பெற்றது. ஆயினும் அதில் உண்டாகிற சிறிய இன்பத்தை முன்னிட்டு இத்தனை உயிர்களும் துன்பத்தைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளுகின்றன. அதற்குச் சான்று ஒன்று காண்போம். வேதனைகளுள் பிரசவ வேதனை மிகக்கொடியது. அந்த வேதனைக்கு உட்படுகிற மாது பிள்ளை பெறுவது அதோடு போதும் என்கிற முடிவுக்கு வருகிறாள். ஆயினும் அத்தீர்மானம் நிலைத்ததன்று. மற்றும் இரண்டோர் ஆண்டில் அடுத்த மகப்பேறு அவளுக்கு வந்து வாய்க்கிறது. இதுவே உலகின் போக்கு ஆகும். அரிதிலும் அரிதாகப் பக்குவப்பட்டிருக்கிற சில ஆத்மாக்கள் பிறவி வேதனையினின்று அறவே தங்களை விலக்கிக்கொள்வதற்கேற்ற வாழ்க்கையைக் கொண்டு செலுத்துகின்றனர்.

செய்யும் செயலுக்கேற்ற விளைவு அமையும். முயற்சி ஒன்று இருக்க அதற்கு மாறாக விளைவு அமையாது. கிழக்கே போக வேண்டிய மனிதன் வடதிசையை நோக்கி நடந்து போவானாகில் குறிப்பிட்ட இடத்தை அவன் போய்ச்சேரமாட்டான். காரணத்துக்கேற்ற காரணம் அமைவதே இயற்கையின் பாங்கு ஆகும். பிறவி வேண்டாம் எனத் தீர்மானிப்பவன் உலகப்பற்றை ஒழித்தல் வேண்டும். உலகப்பற்றை ஒழிக்காது பிறவி வேதனை வேண்டாமென முறையிடுதலில் பயனில்லை.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு என்பது கோட்பாடு.

தெய்வப்பற்று ஓங்குதற்கேற்ப உலகப் பற்று தானாகவே கைநழுவிப் போகிறது. வெறுமனே உலகப்பற்று போக வேண்டுமென்று விவாதித்துக் கொண்டிருப்பவனுக்கு அது அகலாது. அதற்கு நேர்மாறாகத் தீவிரமாகத் தெய்வப் பற்றை மனிதன் வளர்ப்பானாகில் பிறவித் துன்பத்தையும் அதைத் தொடர்ந்து வருகிற எல்லா விதத் துன்பங்களையும் அது நீக்குகிறது. ஆகவே உலக வாழ்வில் வருகிற துன்பம் என்னும் கடலைக் கடப்பதற்கு ஆத்மசாதகன் தெய்வப்பற்று என்னும் கப்பலில் ஏறிக் கொள்ளவேண்டும். ஆகவே உலகில் உண்டாகிற துன்பங்களனைத்துக்கும் நிவர்த்தியை உண்டுபண்ணத் தெய்வப்பற்று ஒன்றே உற்ற உபாயம் என்னும் கோட்பாடு இக் கண்ணியில் அமைந்திருக்கிறது.

# பலவீனமும் பகைமையும்

( சுவாமி விவேகானந்தர் )

ஒற்றுமையே சிறந்த வலிமை என்பது கோட்பாடு. நம்மவர்களுக்கிடையில் ஒற்றுமை இல்லை. பலர் ஒன்று சேர்ந்து சங்கம் அமைத்துப் பொதுக்காரியங்கள் செய்யும் இயல்பு நம் நாட்டவர்களுக்கு இல்லை. இக்குறைபாடு நம் நாட்டில் பல கேடுகளைத் தோற்றுவித்துள்ளது. சுயநலம் உடையவர்களாக அவரவர்க்குரிய காரியங்களைச் செய்வதில் ஊக்கமாக இருக்கின்றார்கள். ஆனால் பலரும் ஒன்று சேர்ந்து ஒரு பொதுக்காரியம் செய்வதில் பின்வாங்குபவர்களாக இருக்கிறார்கள். பொது ஸ்தாபனங்கள் பொதுநலக் காரியங்களுக்காக அமைந்துள்ளன. பொது ஸ்தாபனங்கள் ஒன்றுபட்டுப் பொதுக் காரியங்களில் ஈடுபடவேண்டும். பொது ஸ்தாபனம் நன்கு இயங்கிவர, அந்த ஸ்தாபனத்தில் உள்ளவர்களுக்கிடையில் கீழ்ப்படியும் தன்மை இருக்கவேண்டும்.

நம் நாட்டுக்கு இரண்டு சாபக்கேடுகள் இருக்கின்றன. ஒன்று நம்மிடத்திலுள்ள பலவீனமாகும். மற்றொன்று நம்மிடத்திலுள்ள வெறுப்புணர்ச்சி ஆகும். நெஞ்சில் ஈரமில்லாதவர்களாக இருக்கின்றோம். ஏழைகளுக்கு இரங்கவேண்டுமென்று உபதேசம் செய்வோம். ஆனால்செயலளவில்அவர்களுக்கு ஓர் உதவியும் செய்யமாட்டோம். இதுதான் நம்மிடமுள்ள குறைபாடாகும். ஜாதிப் பிரிவுகளும், மதப்பிரிவுகளும் நம்மிடத்தில் ஏராளமாக இருக்கின்றன. அவைகளை முன்னிட்டு நம்மிடத்தில் ஒற்றுமை குலைந்து போகக் கூடாது. பேரன்பு கொண்டிருப்பது நம் இலட்சியம். உயிர்கள் அனைத்தின் நலத்துக்கு நாம் பாடுபடவேண்டும். எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க நம் உள்ளம் விரும்பவேண்டும். சிற்றுயிர் முதல் பேருயிர்வரை எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டவேண்டும். தோன்றியுள்ள அனைத்தும் இறைவன் தோற்றங்கள் என்று வேதங்கள் போதிக்கின்றன. இப்போதனையைக் கடைப்பிடிக்க வலிமை வேண்டும். பலஹீனனால் இப்போதனையைக் கடைப்பிடிக்க முடியாது. வலியவர்கள் மெலியவர்களைக் காப்பாற்றினால் அது வலிமையாகும். நம் சரீரத்தின் அவயவங்கள் சரீரத்திற்கு அன்னியமானவைகள் அல்ல. அங்ஙனம் உயிர்கள் இறைவனுக்கு அன்னியமானவைகள் அல்ல. சரீரத்தில் உள்ள ஓர் அவயவத்துக்கு நோய் வந்துவிட்டால் அது சரீரம் முழுவதையும் பாதிக்கும். சரீர உணர்ச்சி படைத்தவர்கள் இதனை நன்கு உணர்கிறார்கள். உயிர்கள் அனைத்தும் இறைவன் சொரூபம் என்று உணர்கிறவர்கள் ஓர் உயிர்க்குத் துன்பம் வந்துவிட்டால் அதைப் போக்க வேண்டும் என்ற உணர்வு அவர்களிடத்து உண்டாகிறது. உயிர்களுக்கிடையில் வேற்றுமைகள் இருக்கின்றன. மனிதர்களுக்கு இடையிலேயும் வேற்றுமைகள் இருப்பதைக் காண்கின்றோம். சிலர் வறுமையில் உழல்கின்றார்கள். சிலர் பொருள்படைத்தவர்களாக இருக்கின்றார்கள். சிலர் அறிஞர்களாக இருக்கின்றார்கள். சிலர் அறிவிலிகளாக இருக்கின்றார்கள். சிலர் நல்லவர்களாக இருக்கின்றார்கள். சிலர் கெட்டவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் இவர்கள் யாவரும் ஒரு பிரம்மத்தின் தோற்றங்களே ஆவார்கள். பருகுவதற்கேற்ற நிலையில் நீர் இருக்கிறது. புனிதத்தை வழங்கும் நிலையில் கங்கை நீர் இருக்கிறது. கை, கால்கள் அலம்புவதற்கு ஏற்ற நிலையில் உள்ள நீர் இருக்கிறது. கையில் தொடுவதற்கும் தகுதியற்ற சாக்கடை நீர் இருக்கிறது. ஆனால் இவையாவும் நீரின் பல நிலைகளாகும். இதை ஞானிகள் உணர்கிறார்கள். உயிர்கள் யாவும் இறைவனின் தோற்றங்கள் என்பதை உணர்பவர்கள் ஞானிகள். அந்த உணர்வு ஓங்குகின்ற அளவு நாம் வலிமையும் பேரன்பும் உடையவர்களாக மாறி அமைகின்றோம்.

உயிர்களனைத்தும் இறைவன் சொரூபம் என்று உணரும் உள்ளத் திட்பத்தையும் பேரன்பையும் நம்மிடம் யாண்டும் வளர்த்து வருவோமாக.

# சுவாமி விவேகானந்தரின் கடிதம்

(சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் வெற்றியடைந்த செய்தியை அறிந்த சென்னை இந்துக்கள் விவேகானந்தருக்கு அளித்த பாராட்டுரைக்கு அவர் எழுதிய பதில் கடிதம்)

[410 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஓர் அறையில் இருள் இருக்குமானால் ‘இருள், இருள்’ என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே இருந்தால் அந்த அறையிலிருந்து இருள் போய்விடாது. அறைக்குள் தீபத்தைக் கொண்டுவந்தால் இருள் மறைந்துவிடும். தன்னளவில் இருப்பில்லாதது, அநித்தியமானது, குறைபாடுடையது அழிந்தே தீரும். சத்பொருள் இருக்கிறேன் என்ற உணர்வுடையது, நித்தியமானது, யாண்டும் அழியாதது. “நாம் இருக்கிறோம்; கடவுள் இருக்கின்றார்; நாம் கடவுள்; நாம் சிவசொரூபம்” என்று சொல்வோமாக. இத்தகைய உணர்வில் நம் வாழ்வு நிகழ்ந்துகொண்டு இருக்குமாக. நாம் ஜடப்பொருள் அல்லர்; நாம் அறிவு சொரூபம். நாமமும் ரூபமும் உடையவைகள் நாமத்தையும் ரூபத்தையும் இழந்துவிடும். நாமரூபம் அழிந்துபோனாலும் வஸ்து அழியாது. சுருதிகள் இந்தச் சாசுவத உண்மையைத்தான் போதிக்கின்றன. இவ்வுண்மையில் தெளிவு ஏற்பட்டுவிடுமானால் அறியாமை என்கின்ற இருள் மறைந்துவிடும். வேதாந்தம் என்னும் சிம்மம் கர்ஜிக்கட்டும். அற்ப ஆசைகள் என்னும் நரிகள் ஓட்டட்டும். வேதாந்த உண்மைகளைப் பரப்புங்கள். அதனால் நல்விளைவு தானாகவே உண்டாகும். ரசாயனப் பொருள்களை ஒன்று சேர்ப்போம். படிகம் தானாகவே உருவாகும். ஆன்ம சக்தியை எழுப்புங்கள். ஆன்ம சக்தியை இந்தியா முழுவதும் விழிப்படையச் செய்யுங்கள். தேவையானவையெல்லாம் தாமாகவே வந்து சேரும். இந்தியாவில் ஆன்மீக உணர்வு உறங்கிக்கொண்டிருக்கிறது. அவ் ஆன்மீக உணர்வை விழித்து எழும்படி செய்தால் இந்தியா விழிப்படையும். ஆன்மீக உணர்வு விழித்து எழுந்திருந்த காலமெல்லாம் இந்தியா பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரியதாகவிருந்தது. இப்பொழுது ஆன்மீக உணர்வு மங்கிக்கிட்க்கிறது. அதைப் பிரகாசமுடையதாகச் செய்ய வேண்டும்.

உன்னிடத்திலுள்ள தெய்வத்தன்மையைத் தோற்றத்துக்குக் கொண்டு வா. எல்லாப் பொருள்களிடத்தும் சமத்துவத் தன்மையை அப்பொழுது காண்பாய். வேதத்தில் இந்திரனைப்பற்றியும் விரோசனனைப் பற்றியும் கூறியிருப்பதை ஞாபகப்படுத்திக்கொள். அவ்விருவருக்கும் தெய்வத் தன்மை எடுத்துப் புகட்டப்பட்டது. அசுரனாகிய விரோசனன் சரீரத்தைத் தெய்வமாகப் பொருள்படுத்தினான். தெய்வத் தன்மை பொருந்திய இந்திரன் ஆத்மாவைத் தெய்வமாகப் பொருள்படுத்தினான். விரோசனன் போன்று மற்ற நாட்டவர்கள் ஜடப் பொருளாகிய இயற்கையின் மீது கருத்துச் செலுத்தி வருகின்றனர். இயற்கைக்கு அப்பால் உள்ள இறைவனைப்பற்றி அவர்கள் அறியாதவர்களாகவிருக்கின்றார்கள். நீங்கள் யாவரும் இந்திரனுடைய குழந்தைகள். நீங்கள் தேவர்கள் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். சரீரம் உங்களுக்குத் தெய்வமன்று. ஜடப்பொருள் உங்களுக்குத் தெய்வமாகாது. ஜடமாகிய இயற்கைக்கு அப்பாலுள்ள இறைவன் உங்களுடைய லக்ஷிய புருஷராவார். அவ் இறைவனைப் பற்றிய உண்மையை அறிந்து இறை சொரூபமாவது உங்களுடைய குறிக்கோளாகும்.

இந்தியா வீறுகொண்டு எழுந்திருக்க வேண்டும். மிருகபலத்தை ஒடுக்கி ஆன்ம பலத்துடன் எழுந்திருக்கட்டும். ஒழிக என்னும் முழக்கம் வேண்டாம். அன்பு, சாந்தி என்னும் ஒலிகள் கிளம்பட்டும். தியாக உணர்வு ஓங்கட்டும். எளிய வாழ்வில் எழுச்சி எழட்டும். நீ பலஹீனன் என்று ஒரு பொழுதும் சொல்லாதே. நீ ஆன்ம சொரூபம். ஆன்மா சர்வசக்தி வாய்ந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திருவடித் தீட்சை பெற்றதும் இளைஞர்கள் சிலர் ஆன்மீக எழுச்சி பெற்று எழுந்

தத்தைப் பாருங்கள். அவர்கள் வடக்கே இமயத்திலிருந்து தெற்கே கன்னியாகுமரிவரையும், கிழக்கே அஸ்ஸாமிலிருந்து மேற்கே சிந்துவரையிலும் ஆன்மீகத்தைப் போதிக்கிறார்கள். இருபதினாயிரம் அடி உயரமுள்ள இமாலயத்தில் உறைபனியின்மீது நடந்து சென்று வீரத்துடன் அவர்கள் திபேத்துக்குள் நுழைந்தார்கள். பிக்ஷையாகக் கிடைத்த உணவைமட்டும் ஏற்றுக்கொண்டார்கள். கந்தலாடை அணிந்து மேனியை மறைத்திருந்தார்கள். அவர்களை அரசாங்கப் போலீசார் பின் தொடர்ந்து சென்று கைது செய்து காவலில் வைத்தனர். அவர்கள் குற்றமற்றவர்கள் என்பதை அரசாங்கம் அறிந்ததும் அவர்களை விடுதலை செய்தனர். இங்ஙனம் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்கள் உடலைப் பற்றியோ உணவைப்பற்றியோ கவலைப்படாது இறைசிந்தனையில் மூழ்கியவர்களாக நேர்மையான வாழ்வு வாழ்ந்து வந்தார்கள். எளிமையும் தூய்மையும் அவர்கள் வாழ்வில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்கள் எண்ணிக்கையில் இருபதாக இருப்பவர்கள் எதிர்காலத்தில் இரண்டாயிரம் பேர்களாக ஆகவேண்டும். இந்திய இளைஞர்களே! உங்கள் நாட்டுக்குத் தியாக உள்ளம் படைத்த இளைஞர்கள் தேவைப்படுகிறார்கள். உலகுக்கும் அத்தகையவர்கள் தேவைப்படுகிறார்கள். உங்களிடத்திலுள்ள தெய்விக இயல்பை விழித்தெழச் செய்யுங்கள். தெய்விக இயல்பு உங்களிடம் விழித்தெழும் பொழுது நீங்கள் பசியையும், தாகத்தையும், வெப்பத்தையும், குளிர்ச்சியையும் பொறுத்துக்கொள்ளும் ஆற்றல் பெறுவீர்கள். வாழ்க்கைக்குரிய எல்லா வசதிகளும் பொருந்திய சொகுசான அறையில் அமர்ந்து கொண்டு சமயத்தைப் பொழுதுபோக்காக வைத்துக்கொண்டு இருப்பது பிற நாடுகளுக்குப் பொருந்தும். ஆனால் இந்தியாவுக்கு அது உதவாது. இந்தியா உண்மையான சமய தத்துவத்தை உபதேசிக்கவேண்டும். போலிச் சமயம் உதவாது. தியாகம் தான் இந்தியாவின் லட்சியம். தியாகத்தின் மூலமாகவே நீ பெரியவனாகவேண்டும். தியாகத்தாலன்றி அரிய பெரிய செயல் எதையும் சாதிக்க முடியாது. இந்த உலகைச் சிருஷ்டி செய்வதற்காகப் பரம்பொருள் தம்மையே தியாகம் செய்துகொண்டிருக்கிறார். உலக சுகத்தைத் துச்சமென ஒதுக்கித் தள்ளு. ஆடம்பர வாழ்வை அறவே அகற்றிவிடு. பேர், புகழ், பதவி முதலியவற்றை நாடாதே. உன் வாழ்க்கையையே தியாகம் செய்ய ஆயத்தமாயிரு.

இப்பிறவிக் கடலைக் கடப்பதற்கு மானுட வாழ்வு ஒரு பாலம் போன்று அமையட்டும். நல்ல சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டு. எந்தக் கட்சியையும் சாராதே. என்ன கொடி பிடிக்கவேண்டுமென்ற கவலை உனக்கு வேண்டாம். சிவப்புக்கொடியா, பச்சைக்கொடியா, நீலநிறக்கொடியா என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்காதே. எல்லா நிறங்களையும் சேர்த்து நிறமற்ற ஒரு வெள்ளைக்கொடியை உண்டாக்கு. அது அன்பின் சின்னமாக இருக்கட்டும். உன் கடன் பணிசெய்து கிடப்பது. விளைவு தானாகவே உண்டாகும். உன்னுடைய தெய்வத்தன்மைக்குச் சமுதாய அமைப்புத் தடையாக நிற்குமானால் உன்னுடைய ஆன்மீகச் சக்தியால் அத்தடை விலகிப் போய்விடும். ஆன்மீகச் சக்தியை எதிர்த்து எந்தச் சக்தியும் நிற்க முடியாது. ஆன்மீகத்துக்குத் தடைபோட எதற்கும் இயலாது. நாம் ஒவ்வொருவரும் ஆன்மீகச் சக்தியுடையவர்களாகவிருந்து, நம் நாட்டை ஆன்மீகச் சக்தியுள்ள நாடாக ஆக்க வேண்டும். எதிர்காலத்தைப்பற்றி நான் நினைக்கவில்லை. அதைப்பற்றி நான் கவலைப்படவும் இல்லை. ஆனால் நான் ஒரு காட்சியைத் தெளிவாகக் காண்கிறேன். பழங்கால இந்தியா மீண்டும் எழுச்சியடைகின்ற காட்சியைக் காண்கின்றேன். பாரத மாதா இதுவரையிலும் அடைந்த மகிமைகளையெல்லாம்விட மேலான மகிமையுடன் அரியாசனத்தில் அமர்ந்திருக்கும் காட்சியைக் காண்கின்றேன். பாரதமாதா உலகுக்கு அமைதியையும் ஆசியுரையையும் பிரகடனம் செய்வாளாக. உங்கள் அன்பிலும் உழைப்பிலும் நான் என்றும் பங்கு கொள்வேன்.

(முற்றும்)

# ஜயதேவர் சரிதம்

(424ஆம் பக்கத் தொடர்ச்சி)

''குருபக்தி உடையவனுகவும், சாதுக்கள் சங்கத்தைச் சார்ந்தவனுகவும், சதா தான் பிரம்மம் என்று மனனம் செய்து சரீர உணர்வை ஒழித்துச் சங்கல்ப விகல்பங்களை அழித்து அகமுகப்பட்ட மனமுடையவனுகவும் பரப்பிரம்ம தியானம் செய்பவன் சத்பாவ வைராக்கியமுடையவனுவான். குணங்கள் கர்மத்தைத் தோற்றுவிக்கின்றன. குணுதீதன், கர்மத்தில் கட்டுப்படாதிருப்பவன், ஒன்றினிடத்தும் இச்சை கொள்ளாது மௌனமுற்று அத்வைத பாவனையிலிருப்பவன் அபாவ வைராக்கியமுடையவனுவான். உலகைச் சொப்பனமெனக்கருதி உலகச் சுகதுக்கங்களிலிருந்து விடுபட்டு யாண்டும் மகிழ்ச்சியுடையவனுக நான், நீ என்னும் துவைத பாவனை இல்லாதவனுகச் சொப்பனத்திலும் உலகபோகத்தை நினையாமலிருப்பது ஸ்தலாபன வைராக்கியம் எனப்படும். பழைய வினையினுல் சரீரவாழ்வும், சுகதுக்கங்களும் அமைந்துள்ளன என்று எண்ணிச் சரீரம் அழிந்து விடுமென்ற கவலையைவிடுத்துச் சுகதுக்கங்களைச் சமமாகப் பாவித்துத் துரிய நிலையிலிருப்பது திட வைராக்கியம். மும்மலங்களையும் அகற்றிக் குழந்தையைப் போன்ற சுபாவத்தை அடைந்து இருப்பது விச்சிரம வைராக்கியம். சிரவண மனனங்களால் சாதனையைப் பூர்த்தி செய்து பரமாத்மாவோடு ஐக்கியமாகி மௌனமாயிருப்பது சம்மத வைராக்கியம். பிறப்பு இறப்புக்களைப் பற்றியோ, பாப புண்ணியங்களைப் பற்றியோ, நரக சொர்க்கங்களைப் பற்றியோ கவலைப்படாது தோன்றி மறையும் இவ்வுலகத்தை மித்தை எனக்கருதிச் சலனமற்றிருப்பது விசார வைராக்கியம். யாதொருவியாகுலமுமின்றித் தானேபிரம்மமென்றும் தனக்கு விகாரம் இல்லையென்றும் அகண்டாகார விருத்தியுடன் இருப்பது நிர்வாண வைராக்கியம். இப்படிச் சாஸ்திரங்களில் பல வைராக்கியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மனம் வாக்குக்கு விளங்கக் கூடியவையெல்லாம் கற்பிதமாகும். மனவாக்குக்கு அதீதமாய் யாவரும் போற்றும் பொருள் எதுவோ அதுவே நிர்மலப் பொருளாகும்.

''பரப்பிரம்மத்தில் ஐக்கியப்பட்டவர்க்கே ஆனந்தம் என்றும், ஆனந்தமே முக்தி என்றும் சொல்லப்படும். சகோர பக்ஷி சந்திர கிரணத்தைப் புசித்துத் திருப்தி அடைந்திருக்கும். பிரம்மானந்தத்தைப் புசித்துத் துரிய நிலையில் இருந்து நான் என்பதை நசித்துப் போகும்படி செய்து பிரம்மானந்தம் நிறைந்து பேச்சைக் குறைத்துத் தேகாபிமானத்தைத் துறந்து இருக்கவேண்டும்.'' இங்ஙனம் ஜயதேவர் அரசனுக்கு உபதேசித்தார். அரசன் அவருடைய பாதங்களில் பணிந்து ''என் சற்குரு நாதனே! இனிமையான மொழிகளை உரைக்கும் இன்பனே! இவ்வுலகிலுள்ள சகலரும் போற்றும் தூயனே! என்னைப் போன்ற எளியோர்களுக்கு நேயனே! நான் செய்ய வேண்டியதைத் திருவாய் மலர்ந்தருளவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான். ''அரசனே! பிரம்மானந்தத்தை அடைவதற்கு முதலில் நீ சகுணப் பிரம்மத்தைப் பக்தியோடு உபாசிக்க வேண்டும். அவ்வுபாசனையின் மூலம் உன்னுடைய பாபங்கள் அக்கினியில் வீழ்ந்த காய்ந்த சருகுகள் போல் பஸ்பமாய் விடும். அப்பொழுது நீ புனிதனுவாய். உன் உள்ளம் புனிதமடையும் பொழுது இவ்வுலக இன்பம் இன்பமாகத் தோன்ருது. அப்பொழுது சத்குரு தரிசனம் ஏற்படும். சத்குரு நாதனுக்கு அன்புடன் நீ பணிவிடை செய்ய வேண்டும். அப்பொழுது உன்னுடைய சஞ்சித கர்மங்களெல்லாம் பெருங்காற்ருல் சிதறிப்போகும் மேகத்தைப் போன்று சிதறிப் போகும். உன் உள்ளத்தில் அப்பொழுது மகிழ்ச்சி உண்டாகும். உனக்கு அமைந்த சத்குரு மஹாவாக்கிய உபதேசம் செய்வார். தனிமையிலிருந்து தைலதாரைபோல் மனம் அம் மஹாவாக்கியத்தைத் தியானிக்க வேண்டும். அதன் விளைவாக உன் உள்ளம் சகல சஞ்சலங்களினின்றும் வில

கிக் காற்றில்லா இடத்தில் உள்ள தீபத்தைப்போன்று அசையா நிலையை அடையும். தேகத்தையும் இதில் அமைந்துள்ள துவாரங்களையும், இதனுள் உலாவுகின்ற சுவாசத்தையும், இதிலிருந்து உதிக்கும் அந்தக்கரணங்களையும், இவைகளை எல்லாம் நான் என எண்ணியிருக்கும் ஜீவனையும், அஞ்ஞானத்தையும், ஜாக்ரதாவஸ்தையில் நிகழும் இந்திரியங்களின் சேஷ்டையையும், சொப்பனத்தில் உண்டாகும் மனக்கூத்தையும், சுழுத்தியில் ஏற்படுகின்ற சூனியத்தையும் அறிந்துகொண்டிருக்கிற தானும், சராசரங்கள் அனைத்துக்கும் சாக்ஷியாயிருக்கும் பிரம்மமும் ஒன்றே எனக் காட்டும் மஹா வாக்கியத்தின் அர்த்தத்தைச் சத்குரு முன் னிலையில் சிரவணம் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் சூரியோதயத்தால் நீங்கும் இருளைப்போன்று அஞ்ஞானம் நீங்கிப்போகும். தேகம் அநித்தியம்; நாம் நித்தியம். இந்திரியங்கள் துக்க மயம்; நாம் ஆனந்த மயம். அந்தக்கரணங்கள் சலன இயல்புடையவை; நாம் நிச்சலனம். அஞ்ஞானம் சுத்த சூனியம்; நாம் அகண்ட பரிபூரணம் என்று விசாரம் செய்யவேண்டும். இதனால் சந்தேகம் நீங்கிப்போகும். தேகம் நாம் அல்லாததால் நமக்கு மூப்பு மரணங்கள் இல்லை. பிறப்பில்லாதவனுக்கு மரணம் ஏது? வடிவமில்லாதவனுக்கு விகாரம் ஏது? சங்கல்பம் இல்லாதவனுக்கு விகல்பம் ஏது? என்று உணரவேண்டும். பிரபஞ்சம் முழுதும் மித்தை என்றும் அழியாத பிரம்மமே நாம் என்றும் திடமாய்த் தெளிதல் வேண்டும்.

''தீபம் ஏற்றியபின் கயிற்றைப் பாம்பாகக் கருதிய பயம் நீங்கிக் கயிற்றைக் காலால் தள்ளிவிடுவது போன்று ஞானம் வந்தபின் பிரபஞ்சத்தை மெய்யென்றும் சரீரத்தைத் தானென்றும் நினைத்த விபரீத பாவனையை ஒழித்துவிடலாம். புற்றின் உள்ளிருந்து புறப்படும் ஈசலைப்போன்று உள்ளத்தின் உள்ளிருந்து உதிக்கும் சங்கல்பங்களை இந்திரியங்களின் வழியாய்ச் செல்லாமல் குளத்திலிருந்து வெளிவரும் மீன்களையெல்லாம் கொக்கு உண்பதுபோன்று நாசம் செய்ய வேண்டும். இங்ஙனம் உள்ளத்திலிருக்கும் நினைப்பென்னும் மீன்களை எல்லாம் நாசம் செய்து இச்சையின் வழியாக மனம் செல்லாமல் அதை நிக்ரகம் செய்து கூடஸ்தப் பிரம்மமாயிருப்பது சமாதி எனப்படும். சமாதியில் அகண்டானந்தம் ஏற்படுகிறது. அகண்டானந்தத்தில் தன்னை மறந்து பரப்பிரம்மத்தில் கலந்து எங்கும் வியாபகமடைந்து தனிவியக்தியை ஒழிந்து போகச் செய்து பேசுவதையும் உண்பதையும் சொப்பன நிகழ்ச்சிபோல் உணரும் நிலை சாக்ஷாத்கார நிலையாகும். இந்நிலையே முடிந்த நிலையென்றும், பிரம்மமே இஷ்ட தெய்வமென்றும், தெய்வமே சத்குருவென்றும், குருசேவையே சகல கிரியைகளென்றும், குரு உபதேசமே வேதமென்றும், சமாதி நிஷ்டையே சாக்ஷாத்காரம் என்றும் நீ அறிந்துகொள்ளவேண்டும்.'' இங்ஙனம் ஜயதேவர் கூறினர்.

மேலும் ஜயதேவர் உபதேசித்ததாவது: ''அரசனே! குருமீதும் இஷ்டதேவதை மீதும் சாஸ்திரங்களின் மீதும் சிரத்தை பூரணமாய் இருக்கவேண்டும். குருமீது இருக்கும் சிரத்தையானது பரஞானத்தைக் கொடுக்கும். இஷ்டதேவதை மீதிருக்கும் சிரத்தை பாபத்தை அழிக்கும். சாஸ்திரத்தின் மீதிருக்கும் சிரத்தை விவேகத்தைக் கொடுக்கும். சிரத்தை இல்லாதவனுக்கு ஞானம் உண்டாகாது. சிரத்தைக்கு ஏற்ப மனிதன் மேலோனுகின்றான். சிரத்தையுடையவன் அனைத்தையும் பெறுகின்றான். தேகம் ஜடப்பொருள்; நாமரூபமுடையது; நீ நாமரூபமற்றவன். தேகம் விகாரமுடையது; நீ விகாரமற்றவன். தேகம் துக்கத் துக்கேதுவானது; நீ ஆனந்தசொரூபி. தேகத்தை இயக்கி, பிராணனை இயக்கி ஜீவனுக்கு விளக்கம் தருவது ஆன்ம சக்தியமாகும். பிராரப்தத்தினால் வந்த இந்தத் தேகத்தைக் குறித்து உனக்கு ஏன் அக்கறை? தேகாபிமானத்தை இன்றுடன் விட்டுவிடு. உன்னை நீயே நன்றாய் ஆராய்ந்து பார். தன்னைத்தானே ஆராய்பவர்க்கு எல்லையற்ற ஆனந்தம் உண்டாகும். முக்குணங்களும், பஞ்ச பூதங்களும்

மாயையால் நிர்மாணிக்கப்பட்டவை. மாயை மித்தையால் நிர்மாணிக்கப்பட்டது. நீ அனைத்துக்கும் சாக்ஷியாய் இருக்கின்றாய். சாக்ஷிமயமாய் இருக்கும் உன்னை அறியுமளவு மாயையும் முக்குணங்களும், பஞ்ச பூத விகாரங்களும் உன்னை விட்டு அகலும். ''ஏகம் பிரம்மம் துவைதம் ந அஸ்தி''—இது சத்திய வாக்கு. ''உள்ளது பிரம்மம் ஒன்றுதான்; இரண்டென்பதில்லை.'' இங்ஙனம் சத்தியத்தை ஜயதேவர் அரசனுக்கு உபதேசம் செய்தார். ஜயதேவருடைய உபதேசத்தை ஸ்ரீ காசி விஸ்வநாதரும், விசாலாக்ஷி அம்மையும் வேதமுடிவான உண்மையென்று கூறி ஜீயதேவரை ஆசீர்வதித்து மறைந்தனர். மஹாவிஷ்ணுவும் கருட வாகனத்தில் லக்ஷ்மி சமேதராய் எழுந்தருளி ஜயதேவரை ஆலிங்கனம் செய்து ''என் வாக்கினால் உரைத்த பகவத்கீதைக்கு இதுவே பிரமாணமாகும்'' என்று கூறி மறைந்தார். நாரதர் முதலான தேவரிஷிகளெல்லாரும் ஆங்கு எழுந்தருளி ''வியாசர் உரைத்த பாகவதத்தின் ரகசியம் ஜயதேவர் உரைத்த உபதேசமாகும்'' என்று கூறி ஜயதேவர்மீது புஷ்பங்களைச் சொரிந்து ஜய ஜய என்று கூறிக் கொண்டே மறைந்தார்கள். ஜயதேவரும் அரசனும் வாரணாசியிலிருக்கும் பண்டிதர்களிடம் விடை பெற்றுக்கொண்டு தங்கள் நாட்டை அடைந்தார்கள்.

சிலகாலம் கிரௌஞ்ச மன்னன் நாட்டை அறநெறியில் ஆண்டு வந்தான். ஜயதேவர் பிரம்மநிஷ்டையில் மூழ்கி இருந்தார். அதன் பின் ஜயதேவரும் அரசனும் பாரதநாடு முழுமையும் உள்ள பல தலங்களையும் தரிசித்தனர். க்ஷேத்திர யாத்திரை செய்வது சாதனையில் ஒரு பகுதியாகும். தெய்வச் சிந்தனையோடு க்ஷேத்திர யாத்திரை செய்தால் உள்ளத்தில் அருள் ஓங்குகின்றது. புண்ணிய க்ஷேத்திரத்தில் ஏற்கனவே உள்ள அருள் சான்றோர்களுடைய வருகையினால் மேலும் அதிகரிக்கின்றது. சான்றோர்கள் க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போவதன் மூலம் ஆங்குள்ள அருள் நிலையை வளர்ப்பவர்களாகின்றார்கள். சாதகர்கள் க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போவதன் மூலம் தங்களிடமுள்ள அருள் நிலையை வளர்த்துக் கொள்கின்றார்கள். ஜயதேவர் க்ஷேத்திர யாத்திரை செய்ததன் மூலம் க்ஷேத்திரங்களிலுள்ள அருள் சக்தியை மேலும் வளர்த்தார். ஜயதேவருடன் சென்ற அரசன் க்ஷேத்திர யாத்திரை செய்ததன் மூலம் தன்னிடமுள்ள அருள் சக்தியை வளர்த்துக் கொண்டான். காய் கனிந்தவுடன் கவர்ச்சியிலும் ருசியிலும் பிற உயிர்களுக்குப் பயன் பட்டு வருகிறது. அங்ஙனம் பக்குவம் அடைந்த ஞானிகள் தங்கள் வாழ்க்கையின் மூலம் பிறர்க்குப் பயன்பட்டு வருகின்றார்கள். ஜயதேவர் முற்றிலும் பழுத்துள்ள கனிக்கு நிகராவார். அவருடைய வாழ்வும் உபதேசமும் மற்றவர்களுடைய உள்ளத்தில் கடவுள் உணர்ச்சியைத் தூண்டுவதாக அமைந்துள்ளன. ஜயதேவர் தம் யாத்திரையின்பொழுது பக்திப் பரவசத்துடன் பகவத்காட்சி பெற்றதுடன் பகவத் பெருமையை மக்களுக்குப் புகட்டவும் செய்தார். ஆங்காங்கே மக்களுக்குத் தெய்வநெறியைப் பற்றியும் தெய்வ பக்தியைப்பற்றியும் அவர் செய்த உபதேசம் மக்களுக்கிடையே ஒழுக்கத்தையும், பக்தியையும் வளர்த்தது. இங்ஙனம் யாத்திரை செய்து இரண்டாம் முறை அவர் வாரணாசியை அடைந்தார். வாரணாசியில் மக்களுக்கு நல்லுபதேசங்கள் செய்தார். காசி விஸ்வநாதருடைய புகழை ஜயதேவர் மனமாரப் பாடினார். ஜயதேவருடைய மனைவி பத்மாவதியும் அவருடன் இருந்து அவர் பாசுரங்களைக் கேட்டுப் பரவசம் அடைந்து கொண்டிருந்தார். ஜயதேவரும் பத்மாவதியும் கண்ணபிரானுடைய பெருமைகளைப் பாடியபடியே ஒருசுபதினத்தில் பூத உடலை ஒதுக்கித் தள்ளிவிட்டுக் கண்ணபிரானுடன் கலந்து விட்டனர். ஜயதேவர் போன்ற அருளாளர்கள் அருள் உலகில் இருந்துகொண்டு மக்களுக்கு ஓயாது அருளை வழங்கிக் கொண்டே இருக்கின்றார்கள். ஜயதேவர் வரலாற்றைச் சிந்திப்பவர்களும், அவர் வரலாற்றைக் கேட்பவர்களும் தங்களுடைய உள்ளத்தை மேன்மைப் படுத்திக் கொள்ள வல்லவர்களாகின்றார்கள்.

(முற்றும்)

# சூரசம்ஹாரம்

திருச்செந்தூரில் ஆண்டுதோறும் சூரசம்ஹாரம் என்னும் விழா கொண்டாடப்பெறுகிறது. ஆறு நாட்கள் பக்தர்கள் திருச்செந்தூரில் தங்கியிருந்து முருகனை வழுத்தி வருகின்றார்கள். இதற்குச் சஷ்டி விரதம் என்று பெயர். ஆறாவது நாள் முருகப்பெருமான் சூரபத்மனைச் சம்ஹாரம் செய்யும் விழாக்கொண்டாடி சஷ்டி விழாவை முடிக்கின்றார்கள். சூரசம்ஹாரம் கந்த புராணத்தில் இடம் பெறுகிறது. பராக்ரமம் மிக வாய்க்கப்பெற்ற அசுரக் கூட்டங்களுள் சூரபத்மன் ஓர் அசுரன் ஆவான். அவன் தேவர்களை மிகவும் துன்புறுத்தினான். தேவர்களுடைய துன்பத்தைத் துடைக்கவும் சூரபத்மனை அழிக்கவும் சிவனார் தம் அருள் சக்தியைக் குமாரனாகத் தோற்றுவித்தார். அவரே குமரக் கடவுள் ஆவார். கீதையில் பகவான் சேனைத்தலைவர்களுள் நான் ஸ்கந்தனாக இருக்கிறேன் என்று கூறியுள்ளார். தவத்தின் விளைவாகத் தோன்றிய முருகன் பேராற்றலே வடிவெடுத்தவராக இருந்தார். தேவர்களுக்குத் தொல்லை கொடுத்து வந்த சூரபத்மனை முருகக்கடவுள் விளையாட்டுப் போன்று சம்ஹாரம் செய்தார். கந்த புராணத்தின்படி முருகப்பெருமான் சூரபத்மன் என்னும் அசுரனை அழித்ததைச் சூரசம்ஹாரம் என்று சொல்லுகின்றோம். தத்துவப்படி காமம், குரோதம் முதலிய பொல்லாத அந்தக்கரண விருத்திகள் அசுரர்களாக உருவகப்படுத்திச் சொல்லப்பட்டிருக்கின்றன. அஹங்காரம், ஆசாபாசம் ஆகியவைகளினின்றும் மனதில் எழுகின்ற புல்லிய எண்ணங்கள் அசுரப்படைகளாகும். நல்லெண்ணங்கள் தேவர்கள் எனப்படுகின்றார்கள். நல்லெண்ணங்கள் தலையெடுக்கா வண்ணம் புல்லிய எண்ணங்கள் உள்ளத்தில் ஆட்சி புரிந்து வருகின்றன. தெய்வ உபாசனை பண்ணுகின்றவர்களுக்கு அவ்வகர எண்ணங்களை அழிக்கும் அருட்சக்தி உண்டாகின்றது. அவ்வருட் சக்திதான் முருகவேளாவார். முருகன் சூரனை அழித்தது போன்று அருட்சக்தி அற்ப எண்ணங்களை அழித்துத்தள்ளுகிறது. இதுவே தத்துவப்படி சூரசம்ஹாரம் எனப்படும்.

வாழ்க்கைத் தத்துவம் தெரிந்தவர்களுக்கு வாழ்க்கை விளையாட்டுப் போன்று அமைகின்றது. வாழ்க்கைத் தத்துவம் தெரியாதவர்களுக்கு வாழ்க்கை மிகவும் போராட்டமாக இருக்கிறது. வாழ்க்கைத் தத்துவத்தை அறிகின்ற வரையில் நாம் சூரனைத் தோற்றுவித்துக்கொண்டிருக்கின்றோம். வாழ்க்கைத் தத்துவம் தெரிந்த பிறகுதான் குமரன் நம்மிடத்தில் எழுந்தருளுகின்றார். அக் குமரனின் துணைகொண்டு சூரனை அழிக்கும் செயல் அப்பொழுது நிகழ்கிறது.

உயிர்கள் கீழ்நிலையிலிருந்து பரிணமித்துப் படிப்படியாக மேல்நிலைக்கு வருகின்றன. ஜடநிலையிலிருந்து சேதன நிலைக்கு உயிர்கள் பரிணமித்து வருகின்றன. இப்பேருண்மையை அகல்யை என்பவளின் சாப விமோசனம் விளக்குகிறது. சாபத்தால் கல் வடிவத்தில் இருந்த பெண் இராமனுடைய திருவடி பட்டுப் பெண் வடிவமாக மாறி அமைந்தாளென்பது புராண வரலாறு. ஜடநிலையிலிருக்கும் உயிர் ஈசனுடைய அருள்பட்டுச் சேதனமாக மாறி அமைகிறது என்பது அந்நிகழ்ச்சியில் அடங்கியுள்ள தத்துவமாகும். மனதினுள் ஆசை இருந்துகொண்டு அதை ஆட்டிப்படைத்து வருகிறது. ஆசை இந்திரியங்கள் மூலமாக மனதைப் புற உலகுக்கு இழுத்துச் செல்லுகிறது. புற உலகைப் பெற்று அனுபவிக்க வேண்டும் என்கின்ற ஆசை பஞ்சேந்திரியங்களைத் தோற்றுவிக்கிறது. பஞ்சேந்திரியங்கள் மூலமாக உலகம் நன்கு அனுபவிக்கப்படுகிறது. உலகத்தை அனுபவிக்கும் பொழுது அந்தக்கரணத்தில் விருத்திகள் உண்டாகின்றன. அவ்வந்தக்கரண விருத்திகளே அசுரக்கூட்டங்கள் ஆகின்றன. அந்தக்கரண விருத்திகளை வெல்லுதற்குப் பெரும் போராட்டம் நிகழ்த்தவேண்டியிருக்கிறது. அப்போராட்டமே வாழ்க்கைப் போராட்டம் எனப்படுகிறது. அந்தக்கரண விருத்திகள் வலிவு மிக வாய்க்கப்பெற்றவைகளாக இருக்கின்

றன. புற உலக சம்பந்தமான விருத்திகள் பராக்கிரமமே வடிவெடுத்தவைகளாக இருக்கின்றன. உலகப்பற்று உடையவர்கள் உலக சம்பந்தமான விருத்திகளை அழிக்க முடிவதில்லை. அவைகள் அவர்களைப் பெரு மயக்கத்தில் அழுத்தி வைத்திருக்கின்றன. ஓயாது அவைகள் அவர்களுக்கு உபத்திரவம் செய்துகொண்டிருக்கின்றன. அத்தொந்தரவினின்றும் தப்புவதற்காக உலகப்பற்று உடையவர்கள் தெய்வத்தை நாடுகிறார்கள். மனம் உலகைப் பற்றிப் பிடித்துக்கொண்டிருப்பதால் அது தெய்வப்பற்றுக்கொள்ள முடியாமல் திண்டாடுகிறது. உலகில் அழுந்திக் கிடக்கின்ற மனது உலகப்பற்றை வளர்ப்பதற்கே தெய்வத்தின் துணையைத் தேடுகிறது. எனவே தெய்வத்தின் துணையை நாடியும் அவர்கள் அந்தக்கரண விருத்திகளின் தொல்லையிலிருந்து விடுபட முடியாதவர்களாக இருக்கின்றார்கள். பொருள் வேண்டும்; போகம் வேண்டும்; புகழ்வேண்டும்; பதவி வேண்டும் என்று உலகப்பற்றுடையவர்கள் இறைவனிடம் பிரார்த்திக்கின்றார்கள். இது காமியப் பிரார்த்தனை எனப்படுகிறது. சொரி என்னும் வியாதி உடலில் நமைச்சலை உண்டுபண்ணுகிறது. நமைச்சல் உண்டாகும் பொழுது சொரிந்துவிட்டால் இன்பமாக இருக்கும். ஆனால் அது எவ்வளவு இன்பமாகத் தோன்றுகிறதோ அவ்வளவு துன்பமாகப் பின்னால் வடிவெடுக்கும். இவ்வுண்மையை அறிந்திருந்தும் சொரிந்து விடுவதில் உண்டாகும் இன்பத்தில் மூழ்கி நமைச்சல் ஏற்படும்போது சொரிந்துவிட்டுத் துன்பத்தைப் பெருக்கிக் கொள்ளுகிறார்கள். அங்ஙனம் உலகப்பற்று என்னும் நோய் உடையவர்களுக்கு உலக உணர்வு உண்டாகும்பொழுது அவ்வுணர்வைப் பூர்த்தி பண்ணுவதில் இன்பம் உண்டாவதாக உணர்கிறார்கள். ஆனால் அதன் மூலம் எவ்வளவுக்கெவ்வளவு இன்பம் பெறுகின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு பின்பு துன்பத்தை அனுபவித்தாகவேண்டும். இவ்வுண்மையை அறிந்திருந்தும் உலகப்பற்றுடையவர்கள் காம உணர்வு உண்டாகும் பொழுது அவ்வுணர்வை நிறைவேற்றி இன்பத்தைப் பெற்றுத் துன்பத்தைப் பெருக்கிக் கொண்டே இருக்கிறார்கள். சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். உடல் பற்றுடையவர்களுக்குக் காம உணர்வு தலையெடுக்கிறது. காம உணர்வைத் தணித்துக் கொள்வதன் மூலம் ஓர் இன்பம் உண்டாவதை உணர்கின்றார்கள். ஆனால் அவ்வின்பம் பின்னால் துன்பமாக வடிவெடுக்கும். அதை அறிந்திருந்தும் காம உணர்வு தலையெடுக்கும் பொழுது அதை அழித்துத் தள்ளுவதற்குப் பதிலாக அதற்கு அடிமைப்பட்டு அதை நிறைவேற்றி இன்பம் பெறவே விரும்புகின்றனர். பெண்ணொருத்தி காமத்தை நிறைவேற்றி உடல் இன்பம் பெறுகின்றாள். ஆனால் அது பின்பு பிரசவ வேதனையாக வடிவெடுக்கும்பொழுது அத்துன்பத்தின் கொடுமையை அவள் உணர்கின்றாள். ஆண் ஒருவன் காமம் தலையெடுக்கும் பொழுது உயர்ந்த தாதுப்பொருளாகிய விந்துவை வெளிப்படுத்துவதில் இன்பம் உண்டாவதாக உணர்கின்றான். அவ்விந்து வெளியேறுவதன் மூலம் உடல் தளர்ச்சியும், உள்ளத் தளர்ச்சியும் ஏற்பட்டுத் துயரத்துக்கு ஆளாகிறான். இவ்வுண்மையை அறிந்திருந்தும் உடல் பற்று உடையவர்கள் காம நோயால் ஏற்படும் உணர்வை நிறைவேற்றிக்கொள்வதன் மூலம் உண்டாகும் இன்பத்திலிருந்து விலகி இருக்க முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.

முருகனுக்கு ஞானபண்டிதன் என்பது பெயர். உண்மையைத் தெளிவாக உணர்த்துவதே ஞானமாகும். உண்மையை மறைத்து வைத்து உண்மை அல்லாததை உண்மை என்று காட்டித் தருவது மாயையின் செயலாகும். உண்மையை உள்ளபடி உணர்த்துகின்ற ஆன்மீக உணர்வை முருகன் என்று சொல்கின்றோம். மனம் ஆன்மாவோடு இணையும் பொழுதே ஆன்மீக உணர்வு தோன்றுகிறது. ஆன்மீக உணர்வு உண்டாகும் பொழுது ஞானத்தெளிவு உண்டாகிறது. அப்பொழுது உடல் இன்பமும் உலக இன்பமும் பொருளற்றவை என்பதை மனது உணர்ந்து ஒதுக்கித் தள்ளுகிறது. அப்படி ஒதுக்கித் தள்ளிவிட்டால்

புல்லிய எண்ணங்களோ ஆசைகளோ மனதில் தோன்றுவதில்லை. அவைகளைச் சம்ஹாரம் செய்வது சூரசம்ஹாரம் எனப்படுகிறது.

முருகன் வரலாற்றில் சூரசம்ஹாரம் முக்கிய நிகழ்ச்சி ஆகிறது. கந்தபுராண அமைப்பைக் கொண்டு அதில் அடங்கியுள்ள தத்துவங்களை ஆராய்ந்து பார்ப்போம். அசுரர்களுக்குத் தலைவனாக விளங்கியவன் அசுரேந்திரன். அவன் மங்கலகேசி என்னும் அரக்கியை மணந்து சுரசை என்பவளை மகளாகப் பெற்றெடுத்தான். அசுர குரு சுக்கிராச்சாரியர் மாயையின் திறங்கள் அனைத்தையும் அவளுக்குக் கற்பித்தார். அவளுக்கு மாயை என்ற நாமமும் சூட்டினார். "அசுரர்கள் நாளுக்கு நாள் பலம் குன்றி வருகிறார்கள். இந்தப் போக்கில் போனால் தேவர்களுடைய ஆதிக்கம் அசுரர்களை அடக்கிவிடும். ஆகவே மாயையாகிய நீ, நான் இப்பொழுது உனக்குப் புகட்டிய மாயாத் திறங்கள்அனைத்தையும் பயன்படுத்திக் காசிபமுனிவருடைய மனதை மயக்கவேண்டும். அவரைக் காமத்துக்கு உட்படுத்தி அவர் மூலம் புதல்வர்களைப் பெற்றெடுக்கவேண்டும். அப்புதல்வர்களின் துணையைக் கொண்டு தேவர்களை ஒடுக்கவேண்டும்." இங்ஙனம் அசுரகுரு சுக்ராச்சாரியர் மாயைக்குப் புகட்டினார். மாயை என்பவள் அதன்படி நடந்து கொள்கிறேன் என்று சுக்ராச்சாரியரிடம் கூறிவிட்டுக் காசிபமுனிவர் தவம்செய்யும் இடத்துக்கு வந்தாள். காசிபமுனிவருடைய மனதைக் கலக்கத் திட்டமிட்டாள். அவருடைய உள்முக நோக்கத்தைப் பகிர்முகத்துக்குக் கொண்டு வருவதற்கு இயற்கையில் சில கவர்ச்சிகளை உண்டாக்கினாள். காசிபமுனிவர் வாழ்ந்து வந்த இடத்துக்குப் பக்கத்தில் தடாகங்களையும், அழகான பூக்கள் நிறைந்த நந்தவனங்களையும், கம்பீரமான மண்டபங்களையும், மிருதுவான படுக்கைகளையும் உண்டாக்கினாள். இயற்கையிலிருந்த அக்கவர்ச்சியைக் காசிபமுனிவர் கண்டு வியப்படைந்தார். அவருடைய உள்ளம் அந்தர்முகம் செல்வதற்குப் பதிலாகப் பகிர்முகத்துக்கு வர ஆரம்பித்தது. அவர் மனதைப் பகிர்முகத்துக்கு இழுத்து வந்தவுடன் அதை மயக்குவதற்குச் சுரசை என்னும் மாயை திட்டமிட்டாள். கட்டழகே மிகுந்த காரிகையாகத் தன்னிடம் பேரழகைத் தோற்றுவித்துக்கொண்டு ஒரு மணிக்குன்றின் மீது நின்று காசிபமுனிவருக்குத் தோற்றமளித்தாள். காசிபமுனிவர் அவளைப் பார்த்ததும் மையல் கொண்டார். மனதை அவள்பால் பறிகொடுத்தார். தவத்தில் சென்ற மனது மாயையின் வடிவழகில் செல்ல ஆரம்பித்தது. மாயையை அளவில்லாமல் புகழ ஆரம்பித்தார். மாயையின் மையலில் அகப்பட்ட காசிபமுனிவருடைய மனது தவ நெறியை மறந்து தத்தளித்தது.

புறவுலகம் நம் மனதைப் பகிர்முகத்துக்கு இழுக்கிறது. அந்தர்முகத்துக்குச் செல்லுகின்ற மனதைப் புறவுலக ஆசை புறவுலகுக்கு இழுத்துக்கொண்டு வருகிறது. புறவுலகிலுள்ள மண்ணாசையும், பொன்னாசையும், மக்களாசையும் மனதை அகமுகம் செல்லாதபடி தடுத்து வைக்கின்றன. புறவுலகத்தில் செல்லும் மனது வடிவழகில் ஈடுபடும்பொழுது காமத்துக்கு வசப்பட்டு மயக்கத்துக்குள்ளாகிறது. காமத்துக்கு வசப்படுகின்ற மனது புல்லிய எண்ணங்களை ஏராளமாகத் தோற்றுவிக்கிறது. அப்புல்லிய எண்ணங்கள்தாம் அசுரக் கூட்டங்களாகும். சுரசை காசிபமுனிவருடைய உள்ளத்தை மயக்கி அவர் மூலம் சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் என்ற புதல்வர்களைப் பெற்றெடுத்தாள். மாயை தன் மக்களுக்குக் கூறியதாவது: "நீங்கள் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்து வலிமை பெற்றுத் தேவர்களையெல்லாம் அடக்கி ஒடுக்கி உங்களுக்கு அடிமையாக வைத்திருங்கள்." சூரபன்மன் கடுந்தவம் புரிந்து சிவபெருமானின் காட்சி பெற்றான். சிவபிரானிடம், "அண்டமனைத்துக்கும் நான் அரசனாகவேண்டும். தேவர்கள் எல்லாரையும் வெல்லும் ஆற்றல் எனக்கு வேண்டும். அதற்குரிய ஆயுதங்களையும் எனக்கு அருளுதல் வேண்டும். இவ்வுடல் அழியாமல் இருக்கவேண்டும்" என்று வேண்டினான். சிவபெருமான் சூரபன்மன் கேட்டவற்றைக்

கொடுத்தருளினர். "என்மூலமாகவும் என் அம்சத்தின் மூலமாகவும் அன்றி உனக்கு அழிவில்லை" என்ற வரத்தையும் கொடுத்தார். சூரபன்மனும் அவன் சகோதரர்களும் சிவபெருமானிடம் வரம் பெற்றதன் விளைவாகச் செருக்குற்றுர்கள். தேவர்கள் யாவரையும் வருத்தினர்கள். தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டார்கள். தேவர்களுக்கும் தேவர்கள் தலைவனாகிய இந்திரனுக்கும் சிவபெருமான் பகர்ந்ததாவது: "நீங்கள் தக்கன் வேள்விக்குச் சென்றிருந்தீர்கள். அவன் நம்மை இகழ்ந்தான். தெய்வத்தைப் புறக்கணித்துச் செய்த தக்கன் வேள்வியில் நீங்கள் கலந்துகொண்ட தீவினையின் பயனை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள். கந்தவேளைத் தோற்றுவித்து உங்களைக் காக்கின்றேன்." சிவபெருமானுடைய அருள் முருகனுகத் தோன்றியது. முருகன் சூரபன்மனுடைய சகோதரர்களாகிய சிங்கமுகனையும் தாரகனையும் கொன்று தள்ளினர். சூரபன்மனுடைய மனதை மாற்றி அமைத்தார். சேவலாகவும் மயிலாகவும் மாறிய சூரபன்மனுக்கு நல்லறிவு தந்து முருகவேள் அவற்றை முறையாகத் தமக்குரிய கொடியாகவும் வாகனமாகவும் ஆக்கிக்கொண்டார்.

சூரபன்மன் ரஜோகுணம் படைத்த மனது ஆவான். சிங்கமுகாசுரனும் தாரகனும் அஹங்காரமும் ஆசையும் ஆவார்கள். அஹங்காரத்தாலும் ஆசையாலும் மனதில் எழும் அற்ப எண்ணங்கள் அசுரக்கூட்டங்கள் ஆகின்றன. சுரசை அல்லது மாயை அஞ்ஞானம் ஆவாள். அஞ்ஞானம் ஜீவனேடு சேர்வதால் பலவிதமான அசுர எண்ணங்கள் தோன்றுகின்றன. அஞ்ஞானத்தின் விளைவால் கொடுமைகள் பல நிகழ்கின்றன. ஜீவன் மனித நிலைக்குக் கீழிருக்கும்பொழுது செய்கின்ற முயற்சிகளெல்லாம் மனதைத் தோற்றத்துக்குக் கொண்டு வருவதில் முடிகின்றன. மனம் தோற்றத்துக்கு வருவதே சூரபன்மனுடைய தோற்றமாகும். மனது தான் அனைத்தையும் செய்கிறது. இயற்கையை அடக்கியாளுவது மனதின் துணைகொண்டேயாம். சூரபன்மன் தேவர்களை அடக்கி ஆண்டான் என்பது மனத்தின் துணைகொண்டு பிரகிருதியைக் கட்டி ஆளலாம் என்பதைக் குறிக்கிறது. நம்மிடத்திலுள்ள தெய்விக இயல்புக்கும் அசுர இயல்புக்கும் இடையே உள்ள போராட்டமே தேவ அசுரப் போராகும். எப்பொழுதுமே நம்மிடம் அசுர இயல்புதான் தலையெடுக்கிறது. தேவ, அசுரப்போரிலும் அசுரர்களே வெற்றியடைகிறுர்கள். தேவர்கள் சிவனிடம் முறையிட்டது தெய்விக இயல்பு தெய்வத்தின் உதவியை நாடுவதைக் குறிக்கும். முற்றிலும் நாம் தெய்வத்தைச் சரணுகதி அடையும் பொழுது தெய்வம் நம்மிடத்து அருட்சக்தியைத் தோற்றுவிக்கின்றுர். அவ்வருட்சக்தியே முருகக்கடவுள் ஆவார். அருட்சக்தி ஆணவத்தையும் ஆசையையும் அழித்துத் தள்ளுகிறது. முருகவேள் சிங்கமுக அசுரனைம் தாரகனையும் அழித்தது அதை விளக்குகிறது. அருட்சக்தியால் மனதின் இயல்பு அடியோடு மாறியமைகிறது. அருள் அல்லது ஞானத்துக்கு மனது அன்பாகவும் ஆற்றலாகவும் வடிவெடுத்துத் துணைபுரிகிறது. இக்கருத்தைச் சூரபன்மன் மயிலாகவும் சேவலாகவும் மாறி முருகனிடத்தில் இடம் பெற்றது குறிக்கிறது.

நாம் அனைவரும் சூரசம்ஹாரம் செய்தாக வேண்டும். முருகன் சூரனை வதைத்தது கந்தபுராணத்திலுள்ள சூரசம்ஹாரமாகும். நம்மிடம் அருள் உணர்வைத் தோற்றுவித்து நம்மிடத்திலுள்ள சிற்றியல்பை அழித்துத் தள்ளுவது நாம் செய்ய வேண்டிய சூரசம்ஹாரமாகும். முருகன் அன்று நிகழ்த்திய சூரசம்ஹாரத்தை ஆண்டுக்கு ஒரு தட்வை திருச்செந்தூரில் ஆறு நாட்கள் விரதமிருந்து ஒரு விழாவாகக் கொண்டாடுகின்றேம். சூரசம்ஹார நிகழ்ச்சியைப் பார்க்க லக்ஷக்கணக்கான பக்தர்கள் கூடுகின்றுர்கள். அப்பக்தர்களைத் தரிசிப்பது ஓர் அரிய தரிசனமாகும். சூரசம்ஹாரத்தைப் பார்ப்பதுமட்டும் போதாது. சூரசம்ஹாரம் நம்மிடத்தில் ஓயாது நிகழ்ந்து வரவேண்டும். ஞானபண்டிதனுகிய முருகன் நம்மிடம் தோன்றி ஆணவத்தையும் ஆசையையும் அழித்துப் பேரன்பையும் பேராற்றலையும் வளர்ப்பாராக.

# விதியைக் குறித்துப் புலம்பாதே!

(சுவாமி துருவானந்தர்)

மாநிலத்தில் விதியை வென்ற மனிதர் யாரும் இல்லையே, ஞானியென்ன அரச னென்ன யாருமே விதிக்கு விலக்கில்லையே !

ஸ்ரீ ரகுராமனும் வனவாசம் சென்றது விதியினால்;

சந்திரமதியும் ஹரிச்சந்திரனும் காசி சென்றது விதியினால் ......... இப்படியாக இந்தப் பாட்டு இன்னும் போய்க்கொண்டே இருக்கிறது. இந்தப் பாட்டைப் பிச்சைக் காரன் ஒருவன் பாடிக்கொண்டு போவதைக் கேட்டேன். அவன் போன பிறகு அந்தப் பாட்டின் கருத்தில் என் சிந்தனையைச் செலுத்தினேன்.

இந்தப் பாட்டை எழுதியவர் விதிக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதியுள்ளார். விதி என்ற தத்துவத்தை நிலைநாட்ட நன் னெறியைக் கடைப்பிடித்த சான்றோர்களை யும் எடுத்துக் காட்டுகிறார்.

விதி என்ற தத்துவத்தைக் குறித்து வாதம் பண்ண ஆரம்பித்தால் ஆயுள் போதாது. மக்கள் மனதில் இந்த நம்பிக்கை ஆழப்பதிந்துள்ளது. எவ்வளவுதான் விஞ் ஞான பூர்வமாக நிரூபித்தாலும் அதை ஏற் றுக்கொள்ளும் மாந்தர் குறைவு.

விதி என்றால் ஒழுங்கு, நியதி, சட்டம் என்றெல்லாம் பொருள்படுகிறது. நாம் பிறந்ததிலிருந்து இறக்கும் வரை இந்த மாதிரிதான் வாழ வேண்டும், இத்தகைய இன்ப துன்பங்களைத்தாம் அனுபவிக்க வேண்டும் என்று விதித்துள்ளதாக விதியில் நம்பிக்கை கொள்ளுகின்றவர்கள் நொந்து கொள்ளுவதைச் சாதாரணமாகக் காண லாம். ஏன்? கவிச்சக்கரவர்த்தி கம்பன் முதல் கலியுலகுக்குக் கவிதை எழுதும் கவிஞர்கள் வரை எல்லாரும் விதியை ஒரு வில்லனைச் சிருஷ்டி பண்ணி அவனுடைய ஆதிக்கத்தில் மனித வாழ்வே நடைபெறுவ தாகப் பாடி இருக்கிறார்கள். மனித சமு தாயம் விதி என்ற தத்துவத்திற்கு என்று செவிசாய்த்ததோ அன்றைக்கே முயற்சியின் பாதை மூடப்பட்டு, வெற்றி என்ற இலக்கை அடைய முடியாது முடம் போன்று அது இருக்க ஆரம்பித்து விட்டது.

விதி என்கிற ஒரு பிசாசு பாமர மனிதன் முதல் படித்த பல மனிதர்களின் உள்ளத் திலும் உட்புகுந்து அவர்களைச் சோம் பேறிகளாக்கி வருகிறது. விதி என்னும் கொள்கையை நம்புகிறவன் எதையும் ஆராய்ந்து பார்க்கும் சிந்தனை சக்தியை இழக்கிறான். மனத்தெளிவுக்கும் அவனுக் கும் வெகுதூரம். விதி என்னும் ஏதோ ஓர் அன்னியமான சக்தி நம்மை அடக்கி ஆதிக் கம் செலுத்துவதாகப் பலர் எண்ணுகின் றனர். எப்படியெனில் படிக்கும் மாணவன் தன் பள்ளித் தேர்வில் தோல்வி காணும் போது என் விதி இப்படி ஆகிவிட்டதே என்று கலங்குகிறான். வியாபாரத்தில் நஷ் டம் காணும் வியாபாரிக்குத் தன் விதிதான் முதலில் ஞாபகம் வருகிறது. பொல்லாத நேரம் நம்மை இந்தப் பாடுபடுத்துகிறதே என நினைக்கிறான். தன் குடும்பத்தில் ஏற் படும் பல துன்பங்களுக்கும் தங்கள் தலைவிதி யின்மீது பாரத்தைப் போடுபவர்கள் மத்தி யில்தான் நாம் வாழுகிறோம். இந்த விதியின் பிடியில் சிக்குண்டு தவிப்பவர்கள் மன ஆறுதலுக்காக ஜாதகம் பார்ப்பது, கைரேகை பார்ப்பது, குறி பார்ப்பது, மையோட்டம் பார்ப்பது போன்றவற்றை நாடுகின்றனர். ஜாதகம், கைரேகை போன் றவைகள் தம்மளவில் உண்மைகளே. உள்ளபடி சொல்லுகின்றவர்கள் எத்தனை பேர் இருக்கின்றனர்? தம்மிடம் வருகிற ஆளின் தரத்தை மானசீகமாக அறிந்து கொண்டு அவர்களுக்கு எதைச் சொன் னால் அவர்கள் காசு நிறையக் கொடுப் பார்களோ அதைச் சொல்லி வயிறு வளர்க்கும் கூட்டத்தினர்தாம் இத்தகைய முறையைக் கையாண்டு பிழைக்கின்றனர். இப்போதும் மரத்தடியில், கட்டட நிழ லில் சாலை ஓரத்தில் பக்ஷி சாஸ்திரம், கிளி ஜோசியம் என்றெல்லாம் பெயர் வழங்கும் சிறுபிள்ளைத் தனமான ஜோசி

யம், பாமர மக்களைக் கவரும் ஜோசியம் ஒன்றே உளது. அங்கு வருகிற ஆசாமி பூத்துப் பைசா போட்டுத் தன் எதிர் காலப் பலனை அந்தக் கிளியிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள விழைகிறுன். அவனு டைய பெயரைச் சொன்ன மாத்திரத்தில் திறந்த கூண்டிலிருந்து வருகிற கிளி தன் முன்னே கிடக்கும் பல சீட்டுக்களை ஒதுக் கிப் பார்த்துவிட்டு ஏதோ ஒரு சீட்டைத் தன் அலகால் கவ்வித் தன் எஜமானனிடம் கொடுத்துவிட்டு அதற்குப் பரிசாக ஒரு நெல் மணியைக் கொத்திக்கொண்டு கூண்டி னுள்ளே போவதைக் காணுதார் யார்? கிளி எடுத்துத் தந்த சீட்டை வாசித்தவுடன், அதில் வந்த கடவுள் படம் காசு கொடுத்த வனுக்கு ஒரு நிறைவைத் தந்து விடுவ தைக் காண்கிறோம். தன் எதிர்காலத்தைத் தீர்மானிக்க ஒரு பறவையால் முடியுமா என்று ஆராய்ந்துபார்க்க மறுக்கிறது அந்தப் பழுக்காத அறிவு. பாமர மனிதர் களும் படித்து அறிவு வளர்ச்சியடையாத வர்களும் ஜோதிடர்களை நம்புகின்றனர். தங்களிடம் உள்ள செல்வத்தை இரட்டிப் பாக்கப் பூஜை போடும் மந்திரவாதிகளைத் தேடி அவர்கள் ஆலோசனையில் இறங்கி இறு தியில் அனைத்தையும் இழந்த பிறகுதான் அவர்களுக்குப் புத்தி வருகிறது. ஆயகலைகள் அறுபத்து நான்கில் சோதிடமும் ஒன்று. அது கணிதத்திற்கு நிகர். அந்தரங்க சுத்தி யோடு உண்மையே பேசி, பிறரிடம் எதை யும் வாங்காது உள்ளது உள்ளபடி சொல்லு கிறவர் பலன் சரியாக இருக்கும் என்று அனு பவித்தவர்கள் சொல்லுகிறுர்கள். Family Doctor இருப்பதுபோன்று Family Astrologer குடும்பச்சோதிடர்களும் நம் நாட்டில் மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை இருப்பதைக் காணலாம். டாக்டர் ரங்காச் சாரி என்ற ஒரு பிரபலமான வைத்தியர் சென்னையில் வாழ்ந்தார். காசுக்காக வாழாது சேவைக்காக வாழ்ந்த வைத்தியப் பெருந்தகை அவர். யாரிடமும் தீராத நோய் அவரிடம் வந்தால் தீரும். வெள்ளை யனே பார்த்து வியப்படைந்த மருத்துவ மேதை அவர். பொருளாசை அறவே அவ ரிடம் இல்லை. நோயாளியைப் பார்த்த வுடன் இன்ன நோய்க்கு இன்ன மருந்து என்பதை அவருடைய சுத்த மனது காட் டித்தந்தது. சோதிடர்களும், கைரேகை நிபுணர்களும், டாக்டர் ரங்காச்சாரி போன்று மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற குறிக்கோள் உடையவர் களாக இருக்கவேண்டும். பணத்தாசைக்கு அடிமைப்பட்டுப் பொருள் வாங்காது தூய வாழ்க்கை வாழ்ந்து, தெய்வீக வாழ்க்கை வாழவேண்டும். ஆனல் நாம் இன்று காண்பது என்ன? ஜோதிடம், கைரேகை போன்ற கலைகளில் முழுப் பயிற்சி பெருதவர்கள் டம்பமாகப் பெரிய விளம்பரம் போட்டு அரசியல் தலைவர்களின், திரைப்படக் கலைஞர்களின் நற்சான்றிதழை நூற்றுக் கணக்கில் வைத்துக்கொண்டு பெரிய பெரிய ஹோட்டல்களின் அறை களில் தங்கியிருந்து செய்தித் தாள்களில் பரபரப்பாக விளம்பரம் போடுகின் றனர். பல பிரச்னைகளுக்கு ஆளான மக் கள் இப்படிப்பட்ட போலிகளின் கையில் சிக்கி ஏராளமான பணத்தை இழப்பது மட்டுமன்றித் தவறுதலாக அந்தச் சோதி டன் சொன்ன கருத்தை நம்பி மனம் உடைந்து தற்கொலையும் செய்துகொள்கின் றனர். முறையான கலையைப் பாழடிக்கிற இத்தகைய கும்பல்கள் பண்ணுகிற தவறு தல்களால் அந்தக் கலை பின்னுக்குத் தள்ளப் படுகிறது. அரை குறை அறிவு ஆபத்து என்று சொல்லுவார்கள். அரை குறையாகக் கற்றுக் கொண்டவர்கள்தாம் நம் நாட்டில் உள்ளனர். ஓர் அரசனிடத்தில் நம்பிக்கை வாய்ந்த ஒரு சோதிடன் இருந்தான். அவனி டம் தன் ஆயுள் எப்போது முடியப்போகி றது என்று அரசன் சாதாரணமாகக் கேட் டான். சோதிடன் ஏடுகளைப் புரட்டினுன். சிறிது நேரம் கழித்து 'அரசே, உங்களுக்கு ஆயுள் முடிய இன்னும் ஆறு மாதங்கள் இருக்கின்றன' என்றுன் பதைபதைப்புடன். இதைக் கேட்ட மன்னனுக்கு அப்போதே உயிர் போய்விட்டது போலிருந்தது. தனக்கு இன்னும் ஆறுமாதத்தில் உயிர் போகப் போகிறது. இனி, தான் எப்படி

இருந்தால் என்ன என்று விசனப்பட்ட அரசன் படுக்கையில் படுத்துத் தன் மரணத்தைக்குறித்து வேதனைப் படலானன். அரசனின் திடீர் மாறுதல்கள் அரண்மனை வாசிகளுக்கு அதிர்ச்சி அளித்தன. அரசனுடைய மந்திரி சிறந்த நுண்ணறிவாளன். அரசனின் இந்தத் திடீர் மாற்றத்திற்குக் காரணம் என்ன என்று அரசனை வினவினன். அரசனும் ஆறுமாதத்தில் மரணம் நிகழப்போவதாகச் சோதிடன் கூறியதைச் சொன்னன். அரசனுக்கு மனமாற்றத்தை ஏற்படுத்த விரும்பிய அமைச்சர் சோதிடனை வரவழைத்தார். சோதிடனிடம் அமைச்சர் அரசனுக்கு எப்போது மரணம் வருகிறது என்று நன்ருகப் பாரும் என்ருர். சோதிடனும் திரும்பத் திரும்ப ஏட்டினைப் புரட்டிப்பார்த்துவிட்டு ''ஆறு மாதத்தில் நிச்சயம் மரணம் சம்பவிக்கும்; என் சோதிடம் ஒருநாளும் பொய்க்காது'' என்ருன். உடனே அமைச்சர் குறுக்கிட்டுச் 'சோதிடனே, உனக்கு எப்போது மரணம் வரும்? அதையும் பார்த்துச் சொல்லும்' என்ருர். தன்னைக்குறித்து ஏடுகளைப் பார்த்த சோதிடன் ''இன்னும் பன்னிரண்டு ஆண்டு கழித்து மரணம் வரும்'' என்ருன். 'மீண்டும் நன்ருகப் பாரும்' என்ருர் அமைச்சர். சோதிடனும் தான் சொன்னது சத்தியமாய் நடக்கும் என்றே வலியுறுத்தினன். உடனே அமைச்சர் உடைவாளை உருவிச் சோதிடன் தலையைச் சீவினர். ''அரசே, இதோ பாருங்கள்; பன்னிரண்டு ஆண்டு கழித்து உயிர் போகப்போகிறது என்று சொன்ன சோதிடன் பிணமாகக் கிடக்கின்ருன்.''

பன்னிரண்டு ஆண்டு கழித்து உயிர் போகும் என்று சத்தியம் பண்ணியவன் உயிர் இக்கணமே போய்விட்டது. ஆகவே அவன் பேச்சுக்குச் செவிசாய்க்காது அலுவல்களைக் கவனியுங்கள். அவன் வார்த்தை பொய் என்பதை இப்போது நிருபித்துவிட்டோம் என்ருர் அமைச்சர். இத்தகைய அரைகுறையான போலிகள் கையில் சிக்கி மனக்கலக்கம் அடைவதைவிட அதில் மனம் செலுத்தாதிருப்பது மேல். இதை வைத்துத் தான் மகாகவி பாரதியாரும் தம் புதிய ஆத்திசூடியில் 'சோதிடந்தனை இகழ்' என்று கூறுகிருர். பக்தர்கள் பகவானைச் சார்ந்திருக்கிருர்கள். கடவுளை நம்பும் அன்பர்கள் சோதிடம், கைரேகை போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டியதில்லை.

ஒவ்வொரு ஜீவனும் செய்கின்ற செயல்கள் வினைகள் என்று சொல்லப்படுகின்றன. ஒவ்வொரு செயலுக்கு ஏற்பப் பலன் உண்டு. பிறர்க்கு நலன் புரிபவர்கள் ஆற்றும் வினை நல்வினை என்றும் பிறர்க்குக் கேடு விளைவிக்கும் செயல் தீவினை என்றும் சொல்லப்படுகிறது. அவரவர் செய்த வினைப் பயனை அவரவர் அனுபவித்தே ஆகவேண்டும். வினைப்பயனிலிருந்து யாரும் தப்ப முடியாது. இதை வைத்துத்தான் ''பிறர்க்கின்னு முற்பகல் செய்யின் தமக்கின்னு பிற்பகல் தாமே வரும்' என்ருர் வள்ளுவர். முற்பகல்செய்யின் பிற்பகல் விளையும் என்று பெரியவர்கள் சொன்னது முற்பிறவியில் செய்ததாகவிருக்கலாம், அல்லது சில ஆண்டுகளுக்கு முன்பு செய்ததாகவிருக்கலாம். எப்படியிருப்பினும் அவரவர் செய்த வினையின் பயனை அவரவர் அனுபவித்தே ஆகவேண்டும். விதி என்று பொருள்படுத்தாது வினைப்பயன் என்று கருதுகிறபொழுது தீவினையைக் களையவும் நல்வினையைப் பெருக்கவும் நாம் முயலவேண்டும். நல்லவன் ஒருவன் வியாபாரத்தில் நஷ்டம் அடைகிருன். அதன்காரணம் என்ன என்று ஆராய்கிருன்; தீவினைப்பயன் என்று அவன் அறிந்தாலும் அதற்காக அவன் தளர்ச்சியடைய மாட்டான். சோர்வுறுது மீண்டும் பாடுபட்டு உழைக்கிருன். அந்த நன்முயற்சியின் விளைவாகத் தீவினை மறைகிறது.

ஒருவன் நல்ல சூழ்நிலையில் பிறப்பதற்கும், மற்ருெருவன் மோசமான சூழ்நிலையில் பிறப்பதற்கும் அவனவன் வினைப்பயனே காரணமாகும். முயலாது சோம்பலுற்றுக் கிடந்தால் நல்ல சூழ்நிலையில் இருப்பவனும் மோசமான நிலையை அடைவான். அதே நேரத்தில் மோசமான சூழ்நிலையில் இருப்பவன் முறையாக முயன்ருல் மேல்நிலைக்கு நிச்சயம் வரலாம்.

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

முன்செய்த தீவினைப்பயனின் ஆதிக்கம் இருக்கும்வரையிலும் நாம் படாதபாடு பட்டுத்தான் ஆகவேண்டும். எனினும் தீவிரமாக முயன்று நல்வினை ஆற்றித் தீவினையின் வேகத்தைத் தணிக்கலாம்; தீவினையின்ஆதிக்கம் இல்லாமலும் செய்துகொள்ளலாம்.

தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய் வருத்தக் கூலிதரும்

என்ற குறளில் திருவள்ளுவர் இதைத்தான் வலியுறுத்துகிறார். ஹெலன் கெல்லர் என்ற அம்மையார் பிறக்கும் பொழுதே செவிடு. ஆகவே ஊமையாக ஆகிவிட்டார். கண்ணும் குருடு. இத்தகையநிலை பிறவியில் அமைந்தது. ஐயோ என் விதி இப்படி ஆகிவிட்டதே! என்று மனம் ஒடிந்து போகக்கிடையாது. அவள் நிலையில் மற்றவர்கள் இருந்தால் மனம் ஒடிந்து மாண்டுபோயிருப்பர். ஆனால் அந்த அம்மையார் தனக்கமைந்த பிரதிகூலமான நிலையை அனுகூலமாக்கினர். எப்படி? முயற்சியினால் பல ஆராய்ச்சிகள் செய்து டாக்டர் பட்டம் பெற்று வாழ்வை நிறை வாழ்வாக்கினள். முயன்றால் முடியாததும் உண்டோ?

நமது ஹிந்து சமயமும், அதனுடைய கிளைகளாகப் பிரிந்த புத்தமதமும் சமண மதமும் திரும்பத் திரும்பப்புகட்டுவது இதுவே. Man is the maker of his destiny. அவனவன் தலைவிதியை அவனவனே நிர்ணயிக்கிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் இந்த நிலையில் இருப்பதற்குக் காரணம் நாமே. நம்மை இந்த நிலையில் மற்றவர் யாரும் தள்ளிவிடவில்லை. நல்லவனாகவோ, கெட்டவனாகவோ, பணக்காரனாகவோ, ஏழையாகவோ, கற்றவனாகவோ, கல்லாத மூடனாகவோ, நோயற்ற நல்ல உடலோடு இருக்கவோ, பிறந்ததிலிருந்து மரண அவஸ்தைப்பட்டுப் பிறரால் நிந்திக்கப்பட்டு இருக்கவோ காரணம் அவரவரே என்கிறது நமது ஹிந்துசமயம். ஆகவே முயற்சிக்கு முதலிடம் கொடுத்து உழைத்து முன்னேற விரும்புகிறவன் வாழ்க்கையில் எல்லாத்துறைகளிலும் முன்னுக்கு வருவான். செயலற்றுப் போர்புரியமாட்டேன் என்று சொன்ன அர்ஜுனனுக்குச் செயல்புரியும் தன்மையைக் கூறிக் கண்ணன் போருக்கு ஆயத்தப்படுத்தியது போன்று, நாம் செயல் வீரர்களாக, முயற்சிக்கு முதலிடம் தந்து காலத்தைக் கண்போன்று போற்றிக் கடுமையாக உழைப்போமானால் இகம் பரம் ஆகிய அனைத்தையும் பெறலாம். அப்படி வாழ்கின்றவனே வாழ்வாங்கு வாழ்ந்தவனாகிறான்.

பிறந்த குழந்தை சில நாட்கள் கழித்துத் தானாகக் குப்புற விழவும், பிறகு தானாகத் தவழ்ந்து செல்லவும் அதன் பிறகு எழுந்து நிற்கவும், ஓடவும் முயலுகிறது. நீரில் வாழும் உயிர்கள், பறக்கும் பறவைகள், வனத்தில் வசிக்கும் விலங்குகள் முதலியன தங்களுக்கேற்ற இருப்பிடத்தையும் தங்களுக்கு வேண்டிய உணவையும் தேடிக்கொள்கின்றன. சிங்கம் மிருகங்களுக்கு அரசனாகவிருந்தாலும் அதன் உணவுக்காக அது குகையை விட்டு வெளியே சென்று வேட்டையாடினாலொழிய அதற்கு உணவு எங்கிருந்து வரும்? விலங்குகளைக் கொன்று பச்சை மாமிசத்தைச் சாப்பிட்ட ஆதி மனிதன் தன் முயற்சியால்தான் உணவைச் சமைக்கக் கற்றுக்கொண்டான். நாள் ஆக ஆக உணவில் அறுசுவையைப் புகுத்தி அனைவரும் சுவைத்து இன்புற்று இருக்கின்றோம். முறையாக முயன்று ஆராய்ந்து தெளிந்ததால் அன்றோ இன்று நாம் விஞ்ஞான மயமான உலகில் வாழ்ந்து வருகிறோம்? சுவிட்சைத் தட்டியவுடன் விளக்கு எரிகிறது. வெளிநாட்டுச் செய்திகளை உடனுக்குடன் பார்க்கவும் கேட்கவும் டெலிவிஷன், வானொலிப் பெட்டி முதலியன தோன்றியதும் முயற்சியினாலன்றோ! விதியின் படி நடக்கட்டும் என்று முயலாது உண்டு உறங்கி வெறுமனே வாழ்ந்துவந்தால் பழைய கற்கால மனிதனின் நிலைக்குப் போய்விடுவோம்.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு என்ற பொய்யாமொழிக்கிணங்க அறவழியில் உழைத்துமுன்னேறுகிற குடும்பமும் நாட்டு மக்களும் என்றைக்கும் பெருமைக்குரிய நிலையில்இருப்பார்கள். அதுவே அடையவேண்டிய நிலையாம்.

# மூன்று சகோதரர்கள்

(சுவாமி பரானந்தர்)

மங்களபுரி என்னும் மாநகரத்தில் மதுசூதனன் என்னும் தனவந்தர் வாழ்ந்து வந்தார். அவருடைய தகப்பனர் விட்டுச் சென்ற சிறிதளவு சொத்தைத் தம் முயற்சியாலும் திறமையாலும் விருத்தி செய்தார். அவர் நல்ல உள்ளம் படைத்தவர். தம்மால் இயன்ற அளவு பொதுக்காரியங்களுக்குப் பொருளுதவி செய்தும் ஒத்துழைப்பு அளித்தும் விரைவில் நல்ல பெயர் எடுத்திருந்தார். அவருக்குக் குணநிதி, தனவர்த்தனன், பஞ்சானனன் என்று மூன்று மக்கள் இருந்தனர். மூன்று மக்களையும் நல்ல முறையில் வளர்த்தார். தாம் தம்முடைய உழைப்பாலும் முயற்சியாலும் பிதுரார்ஜிதமாக வந்த சிறிய சொத்தைப் பெருஞ் செல்வமாக வளர்த்து இருப்பதைப்பற்றி அடிக்கடி கூறுவார். ''உழைப்பை ஒருபோதும் அலட்சியம் செய்யலாகாது. வேலை ஆட்களை மட்டும் நம்பியிருக்கக்கூடாது. வேலை ஆட்கள் உழைப்பது போன்று நாமும் உழைக்க வேண்டும்; லாப நஷ்டங்களில் மனம் பேதலிப்பதும் தடுமாறுவதும் கூடாது. தொழில், நிறுவனம், வியாபாரம் போன்றவைகளில் நஷ்டத்துக்கும் கஷ்டத்துக்கும் இடமுண்டு. பிரதிகூலமான சூழ்நிலை உருவாகும் போதும் மனம் தளராது உறுதிப்பாட்டோடு எடுத்துக்கொண்ட காரியத்தைக் கொண்டு செலுத்த வேண்டும். மற்றவர்களுக்கு நம்மால் ஏதேனும் உபகாரம் இருக்கவேண்டும்'' என்றெல்லாம் புத்திமதி கூறுவார்.

மதுசூதனன் முதுமை அடைந்தார். தம் மக்களை அழைத்து, ''நான் இன்னும் அதிக நாட்கள் வாழமாட்டேன். என்னுடைய இறுதிக்காலம் நெருங்கிவிட்டது. என்னுடைய சொத்தை உங்கள் மூவருக்கும் சமமாகப் பிரித்து வைத்துள்ளேன். இறைவன் அருளை நாடியிருந்து நல்ல முறையில் தொழில் செய்து, ஊருக்கும், உலகுக்கும் உபகாரமாய் இருங்கள்'' என்று கூறிச் சொத்துக்களைப் பிரித்துக் கொடுத்தார். சில நாட்களில் அவர் இயற்கை எய்தினர்.

மதுசூதனன் காலமான பின் சில மாதங்கள் சென்றன. இளையவன் பஞ்சானனன் இச்சகம் பேசிப் பொருளை ஈர்க்கும் கயவர்களுடன் நட்புப் பூண்டான். அவனைச் சுற்றி எப்பொழுதும் ஒரு கூட்டம் இருக்கும். அவர்கள் அவனை முகஸ்துதி செய்து அவனிடமிருந்து பணத்தைப் பறித்தார்கள். சுகபோகங்களில் அவன் தன் கடமைகளை மறந்து தகப்பனரின் புத்திமதிகளையும் புறக்கணித்து வாழ்ந்தான். மூத்த மகன் குணநிதி தன் தம்பியின் போக்கைக் கண்டு மனம் சஞ்சலப்பட்டான். அவன் தன் தகப்பனர் புகட்டியபடியே தன் வாழ்க்கையை நடாத்தி வந்தான். இரண்டாம் சகோதரன் தனவர்த்தனன் பணத்தாசை கொண்டவனுக மாறிவிட்டான். பணத்தை வட்டிக்கு விட்டான். நல்ல வட்டி வாங்கினுன். பொருள் ஈட்டினுன். ஆனல் எப்பொழுதுமே பணத்தைப்பற்றியே குறியாக இருந்தான். உற்ருர் உறவினருக்கும் உதவி செய்யமாட்டான். ஊருக்கும் உலகுக்கும் உபகாரமாக விளங்குவது பற்றிய பேச்சுக்கே அவனிடம் இடம் இல்லை. இரண்டாவது தம்பியின் போக்கும் குணநிதிக்குப் பிடிக்கவில்லை.

குணநிதி ஒருநாள் தன் தம்பிமார்களை அழைத்தான். தன் தகப்பனர் வாழ்ந்த வாழ்க்கை, கூறிய புத்திமதி, பொது மக்கள் சகோதரர்களைப் பற்றிக் கொண்டிருந்த அபிப்ராயம் ஆகியவைகளை விளக்கிச் சொல்லி எதிர்காலத் திட்டத்தை விளக்கினுன். நம்முடைய தகப்பன் சொத்துக்களைப் பிரித்துக் கொடுத்துவிட்டதால், நாம் இனி ஏதும் கூட்டு முயற்சி செய்யக் கூடாது என்பது இல்லை. நாம் மனம் ஒருமித்து ஒற்றுமையாகப் பொருள் ஈட்டுவதற்குத் தொழில்களையும், ஊருக்கு நலன் தரக் கூடிய தொண்டுகளையும் செய்வோம். மூவரும் தலைக்கு ஒரு லட்சம் ரூபாய் மூலதனமாகப் போட்டுத் தந்தையின் பெயரால் 'மதுசூதனன் நற்பணி நிதி' என்ற நிதி

யினை ஏற்படுத்துவோம். அதை மூலதன மாக வைத்து ஓர் இரும்புப் பட்டரை வைப்போம். அதில் வரும் லாபத்தில் பாதியை நம் சொந்த உபயோகத்துக்கு வைத்துக் கொள்வோம். பாதியைப் பொதுக் காரியங்களுக்குப் பயன் படுத்துவோம் என்று கூறினான்.

தனவர்த்தனன் ஒத்துழைக்க மறுத்துவிட்டான். லாபம் வந்தால் தனக்குப் பாதியைத் தரவேண்டும். நஷ்டம் வந்தால் வட்டியுடன் தனக்கு முதலைத் திருப்பித்தர வேண்டும் என்று அவன் விதண்டாவாதம் செய்தான். இளையவன் பஞ்சானனன் அப்பொழுது நல்ல மனநிலையில் இருந்தான். அவனைக் கெடுப்பார் யாரும் அப்போது அங்கு இல்லை. உடனே தன் மூத்த அண்ணனிடம் ''அண்ணா, நீங்கள் அப்பாவைப் போன்றே வாழ்கின்றீர்கள். என்னுடைய வாழ்க்கையைத் தங்களுடைய வாழ்க்கையைப்போன்று என்னால் அமைத்துக்கொள்ள இயலவில்லை. ஏதோ பொருந்தாத போக்கில் போவதுமட்டும் சில நேரங்களில் தெரிகிறது. எனினும் அதிலிருந்து விலகமுடியவில்லை. என்னிடம் கைவசம் தற்போது பணம் இருக்கிறது. உடனடியாக உங்களிடம் தந்துவிடுகிறேன். நஷ்டம் வந்தால் என்னைத் தொந்திரவு செய்யாதீர்கள். இத்துடன் தாங்கள் திருப்தியடையவேண்டும். லாபம் வந்தால், எனக்குத் தேவைப்படும் போது அதைத் தாருங்கள்'' என்று சொல்லி உடனடியாக ஒரு லட்சம் ரூபாயைத் தன் மூத்த அண்ணனிடம் கொடுத்துவிட்டான். இரண்டாவது தம்பி தனவர்த்தனன் போக்கில் எம்மாறுதலையும் ஏற்படுத்த குணநிதியினால் இயலவில்லை. ''சரி, உன் போக்கில் போ. என்னால் மாறுதல் ஏதும் செய்ய முடியவில்லை. இறைவன் விட்ட வழி'' என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டான்.

வருடங்கள் பல கழிந்தன. குணநிதி தன் தகப்பனார் பெயரில் ஏற்படுத்திய நிதியில் தன் நண்பர்கள் இருவரையும் சேர்த்துக்கொண்டான். இரும்புப் பட்டரையைத் திறம்பட நிர்வாகம் செய்தான். அதில் நிறைய லாபம் கிடைத்தது. தன் திட்டப்படியே லாபத்தில் பாதியைப் பரோபகாரமான செயல்களில் செலவழித்தான். மீதிப் பாதியைத் தொழில் விருத்திக்கே செலவிட்டான். சாதாரண இரும்புப் பட்டரையாக இருந்தது பெரிய உருக்குத் தொழிற்சாலையாக வளர்ந்து விட்டது. பலபேர் அதில் வேலை பார்த்தார்கள். குணநிதி அவர்களுக்கு நல்ல சம்பளமும் வாழ்க்கை வசதிகளும் செய்து தந்தான். பொது மக்கள் குணநிதியை மிகவும் புகழ்ந்து பாராட்டி அவனுக்கு மரியாதை செலுத்தி வந்தனர்.

மங்களபுரியின் ஆட்சி மாறியது. புதிய ஆட்சியாளர்கள் ஒரு சட்டம் கொண்டுவந்தார்கள். ''நாட்டு மக்கள் எல்லாருடைய சொத்துக்களையும், கணக்கு வழக்குகளையும் சோதனை செய்யப்போகிறோம். அபரிமிதமான லாபம், கொள்ளை வட்டி இவைகளால் ஈட்டப்பட்ட செல்வம், கணக்கில் காட்டப்படாமல் இருக்கும் கறுப்புப்பணம் போன்றவைகள் பறிமுதல் செய்யப்படும்'' என்று அறிவித்து அதன்படி செயல்பட்டனர். தனவர்த்தனன் கொள்ளை வட்டி வாங்கிய அனைத்தையும் கறுப்புப்பணமாக வைத்திருந்தான். அவனிடம் கடன் பட்டுத் துயரத்துக்கு உள்ளானவர்கள் ஆட்சியாளரிடம் முறையிட்டனர். அவனுடைய சொத்துக்கள் அனைத்தையும் ஆட்சியாளர்கள் பறிமுதல் செய்து விட்டனர். ஒரே நாளில் தன் செல்வத்தை இழந்து அவன் ஓட்டாண்டி ஆகி விட்டான்.

இளையவன் பஞ்சானனன் தன் மூத்த அண்ணனிடம் ஒரு லட்சம் ரூபாய் கொடுத்ததைக் கூட மறந்து விட்டான். அவனுடைய பொருந்தாத நண்பர்களும் அவன் சொத்துக்கள் அனைத்தும் காலியாகும் வரை அவனுடனேயே இருந்தனர். அவனுடைய பணம் கரைந்து விட்டது என்பதை அறிந்த அவர்கள் ஒவ்வொருவராக அவனை விட்டு நீங்கினர். அவன் பிறர் உதவியை நாடத் தயங்கி வறுமையால் துன்புற்றான்.

தன் தம்பிமார்களின் நிலையைக் கண்டு குணநிதி மனம் நெகிழ்ந்து மீண்டும் அழைத்தான். செல்வச் செருக்கில் இருந்த தனவர்த்

தனன் இப்பொழுது அடக்கமும் ஒடுக்கமும் உடையவனாகத் தலைவணங்கி நின்றான். பஞ்சானனன் தன் மூத்த அண்ணனைக் கைகுவித்து நன்றிக் கண்ணோடு நோக்கினான். குணநிதி பஞ்சானனனைப் பார்த்துச் சொன்னான்: "தம்பி, இப்படியெல்லாம் நேரும் என்று நினைத்துத்தான் நான் செயல்பட்டேன். இன்றிலிருந்து நீ உருக்காலைக்கு வா. வரவு செலவு கணக்குகளைச் செவ்வையாகப் பார்க்க நம்பிக்கையான ஆள் தேவைப்படுகிறது. உன்னுடைய பங்குப் பணம் இப்பொழுது பல மடங்கு வளர்ந்துள்ளது. பங்குப் பணத்தையும், கை நிறைய நான் தரும் சம்பளத்தையும் வைத்துக் கொண்டு நன்றாக வாழ்வாய்" என்றான்.

தனவர்த்தனனைப் பார்த்து "உனக்கும் தொழிற்சாலையில் ஒருவேலை போட்டுத் தருகிறேன். உனக்கு இங்குப் பங்குப்பணம் இல்லாததால் பொறுப்பான உத்தியோகம் தர முடியாது. வேலை செய்யும் கூலியாட்களைப் போன்று ஏதேனும் சம்பளம் பெற்றுக் கொள்" என்றுசொன்னான். தன் தம்பிமார்களுக்கு இந்த உபகாரமாவது செய்ய முடிந்ததே என்று எண்ணி குணநிதி திருப்தியடைந்தான். தங்களை எப்படியோ நல்வழியில் வாழ வழி செய்து தந்த மூத்த அண்ணனை நன்றியுணர்வோடு கைகூப்பி வணங்கிவிட்டு இரு தம்பிகளும் விடைபெற்றனர்.

---

## அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு

ஸ்ரீ தாயுமான சுவாமிகள் சுமார் இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டில் தோன்றிய சிறந்த தவப்புதல்வராவார். திருமூலர் மரபில் வந்த மௌனகுருவால் ஆட்கொள்ளப்பட்டவர். அவர் இறுதியில் தம் யாக்கையை ஒதுக்கித்தள்ளி விட்டுப் பரத்தில் ஒன்றாகக் கலந்த இராமநாதபுரத்தில் அவருக்கு ஆலயம் ஒன்று எழுப்பித் தாயுமானவர் சிலை ஒன்று வைத்து அதற்கு நித்திய பூஜை செய்துவரும் பணியைத் தபோவனம் மேற்கொண்டுள்ளது. ஆங்கு ஆண்டுதோறும் தாயுமானவர் சமாதி அடைந்த நட்சத்திரத்தன்று சிறப்பான முறையில் தாயுமானவர் குருபூஜை விழாவையும் தபோவனம் நடாத்தி வருகிறது.

தாயுமானவர் பாடல்கள் யாவும் உபநிஷதங்கள் கூறுகின்ற பரதத்துவங்கள் அடங்கப் பெற்றவை. தபோவனத்திலிருந்து வெளிவரும் தர்ம சக்கரம் தாயுமானவர் பாடல்களுக்கு விளக்கம் கொடுத்து வருகிறது. மேலும் தமிழ்நாட்டில் ஆங்காங்கு நடக்கும் அந்தர்யோகங்களில் தாயுமானவர் பாடல்கள் விளக்கப்பட்டு வருகின்றன.

பள்ளி மாணாக்கர்கள் தாயுமானவர் பாடல்களை மனப்பாடம் செய்வதற்கு அன்பர்கள் ஊக்கம் தர வழி செய்யவேண்டும். அந்தர்யோகம் நடத்தும் அன்பர்களோ மற்ற அன்பர்களோ தங்கள் பகுதிகளிலுள்ள மாணாக்கர்களுக்குப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மூலம் தெரிவிக்க வேண்டியதாவது :

"தாயுமானவர் பாடல்களுள் எட்டு வரிகளுடைய பாடல்களாக இருந்தால் இருபத்தைந்து பாடல்களையும், நான்கு வரிகளுடைய பாடல்களாக இருந்தால் ஐம்பது பாடல்களையும், இரண்டு வரிகளுடைய கண்ணிகளாக இருந்தால் நூறு கண்ணிகளையும் அல்லது அகவல், வண்ணம், ஆனந்தக்களிப்பு ஆகிய தலைப்பிலுள்ள எல்லாப் பாடல்களையும் மனப்பாடம் செய்து ஒப்புவிக்கின்ற மாணவர்களுக்கு ரூபாய் இருபத்தைந்து மதிப்புள்ள தபோவன வெளியீட்டுப் புத்தகங்கள் பரிசாக அளிக்கப்படும்."

ஆண்டுக்கு ஒருமுறை அந்தர்யோக நாளிலோ, அதற்கு அடுத்த நாளிலோ விழா அமைத்து ஒப்புவித்த மாணவர்களுக்குப் பரிசு வழங்கலாம். இக் கைங்கரியம் ஒரு ஞானயக்ஞமாகும். ஊக்கத்துடன் அன்பர்கள் இப் பணியை மேற்கொள்வார்களாக.

---

# ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-172

954. शम्भुमोहिनी சம்புமோஹினீ — சிவனாரை மோஹமடையச் செய்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

சம்பு என்னும் சொல் சிவனாரைக் குறிக்கிறது. உயிர்களுக்கு நலன் செய்பவன் என்பது அதன் பொருள். சிவனார் தாமே ஜிதேந்திரியன் என்னும் பெயர் படைத்தவர் ஆகின்றார். காம தகனம் பண்ணிய பின்பே அவர் அம்பிகையை மணந்துகொண்டார் என்பது கோட்பாடு. அங்ஙனம் ஐம்பொறிகளையும் வென்ற பின்பே அவர் அம்பிகைக்கு மணாளன் ஆகின்றார். அத்தகைய ஜிதேந்திரியனுக்கும் இடையிடையே மோஹம் என்னும் காற்றடிக்கிறது என்றால் ஜீவர்களுடைய கதி என்னாவது என்னும் கோட்பாட்டை இந்த நாமம் தெளிவுறுத்துகிறது.

அன்னை பராசக்தி தானே ஜகன் மோகினியாக இருந்துகொண்டு உயிர்களனைத்தையும் காம வலையில் கட்டி வைத்திருக்கிறாள். அத்தகைய உயிர்கள் பரமனை அடைய விரும்பினால் பரமன் செய்த செயல் ஆகிய காமதகனம் என்னும் அரிய பெரிய செயலை அவர்களும் செய்தாகவேண்டும். இல்லையேல் பிறவிப் பெருங்கடலினின்று நீந்திக் கரையேற அவர்களுக்கு இயலாது. அதன் பொருட்டு முமுக்ஷுக்களாக இருக்கின்ற ஜீவர்கள் அன்னையைச் சரண்புகுதல் வேண்டும். அன்னையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம். வரங்களனைத்திலும் சாலச் சிறந்தது நிராசையில் நிலைநிற்பது. அறவே காமதகனம் செய்தவர்களுக்கே இது சாத்தியமாகிறது. காமநோய்க்கு உட்பட்டுக் கிடக்கின்றவர்களுக்கு அந்த நோயை அகற்ற ஒருபொழுதும் சாத்தியப்படாது.

காம நோயை அகற்றியவனே நிறை மனிதனாகிறான் என்று பரமஹம்சதேவர் திரும்பத் திரும்ப வற்புறுத்திச் சொல்லுகின்றார். அதை அகற்றுதற்கேற்ற உபாயத்தையும் மக்களுக்கு அவர் காட்டியுள்ளார். அவர் பகர்வதாவது: 'தெய்வத்தோடு மனிதன் வேண்டியவாறெல்லாம் இணக்கம் வைத்துக் கொள்ளலாம்.' ஆட்கொள்ளும் தெய்வத்துக்கு அடிமை பூண்டு தொண்டு புரிதல் அவனோடு வைக்கிற இணக்கங்களுள் ஒன்றாகிறது. இந்த இணக்கத்துக்குத் தாஸ்ய பாவம் அல்லது ஆண்டான் அடிமை என்னும் நாமம் வந்தமைகிறது. இறைவனோடு தோழமை பூணலாம். இரண்டு தோழர்களுக்கிடையில் உண்டாகிற பரஸ்பர உதவியும் நட்பும் இந்த முறைமைக்குப் பெரிய ஆதரவு தருகின்றன. ஆனால் பரமஹம்சர் கையாண்ட முறையோ வாத்ஸல்ய பாவனை. தெய்வத்தைத் தம் தாயாகவும் அந்தத் தாய்க்கு ஏற்ற சிறு குழந்தையாகவும் அவர் தம்மை வைத்துக்கொண்டார். இத்தகைய இணக்கமே தெய்வத்தோடு வைக்கின்ற இணக்கங்கள் அனைத்திலும் சாலச்சிறந்தது என்று அவர் பாராட்டுகிறார். தாம் காமதகனத்தில் அடைந்துள்ள வெற்றியைக் குறித்து இங்ஙனம் பகர்கின்றார்: 'அன்னை பராசக்தியின் பாங்கோவெனில் அவள் சம்புமோஹினியாகவும் ஜகன்மோஹினியாகவும் இலங்குகின்றாள். அவளுடைய மோகவலையினின்று தப்பித்துக்கொள்ள சிவனாரே திண்டாடுகிறார் என்றால் மற்றவர்களைப் பற்றி என்ன என்றுரைப்பது? அத்தகைய அம்பிகைக்கு என்னை நான் செல்லக் குழந்தையாகவே யாண்டும் வைத்துக்கொண்டேன். தன் குழந்தையை மோகத்துக்கு உட்படுத்த எந்தத் தாய்தான் துணிவாள்? ஆகவே அன்னையோடு கொள்ளுகிற இணக்கங்களுள் தலைசிறந்த இணக்கமாக இருக்கின்ற சிறு குழந்தையின் நிலையில் நான் என்னை வைத்துக் கொண்டு அன்னையின் அருளுக்குப் பாத்திரமானேன். ஆத்ம சாதனத்தில் வெற்றிகரமாக முன்னேற்றம் அடைய விரும்புகிறவர்கள் நான் கையாண்ட முறையைத் தாங்களும் கையாண்டு வருவார்களாக.'

955. धरा தரா — மண்ணுலக மயமாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

மக்களாகிய நாம் அறிகிற உலகங்களுள்

நமக்குக் கண்கூடாகவும் இருப்பிடமாகவும் அமைந்திருப்பது இந்த மண்ணுலகம். இதில் நமக்குப் புலனாகும் மகிமைகளனைத்தும் அன்னை பராசக்தியின் மகிமைகளேயாம். பொறுமைக்குப் பூவுலகம் என்பது கோட்பாடு. மண்ணுலகைச் சரியாகப் பயன் படுத்துகிறவர்களும் முறைதவறிப் பயன் படுத்துகிறவர்களும் ஈண்டு இருக்கின்றனர். இருதரத்தாரையும் ஒரே பாங்கில் மண்ணுலகம் தாங்கி வருகிறது. அறியாமையினால் கேடு செய்கின்றவர்களுடைய கேட்டைப் பொறுமையாக நிலவுலகம் திருத்தியமைத்து வருகிறது. நிலவுலகை நல்வழியில் நல்ல முறையில் பயன்படுத்துகிறவர்களுக்கு ஏற்ற நல்ல பலனையும் பராசக்தி அளித்து வருகின்றாள். செழிப்பற்ற இடங்களைப் படிப்படியாகச் செழிப்புற்ற நிலமாகத் திருத்தியமைப்பது நிலமகளின் அரிய பெரிய செயலாகும்.

அருளுக்கு இருப்பிடங்களாகிய புண்ணிய க்ஷேத்திரங்களை வேண்டியவாறு இந்நில வுலகில் காணலாம். சான்றோர்கள் வசித்து வரும் இடங்களும் தவம் புரியும் இடங்களும் காலாந்தரத்தில் புண்ணிய க்ஷேத்திரங்களாக வடிவெடுத்திருக்கின்றன. ஆங்காங்கு அமைந்துள்ள அன்னையின் அருளே அதற்குக் காரணம் எனலாம்.

மண்ணுலகிலே அன்னை பராசக்திக்குச் சிறப்பான உறைவிடங்களாக 51 க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. அவை யாவற்றையும் தாங்கிக்கொண்டிருப்பவள் நிலமகள். ஆதாரமில்லாது எங்குமே ஆதேயம் வந்து அமையாது. பராசக்திக்குரிய ஐம்பத்தொரு புண்ணிய க்ஷேத்திரங்களும் நிலமகளால் தாங்கப் பெற்றவைகளாக அமைந்திருக்கின்றன. அவை யாவுக்கும் நிலமகளே ஆதாரமாகின்றாள். அன்னையிடத்துள்ள இந்த மகிமையை எண்ணிப்பார்ப்பது நல்ல தியானமாகும்.

956. धरसुता தரஸுதா— ஹைமவதீ அல்லது ஹிமவான் செல்வி என்பது இந்த நாமத்தின் பொருள்.

நிலவுலகுக்கே அழகைத்தரும் திலகமாக அமைந்திருப்பது வரைராஜன் அல்லது ஹிமவான். அன்னவனுடைய பெருமையை எடுத்துப் பகர வந்த கிருஷ்ண பரமாத்மா, 'ஸ்தாவரங்களுள் ஹிமாலயமாக நான் இருக்கிறேன்' என்று இயம்புகின்றார். அத்தகைய மலை வேந்தனுக்குச் செல்வியாக அன்னை பராசக்தி அவதரித்தாள். பர்வதராஜனுடைய செல்வியாகப் பிறந்ததனால் பார்வதி என்னும் பெயர் அவளுக்கு வருவதாயிற்று. ஹிமவானுடைய செல்வியாகப் பிறந்ததனால் ஹைமவதீ என்னும் பெயரும் அவளுக்கு வந்து அமைந்தது.

ஐம்பூதங்களுள் ஸ்தூலமாகவும், கடைசியானதாகவும் இருப்பது மண் அல்லது பிருதிவி. இந்த மண்ணினின்று பராசக்தியே வடிவெடுத்து வந்திருக்கிறாள் என்றால் சிருஷ்டியில் மேலானது என்றும் கீழானது என்றும் வேறுபாடு பரநோக்கத்தோடு பார்ப்பவர்களுக்கு இல்லை என்பது கோட்பாடு. உலகனைத்தும் ஆனாய் நீயே என்னும் நிறைமொழிக்கு இலக்காக அமைந்திருப்பவள் பார்வதிதேவி. அவளே அனைத்துமாக இலங்கிக் கொண்டிருக்கிறாள் என்னும் பரநாட்டத்தை வளர்ப்பவர்கள் பாக்யவான்களாகின்றார்கள்.

ஏனென்றால் அத்தகைய சாதனத்தின் வாயிலாக அன்னவர்கள் நிலமகளுக்கேற்ற நன்மக்களாகப் பரிணமிக்கின்றனர்.

957. धन्या தன்யா—எண்ணியது எண்ணியாங்கு எய்தப் பெற்றவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

உயிர் வகைகளனைத்தும் விதவிதமான ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ளுவதற்குப் பிறப்பெடுக்கின்றன. அவ் ஆசைகளுள் கீழானவைகளும் உண்டு, மேலானவைகளும் உண்டு. கீழான ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளுதலின் வாயிலாக மனிதன் பெரிதும் கீழ்மையடைகிறான். அத்தகைய மனிதனைத் தன்யன் என்று கூறலாகாது. பதிதன் என்றே அவனைப் பகரவேண்டும். மேலான ஆசைகள் பாராட்டுதற்குரியவைகள். அத்தகைய மேலாம் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு முயன்று வருகின்றவர்களுக்கெல்லாம் அன்னை பராசக்தி தர்மத்துக்கு ஒத்துள்ள நலனை நல்குகின்றாள்.

ஆதலால் அவள் தன்யா எனப் பாராட்டப் பெறுகின்ருள்.

அன்னை பராசக்தி பிரபஞ்சத்திலுள்ள அனைத்துக்கும் உரிமை படைத்தவளாக இருக்கின்ருள். அவளுக்குச் சொந்தமல்லாதது வையகத்தில் ஏதுமில்லை. அனைத்தையும் உடைத்திருப்பதுமல்லாது அவைகளை முன்னிட்டு அவள் திருப்தியுடனும் இருக்கிருள். இக்காரணத்தை முன்னிட்டு அன்னை பராசக்தி தன்யா என அழைக்கப் பெறுகின்ருள்.

தனத்தை நாடுவது மக்களின் இயல்பு. அதை நாடுபவர்களில் பெரும்பான்மையோர் முறை தவறி நடந்து கொள்ளுகின்றனர். அதற்குக் காரணம் விரைவில் வெற்றியை அவர்கள் காண விரும்புகின்றனர். ஆனுல் அன்னவர்களுக்கு ஊதியம் எவ்வளவு விரைவில் வாய்த்ததோ அவ்வளவு விரைவில் அது அழிந்துபட்டும் போகிறது. அத்தகைய முயற்சி உடையவருக்கு அன்னையின் அனுக்ரஹம் வாய்ப்பதில்லை. முறையாக முயலுகின்றவர்களுக்கு அவள் சிறிது சிறிதாகச் செல்வத்தைக் கொடுத்துப் பிறகு அதைக் காப்பாற்றுவதற்கான முறைமையையும் வழங்கியருளுகின்ருள்.

மேலான லட்சியம் ஒன்றை மானுடன் ஒருவன் அடையப் பெறுவானுகில் அன்னவனுக்கு 'அடிக்கிறது யோகம்' என உலகத்தவர் இயம்புகின்றனர். நல்லார்க்கு அத்தகைய யோகத்தை வழங்கவல்ல யோகினியாக அன்னை பராசக்தி இலங்குகின்ருள். அவள் அருளைத் துணையாக வைத்துக்கொண்டு முயலுகின்றவர்களிடத்து ஒழுங்குப்பாடு நிறைந்திருக்கிறது. 'நெறியை நன்கு கடைப்பிடி; குறி தானே வந்தமைகிறது' என்பது கோட்பாடு. நெறியில் ஒழுங்குப்பாடு இருக்குமிடத்து அது மனதில் திருப்தியையும் அமைதியையும் உண்டுபண்ணுகிறது. குறியை அடையப்பெற்றுன பிறகு அங்கே அமைதியும் திருப்தியும் நிலவுகின்றன. ஆகவே தொடுத்த கர்மங்கள் மங்களகரமாக நிறைவேறி அன்னையின் அருளால் யோகசித்தி அடையப்படுகிறது.

நேர்மையான வாழ்வு வாழ்கின்றவன் அதன் விளைவாக இவ்வையகத்தை விட்டு அமைதியுடன் மறுமை எய்துகிருன். நிலவுலக வாழ்விலே மனிதன் பெறுகிற பேறுகளனைத்திலும் தலை சிறந்ததாயிருப்பது இறுதிக் காலத்தில் மனத்திருப்தியுடன் தியான மூர்த்தியாக இருந்துகொண்டு உடலை உகுத்தலாம். அன்னையினிடத்துப் பக்தி பூண்டு வாழ்ந்து வருகின்றவர்களிடத்துப் பெறுதற்கரிய பெரிய பேறு வந்தமைகிறது. அப்பெரு மக்களுக்கு மறுபிறப்புக் கிடையாது. ஏனென்ருல் மறுபிறப்புக்கு ஏதுவாயுள்ள ஆசை ஏதும் அன்னவர் உள்ளத்தில் உருவெடுப்பதில்லை. அன்னையின் திவ்விய சொரூபத்திலேயே அந்திய காலத்தில் அன்னவர்களின் உள்ளம் ஒடுங்குகிறது. இத்தகைய பெரு நிலையை நலன் நிறைந்த ஆத்ம சாதகர்களுக்கு அன்னை எடுத்து வழங்குவதால் அவளுக்குத் தன்யா என்னும் மங்களகரமான நாமம் அமைந்திருக்கிறது.

## சூதாட்டம்

சூதும் வாதும் வேதனை செய்யும். பிறர் பொருளை முறைதவறிக் கைப்பற்றுவது சூதாட்டம். அப்படிச் சம்பாதித்த செல்வம் நிலைத்திராது. சூதாட்டம் பொல்லாதது என்பது தொன்று தொட்டு நிரூபிக்கப்பட்டு வந்துள்ளது.

பழங்காலத்தில் பாண்டவர்களும், கௌரவர்களும் பகடை என்னும் சூதாட்டம் விளையாடி நாட்டைப் பாழ்படுத்திஞர்கள். இக்காலத்தில் நம்மவர்கள் பரிசுச்சீட்டு என்னும் சூதாட்டத்தையும் குதிரைப் பந்தயம் என்னும் சூதாட்டத்தையும் செய்து வருகிருர்கள். இவைகளின் விளைவு கேடு. நல்லார் இத்தீங்குகளினின்று விலகியிருப்பார்களாக. பொதுநலனுக்காகவென்றும் இவைகளில் ஈடுபடலாகாது. இவைகளில் கருத்துச் செலுத்தாதிருக்குமளவு நலத்தை நாம் வளர்த்தவர்களாவோம்.

# ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (336) **யாழ்ப்பாணத்திலே மரணமடைந்த வீடுகளில் திருமுறை போன்ற புனிதமான நூல்களை ஓதலாகாது என்றும் அப்படி ஓதினால் பாபம் உண்டு என்றும் இந்து சமயத் தலைவர் ஒருவர் பகர்ந்துள்ளார். இக்கருத்து மக்கள் உள்ளத்தில் ஐயத்தைக் கிளப்பியுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் மக்கள் செய்யவேண்டியது யாது என்பதைத் தெளிவுபடுத்தும்படி வேண்டுகிறோம்.**

பிறப்பெடுத்துள்ள ஒவ்வோர் உயிரும் மரணமடைந்தே ஆகவேண்டும். பகலைத் தொடர்ந்து இரவு வருவது போன்று பிறப்பைத் தொடர்ந்து சாவும் நிகழ்வது திண்ணம். இது இயற்கையின் கூறு. இதை யாரும் தவிர்க்க முடியாது. இறைவனுடைய கிருத்தியங்கள் ஐந்து உள. அவை முறையே படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்பனவாம். வடமொழியில் இவை சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அனுக்ரஹம் என்னும் பெயர் பெற்றுள்ளன. மூர்த்தி ஒருவர், அவருக்குக் கிருத்தியங்கள் ஐந்து. அந்தந்தக் கிருத்தியத்துக்கேற்ற பெயர் அதே மூர்த்திக்கு வந்து அமைகிறது. துடைத்தல் செயலைச் செய்கின்றபொழுது ஈசனார் ருத்ரன் என்னும் பெயர் பெறுகிறார். அதற்கேற்பச் சுடுகாட்டை ஸ்மசானம் என்றும், ருத்ர பூமி என்றும் சொல்லுகிறோம்.

உயிர் வகைகள் வாழ்க்கையிலே பற்றுதல் மிக வைத்திருக்கின்றன. ஆகையால் அவை யாவும் மரணத்துக்கு அஞ்சுகின்றன. மனிதனும் மரணத்துக்கு அஞ்சுகிறான். ஆனால் மரணத்தின் உட்பொருளை மனிதனே ஆராய வல்லவன். ஏனைய உயிர்களுக்கு மரணத்தின் உட்பொருள் விளங்கமாட்டாது. மரணம் உறக்கத்துக்கு நிகர். உடல் எடுத்து இருப்பவர்களுக்கு நனவு நிலை இன்றியமையாததாய் இருப்பது போன்று உறக்கமும் இன்றியமையாததே. நனவு நிலைக்கு வேண்டிய வசதிகளை மனிதன் செய்து கொள்வது போன்று நல்ல உறக்கத்துக்கு வேண்டிய நிலையையும் மனிதன் செய்து கொள்ளுகிறான். அதற்கு நிகராக நன்கு வாழ்ந்திருக்கக் கற்றுக்கொள்ளுகிற மனிதன் நேரடியாகவோ மறைமுகமாகவோ மரணத்தை ஏற்றுக்கொள்ளவும் தன்னை ஆயத்தப்படுத்தவேண்டும். பரஞானத்துக்கு மரண வித்தை என்பது மற்றொரு பெயர். மழைக் காலத்துக்கு வேண்டிய உணவு வசதிகளை மனிதன் மட்டும் அல்லன், மற்ற உயிர்களும் முன்கூட்டியே ஆயத்தப்படுத்திக்கொள்ளுகின்றன. அதற்குமேல் மரணத்துக்கும் அறிஞன் ஒருவன் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்கின்றான்.

காசிக்கு மஹா ஸ்மசானம் என்பது ஒரு பெயர். அந்திய காலத்தில் காசியில் உடலை உகுப்பது சிறந்த செயல் என்று ஹிந்து மதத்தை அனுஷ்டிக்கிறவன் நம்புகிறான். அந்த நம்பிக்கைக்கேற்பப் பழங்காலந் தொட்டு இன்றைக்கு, இனி வருகிற என்றைக்குமே மரணத்தை நாடிக் காசிக்குப் போகும் பெருங்கூட்டமான நன்மக்கள் இருந்து வருவார்கள். அக் காசியிலே காலமெல்லாம் இருபத்து நான்கு மணிநேரமும் பிரேதங்கள் தகனமாகிக்கொண்டேயிருக்கின்றன. சவங்கள் தீக்கிரையாகின்ற வேளையில் துறவியர்கள் அருகில் அமர்ந்து தியானம் பண்ணிக்கொண்டிருப்பார்கள். பிறகு நேரே காசி விசுவநாதர் ஆலயத்துக்குச் சென்று சிவலிங்கத்தைத் தொட்டு வணங்கிவிட்டு அவரவர் இருப்பிடத்துக்குப் போவார்கள். சுடுகாட்டுக்குப் போவது தீட்டு என்றால் காசிக்குப் போவதும் அங்கு வாழ்ந்திருப்பதும் பெருந்தீட்டாகும். ஆனால் உண்மை அது அன்று.

பிறப்பெடுப்பது வாய்ப்பு என்றால், நல்ல பாங்கில் மரணமடைவது அதை விடப் பெரிய வாய்ப்பாகிறது. காசியிலே காலமெல்லாம் எல்லா மொழிகளிலும் நல்ல நூல்கள் ஓதப்பட்டு வருகின்றன. அப்படி ஓதுவதுதான் முறை. மரணத்தை முன்னிட்டு ஓதுதலை நிறுத்துதல் என்றால் காசியில் ஒருபொழுதும் புனித நூல் ஓதப்

பெறமாட்டாது. ஆனால் சாவும் சாஸ்திரங்களை ஓதுதலும் காலமெல்லாம் காசியில் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. சவங்களைத் தூக்கி வருகிறவர்கள் இறைவனுடைய நாமத்தை ஓதுகிறார்கள். வேதம் ஓதுகிறார்கள். உபநிஷதங்கள் ஓதுகிறார்கள் ஏனைய புனித நூல்களையும் ஓதுகிறார்கள். அப்படி ஓதாதிருப்பது முறையன்று என்று காசியில் இருப்பவர்கள் கருதுகிறார்கள். இதற்கு மாறாக யாழ்ப்பாணவாசி ஒருவர் மரணகாலத்தில் திருமுறை ஓதலாகாது என்று பகர்வாராகில் அவர் வாழ்க்கைத் தத்துவத்தை அறிந்தவர் அல்லர்.

மரணத்தைப் போற்றுவதும் இறைவனைப் போற்றுவதும் ஒன்றே. காலகாலனாக இறைவனார் இருந்துகொண்டு உயிர்வகைகளை மரணத்தின் வாயிலாக எடுத்து மறைத்தல் என்னும் செயலை ஓயாது செய்து வருகிறார். ஆதலால் மரணத்தை முறையாகப் போற்ற வல்லவனே மரணத்தை முறையாக ஏற்றுக்கொள்ள வல்லவனாகின்றான். அன்னவனே இறுதியில் மரணமில்லாப் பெருவாழ்வுக்கும் தகுதியுடையவன் ஆகின்றான்.

அற்றது பற்றெனில் உற்றது வீடு என்பது முதுமொழி. உலகப்பற்று அறுபட்டுப் போவதற்குத் தெய்வப்பற்றை வளர்க்க வேண்டும். அதற்கேற்ற நல்ல சந்தர்ப்பங்கள் சில அமைகின்றன. பற்றற்ற நிலைக்கு வைராக்கியம் என்பது ஒரு பெயர். வைராக்கியங்களுள் ஸ்மசான வைராக்கியம் மிக முக்கியமானது. காசியில் வசித்து வருகிறவர்கள் செத்துப்போன சொந்தக்காரருடைய பிரேதத்தைத் தாங்களே தகனம் பண்ணவேண்டும் என்பது ஓர் ஐதிகம். அது இன்றைக்கும் நிகழ்ந்து வருகிறது. பற்றுதல் நீங்குதற்கு உற்றதோர் உபாயம் இதுவாம். அவ்வேளையிலும் கடவுள் நாமத்தை ஓதவேண்டும். திருமுறைகள் போன்ற நல்ல நூல்களையே ஓதவேண்டும். உலகப்பற்றை ஒழிப்பதற்கும் தெய்வப்பற்றை வளர்ப்பதற்கும் இதுவே உற்ற உபாயமாம்.

**கேள்வி: (337)** ***தர்ம சக்கரம் துந்துபி ஐப்பசி இதழில் முக்தி மனிதனுக்கு மட்டுமே சாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ரமண மகரிஷி தன்னுடன் இருந்த லக்ஷ்மி என்னும் பசுவும் பிற விலங்குகளும் முக்தியடைந்ததாகத் தெரிவித்துள்ளாரே, இது எங்ஙனம் சாத்தியமாகும்?***

சான்றோருடைய தூய அன்புக்கு உயிர்களனைத்தும் இலக்காகின்றன. அவைகளும் தயங்காது சான்றோர் சன்னிதிக்கு வந்து செல்லுகின்றன. லக்ஷ்மி என்னும் பசுவும் குரங்கு இனமும் வேறு உயிர் வகைகளும் ஸ்ரீ ரமண மகரிஷி முன்னிலைக்கு வந்து போவதை நம்மில் பலர் பார்த்திருக்கிறோம். லக்ஷ்மி என்னும்பசு உரிமையோடு அவர் முன்னிலைக்கு வந்து நாள்தோறும் வாழைப்பழம் ஒன்றை ஏற்றுச் செல்வதைப் பலபேர் பார்த்திருக்கிறார்கள். தூய அன்புக்கு இங்ஙனம் இலக்காவது இயற்கையின் கூறு.

சான்றோர் அன்புக்கு இலக்காவது வேறு. பிரபஞ்ச வாழ்வு அநித்தியமானது என்பதை அறிந்துகொள்வது வேறு. நிலத்துக்குரியவன் நாள்தோறும் வயலுக்குச் சென்று நெற்பயிரை அன்போடு பார்த்து வருவானாகில் அது நன்கு வளர்ந்து வரும். ஆனால்அவன் அதற்கு உபதேசம் செய்தால் அது அவன் உபதேசத்தைப் புரிந்துகொள்ள முடியாது. மனித நிலைக்குக் கீழ்நிலையிலுள்ள உயிர்கள் அன்பைப் புரிந்துகொள்ளும். ஆனால் விவேகம் அவைகளுக்கு இல்லை. உலகில் வாழ்ந்துவரும் உயிர்வகைகளுள் பிரபஞ்ச வாழ்வு அநித்தியமானது என்பதையும் இங்கே இன்பத்தைவிடத் துன்பம்தான் அதிகம் நிறைந்திருக்கிறது என்பதையும் மனிதனே அறிந்துகொள்ள வல்லவனாகின்றான். அப்படி வாய்த்த விவேகத்தின் விளைவாக மனிதன் பிரபஞ்ச வாழ்வை ஒதுக்கித் தள்ளுகிறான். மக்களுள்ளும் இத்தகைய விவேகம் உதயமான பிறகே உலகப்பற்று ஒழிகிறது. சிற்றுயிர்கள் அத்தகைய நிலையை இன்னும் எட்டவில்லை. ஆதலால் முக்தியைப் பற்றிய பேச்சுக்கும் ஏனைய உயிர்களுக்கும் வெகுதூரம்.

ரமணமகரிஷி இங்ஙனம் சொல்லியிருக்கமாட்டார். அப்படிச் சொல்லியிருந்தாலும் அது தத்துவத்திற்கு ஒவ்வாது.

# ஆத்ம போதம்

( திரு. V. S. நரசிம்மன் )

एवं निरन्तराभ्यस्ता ब्रह्मैवास्मीति वासना ।
हरत्यविद्याविक्षेपान् रोगानिव रसायनम् ॥

एवं (எவம்) இவ்வாறு निरन्तर (நிரந்தர) இடைவிடாத, நிலைத்த अभ्यस्ता (அப்யஸ்தா) பயிற்சி ब्रह्म एव अस्मि इति (ப்ரஹ்ம எவ அஸ்மி இதி) 'நான் பரப்பிரம்மம்' என்ற वासना (வாஸனா) பதிப்பு रसायनम् (ரஸாயனம்) மருந்து रोगान् इव (ரோகான் இவ) வியாதியைப் போக்குவது போல, अविद्या (அவித்யா) அஞ்ஞானம் विक्षेपान् (விக்ஷேபான்) எண்ணச் சிதறல்களை, हरति (ஹரதி) அழிக்கின்றது.

மருந்து வியாதியைப் போக்குகின்றது. அவித்யை, மனத்தடுமாற்றம் ஆகியவை 'நான் பிரம்மம்' என்று இடைவிடாத அப்பியாசம் செய்வதனால் உண்டாகும் சுத்த வாசனையினால் நீங்குகின்றன.

ஆரோக்கியமாக இருப்பதே நமது ஸ்வபாவம். 'நான் சுகமாக இருக்கிறேன்' என்று வலிந்து எவரும் உரைப்பதில்லை. அதற்கு மாறாக நோயுற்றபோது அதைக் குறித்துக் கவலைப்படுகின்றோம். இயல்பான நிலைக்குத் திரும்பும் வரை அமைதியிழந்து அல்லல்படுகின்றோம். நோயைத் தீர்க்க மருந்து தேவை. 'அவித்யை' என்பது நோய். நம்முடைய நிஜ ஸ்வரூபத்தை அது மறைக்கின்றது. அந்த நிலையை அடையப் பிரம்மத்தைப் பற்றிய சுத்த வாஸனைகள் மருந்தெனப் பயன்படுகின்றன.

வாஸனாக்ஷயம்—வாஸனைகளை ஒழிப்பது—சாதனையின் முக்கிய அங்கமாக யோக வாசிஷ்டம் அறிவிக்கின்றது. லட்சியத்தினின்று நம்மை இழுத்துச் செல்லும் லோக வாஸனைகளை மலினம், அசுத்தம் என்றும், லட்சியத்தின்பால் செலுத்தும் வாஸனைகளைச் சுத்தம் என்றும் அது பிரிவுபடுத்திக் காண்பிக்கின்றது. 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' போன்ற மகா வாக்கியங்களினால் சுத்த வாசனை மேலோங்கும். இந்த நிதித்தியாசனம், அனுஸந்தானம் இடைவிடாது நடைபெறவேண்டும் என்பதை 'நிரந்தர அப்யஸ்தா' என்ற தொடர் குறிக்கின்றது.

विविक्त देश आसीनो विरागो विजितेन्द्रियः ।
भावयेदेकमात्मानं तमनन्तमनन्यधीः ॥

विविक्त देश (விவிக்த தேச) தனிமையான இடத்தில் आसीनः (ஆஸீந:) அமர்ந்து विरागः (விராக:) ஆசை அற்று विजित इन्द्रियः (விஜித இந்திரிய:) புலன்களை வெற்றிகொண்டு तं अनन्तम् (தம் அனந்தம்) அந்த எல்லையற்ற एकं (ஏகம்) ஒன்றான आत्मानं (ஆத்மானம்) ஆத்மாவை अनन्य धीः (அநந்ய தீ:) வேறு எதையும் சிந்திக்காத புத்தியுடன் भावयेत् (பாவயேத்) தியானிக்கவேண்டும்.

தனிமையில் அமர்ந்து, ஆசைகளை அகற்றி, புலன்களை அடக்கி, வேறு சிந்தனைகள் எதுவுமின்றி ஆத்மனைத் தியானிக்க வேண்டும்.

வேதாந்த தத்துவம் வெறும் பேச்சோடு, அறிவு பூர்வமான உணர்வோடு நிற்பதில்லை. அந்த உண்மையை உணரச் சாதனை புரிய வேண்டும் என்று ஆச்சாரியர்கள் வலியுறுத்துகின்றனர். தியானத்தில் அமர்வது அஷ்டாங்க யோகத்தில் ஒரு படியாகும். தியானம் செய்பவர் தனித்துப் பயில்வது நன்று. எண்ண அலைகளின் வலிவை நமது முன்னோர் உணர்ந்ததால் இத்தகைய கட்டுப்பாடு விதித்துள்ளனர். வேறுபட்ட சிந்தனை மனப்பக்குவம் உடையோர் ஒன்றாக அமர்ந்து தியானம் செய்வது 'சத்சங்கம்' என்ற வரிசையில் நல்லது எனினும் சாதகனின் முன்னேற்றத்திற்குப் பாதிப்பு ஏற்படலாம். தனித்திரு என்பது யோகிக்கு நியமமாகின்றது. 'யோகி தனியான, இரகசியமான இடத்தில் அமர்ந்து தனது மனதை வெல்லவேண்டும்' என்கிறது கீதை—(6–10). கண்டிப்பை மிகவும் வலியுறுத்தும் மத ஆசாரியர்கள் வேதாந்த பாடம் நடத்தும் போதும் ஒரு சிஷ்யனை மட்டும் வைத்துக்கொண்டு பாடம் சொல்லுவார்கள். துவக்கத்தில் அனைவரும் ஒன்றாகப் படிக்கலாம், தியானிக்கலாம். பக்குவம் அதிகமாகும்போது, தனது மனநிலையைத் தானே நிர்ணயித்து, அதற்கேற்பப் பயிற்சி

யில் தான் ஒருவன்மட்டுமே தனித்து ஈடுபட வேண்டும். 'தனியாக இருந்து சுகத்தை அனுபவி' என்பது ஸ்ரீ சங்கரரின் உபதேசம். தனிமையில்இருப்பது இனிதாகக் காணப்படுவது முன்னேற்றத்தின் அறிகுறி. நீரில் திளைத்து இருக்கும் மீன் போன்று தனிமையை அனுபவிக்கும் சாதகர்களைக் கருத்தில் கொண்டு 'இனிது இனிது ஏகாந்தம் இனிது' என்று கூறப்படுகின்றது. ஏகாந்தம் மனதில் அச்சத்தையோ அனுவசியக் குழப்பத்தையோ தோற்றுவித்தால் அத்தகைய சாதகர்கள் துவக்கநிலையை வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்றுணர்தல் வேண்டும்.

'பாவயேத்'—சிந்தித்தல், தியானித்தல், பாவித்தல். நிதித்தியாஸனத்தில் பிரம்ம சொருபத்தில் திளைத்து இருக்கவேண்டும். 'யாது பாவித்திடினும் அதுவாய் வந்தருள் செய் எந்தை நீ குறையுமுளதோ' என்பார் தாயுமானவர். இஷ்ட தெய்வ உபாசனை, அகண்டாகாரத்தைநினைவுபடுத்தும்வெட்ட வெளி அல்லது சமுத்திரம், இதயத்தே ஜோதி ரூபமாய்ப் பிரகாசிக்கும் தீபம், எண்ணங்களுக்குச் சாக்ஷியாய்த் திகழும் ஆத்மன் என்று தியானத்திற்குரிய பல பாவனைகள் சாதகர்களுக்கு நினைவுபடுத்தப்படுகின்றன. இவற்றில் எதை வேண்டுமாயினும் சாதகன் பின்பற்றலாம். பதஞ்சலி யோக சூத்திரம், 'யதாஅபிமத த்யானாத்வா' (39)-தத்தம் மனப்பாங்கிற்கேற்பத் தியானம் செய்யலாம் என்று அறிவுறுத்துகின்றது. பாவனைக்கு ஏற்பச் சித்த விருத்திகள் மாறுகின்றன. தூய, யோக சிந்தனைகள் நல் வாசனையைத்தருகின்றன. பாவனையின் முக்கியத்துவத்தை அபரோக்ஷ அனுபூதியில், 'பாவவிருத்திக்கு ஏற்பப்பாவனை அமைகின்றது' என்று ஸ்ரீ சங்கரர் குறிப்பிடுகின்றார். ப்ரமர-கீட நியாயம்(குளவி-புழு) என்பதின் அடிப்படையும் இதுவே. குளவியின் சிந்தனையில் முற்றிலும் தன்னை ஆழ்த்திக் கொண்டு புழுவும் குளவியாக மாறுகின்றது என்று வேதாந்த நூல்கள் உரைக்கின்றன. 'உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்' என்று சீரிய உலக வாழ்க்கைக்குத் தரப்படும் நியதி சாதக வாழ்விற்கும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை.

அநந்ய தீ :— வேறு எதையும் சிந்திக்காத மனம். மனம் அலை பாய்வது இயல்பு. சாதகர்கள் அனைவரும் இதனைப் பெரும் இடராகக் கருதுவர். 'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம்அரிது' என்பார் தாயுமானவர். மனதை அடக்குதல், சித்த விருத்தி நிரோதம் யோகத்தின் அடிப்படை நிலை. மனம் தறிகெட்டு அலையாது இருப்பதன் அவசியத்தைப் பல நூல்களிலும் காணலாம். கடோபநிஷத் அழகான உவமையைத் தருகின்றது. "சரீரம் ரதம்; புத்தி சாரதி; ஆத்மன் ரதத்திற்கு உரியவன்; மனம் கடிவாளம்; ஐம்புலன்களும் குதிரைகள். புலனுக்குரிய விஷயங்களே பாதையாகும். விவேகத்தை இழந்து, அடக்கத்தை இழந்து திரியும் மனத்தை உடையவனுடைய ரதம் சரியான பாதையில் செல்லாது என்பதை உணர். ஆயினும் விவேகபுத்தியோடு கூடிய மனம் ஒருநிலைப்பட்டு இருக்குமாயின்குதிரைகளும் சரியான பாதையில் செலுத்தப்படும். அத்தகைய குதிரைகளை உடையவனே சரியான சாரதி ஆகின்றான். முதலில் குறிப்பிடப்பட்டவன் மேலான நிலையை அடையாது சம்சாரத்தில் ஆழ்கின்றான். ஆயினும் மனம் என்னும் கடிவாளத்தை விவேகத்தோடு கையாண்டு, புலன்களாகிய குதிரைகளை நெறிப்படுத்தும் சாரதியை அடையப்பெற்ற எஜமானன் பிறப்பு இறப்பு இல்லா மேலாம் பதவியை அடைகின்றான்." (கடோபநிஷத், I—iii, 3-8 ). மனதை வெல்லக் கீதை சொல்லும் உபாயத்தைக் கைக்கொள்ளவேண்டும். 'எப்பொழுதெல்லாம் மனம் அலைந்து திரிகின்றதோ அப்பொழுதெல்லாம் அதனை நெறிப்படுத்தி ஆத்மனில் நிலைநிறுத்த வேண்டும்'. குதிரைகளை அடக்குபவன் கடிவாளத்தைச் சரியாகக் கையாளுவதுபோல், சாதகன் மனதை நெறிப்படுத்த வேண்டும் என்ற கருத்தை உபநிஷத்தும் கீதையும் நமக்கு அறிவிக்கின்றன.

குறிப்பு:-ஆறு விகாரங்களைப்பற்றிய குறிப்பு 382ஆம் பக்கத்தில் காணப்படுகின்றது. அதனை 'பிறப்பு, இருப்பு, வளர்ச்சி, மாற்றம், நலிவு, மரணம்'என்று அமைத்துக்கொள்ளவேண்டும்.

# கயிலைமலை யாத்திரை

( சுவாமி குஹானந்தர் )

(436ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு டாலர்களைச் சீனநாணயம் 'யென்' ஆக மாற்றிக்கொள்ளவேண்டும். ஒரு யென் நம்முடைய ரூபாய்க்கு ஐந்து ரூபாய் பதினைந்து பைசா ஆகிறது. கிட்டத்தட்ட ஒரு டாலருக்கு இரண்டு யென் வீதம் தருகிறார்கள். ஒரு நபர் முந்நூறு டாலரை யென்னாக மாற்றிக்கொண்டால் அங்கு ஆகும் செலவிற்குப் போதும்என்று சொன்னார்கள். இரண்டொருவர் அதிகமாகவும் டாலரை மாற்றிக்கொண்டார்கள். யென் மீதமிருந்தால் போகும்போது அதை வாங்கிக்கொண்டு டாலர் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் ஒவ்வொருதட்வை மாற்றும் போதும் கமிஷனாகக் கொஞ்சம் தொகை எடுத்துக்கொள்கிறார்கள். பத்துத் தடவை மாற்றினால் பாதித் தொகைக்கு மேல் கமிஷனாகப் போய்விடும். இந்த வேலை முடிந்ததும் அவர்கள் நேரப்படி பகல் பன்னிரண்டரை மணியளவில் பகல் உணவிற்குக்கூப்பிட்டார்கள்.சாதம்,பருப்புதருவதாகச் சொல்லி இருந்ததால் ஏதாவது சாப்பிடலாம் என்று எண்ணிக்கொண்டு ஆசையோடு சாப்பிடும் இடத்திற்குச் சென்றோம். ஒவ்வொரு மேஜைமீதும் நான்கு தட்டுக்கள் வைத்து நான்கு நாற்காலிகள் போட்டுவைத்திருந்தார்கள். சாதம், பருப்பு, வேகவைத்த காய்கறி என்று தனித்தனித் தட்டுக்களில் ஒவ்வொரு மேஜையிலும் வைத்திருந்தனர். அவைகளை இரண்டு மூன்று வாய்க்கு மேல் சாப்பிடமுடியவில்லை. தட்டில் இருந்தவற்றை அப்படியே வைத்துவிட்டுக் கை கழுவினோம். அதன் பிறகு நடந்த நிகழ்ச்சியைப் பார்த்ததும் பலபேருக்குப் பலவித எண்ணங்கள் உண்டாயின. நாங்கள் மீதம் வைத்தவைகளையெல்லாம் எடுத்துச் சமையலறைக்குள் வைத்துக்கொண்டார்கள்.

பிற்பகல் மூன்று மணிக்குச் சந்தைக்கு மொழிபெயர்ப்பாளரையும் கூட்டிக்கொண்டு எங்களையும் அழைத்துக்கொண்டு போனார்கள். சீன அரசாங்கமே அந்தச் சந்தையை நடத்துகிறது. அதில் உணவுப் பொருள்கள், உடைகள், பாத்திரங்கள், ரேடியோ, டேப்ரிக்கார்டர் முதலிய எல்லாச் சாமான்களும் விற்கின்றன. உயர்ந்த தரமான சாமான்கள் இல்லை. ஏனென்றால் அவைகளை வாங்குவோர் அங்கு இல்லை.விலையும் இந்தியவிலையை விட அதிகமாக இருந்தது. அவையெல்லாம் பீகிங்கில் இருந்துதான் வருகின்றன. இங்கு உற்பத்தியாவது ஒன்றுமே இல்லை என்றார்கள். பிளேட், கப், சாசர் போன்ற சீனச்சாமான்கள் பார்ப்பதற்கு நன்றாக இருந்தன. அன்று மாலையில் எல்லாரையும் கூட்டிவைத்துச் சில விஷயங்களைச் சொன்னார்கள். மறுநாள் காலை ஏழரை மணிக்குப் புறப்படவேண்டும் என்றும் மானசரோவரம், கைலாயம் போய்வர ஆறுநாட்கள் ஆகும் என்றும் அதற்கு வேண்டிய சாமான்களை மட்டும் எடுத்துக்கொண்டு தேவையில்லாதவைகளைத் தத்தம் அறையிலேயே வைத்து விட்டுப்போகலாம் என்றும் கூறினார்கள்.அங்குள்ள தங்குமிடங்களில்இருபத்தைந்துபேர்கள் தங்குவதற்கு இயலாது. எனவே இரண்டு குழுக்களாகப் பிரிந்து ஒரு குழு மானசரோவரத்தையும் இன்னொரு குழு கயிலாயத்தையும் பிரதட்சணம் செய்ய வேண்டும். மூன்று நாட்களுக்குப் பிறகு தக்கனக்கோட்டையிலிருந்து லாரி வந்து மானசரோவரத்தில் உள்ளவர்களைக் கயிலாயத்திற்கும்கைலாயத்தில்உள்ளவர்களைமானசரோவரத்திற்கும் கொண்டுவந்து விடும்என்றும், ஒவ்வொரு குழுவுக்கும் பிரதட்சணம் செய்யும்போது நான்கு குதிரைகள் சாமான் கொண்டுபோகத் தரப்படும் என்றும், ஏழாவதுநாள் லாரிவந்து எல்லாரையும் தக்கனக்கோட்டைக்கு அழைத்துவந்து விடுமென்றும், அங்கு யாருக்கும் ரூபாய் தரவேண்டியதில்லையென்றும், இங்கு வந்த பிறகு எல்லாவற்றிற்கும் கணக்குப் போட்டுத் தாங்கள் வாங்கிக் கொள்வதாகவும் மாலை 5 மணிக்கு அந்தக் காம்பவுண்டிற்குள் உள்ள ஸ்டோர்

திறக்கப்படுமென்றும் அதில் வேண்டிய சாமான்கள் வாங்கிக் கொள்ளலாமென்றும் சொன்னுர்கள். மாலே ஐந்து மணிக்குக் கடையைத் திறந்தார்கள். அதில் வாங்குவதற்கேற்றசாமான்கள் ஒன்றும் இல்லே. அவர்கள் அரிசி ருசி இல்லாமல் ஒரு மாதிரி வழவழப்பாக இருந்தாலும் அந்தக் குளிரிலும் விரைவில் வேகக்கூடியதாக இருந்ததால் நாங்கள் இரண்டு கிலோ அரிசி வாங்கினேம். அதற்கு மூன்றரையென் விலே, நம் ரூபாய்க்குச் சுமார் 18ரூபாய் ஆகிறது. பிறகு நாங்கள் பதினேரு பேர் ஒரு பிரிவாகப் பிரிந்து முதலில் மானசரோவரம் பிரதட்சணம் செய்து அதில் குளித்து விட்டு அதன்பின் கயிலாயப் பிரதட்சணம் செய்வதென்று முடிவு செய்தோம். மற்றவர்கள் ''கயிலாயம், மானசரோவரம் இரண்டும் சேர்ந்து ஒரு தடவையில் பிரதட்சணம் செய்வது முடியாத காரியம். இது வரையில் யாரும் அப்படிச் செய்யவில்லே. வீண் சிரமப்படவேண்டாம். அது ஆகாத காரியம்'' என்று சொன்னுர்கள். மறுமுறை கைலாயம் வர முடியுமென்று நாங்கள் எண்ணவில்லே. ஆதலால் ''என்ன கஷ்டம் வந்தாலும் வரட்டும்; நாங்கள் இரண்டையும் பிரதட்சணம் செய்து விடுவதென முடிவு செய்துள்ளோம்'' என்று சொன்னேம். நாங்கள் குறைந்த அளவு சாமான்களே எடுத்துக்கொண்டு அவர்கள் தரும் நான்கு குதிரைகளில் ஒன்றில் மட்டும் சாமான்களே ஏற்றிக்கொண்டு மற்ற மூன்று குதிரைகளில் மாறி மாறி ஏறிக்கொள்ளலாம் என்று திட்டமிட்டோம்.வழியில் சமையலுக்கு வேண்டிய சாமான்களேயெல்லாம் எடுத்துக் கொண்டோம். எங்கள் குழுவினர் பதினேரு பேரில் சென்னேயைச்சேர்ந்த அன்பர் ''எனக்கு இங்கேயே மூச்சு விடுவது சிரமமாக இருக்கிறது. என்னுல் பிரதட்சணம் செய்ய முடியாது. அங்கு வந்து மானசரோவரத்தில் குளித்து விட்டுக் கயிலாய தரிசனம் பார்த்தால் போதும். கேம்பிலேயே ஓய்வெடுத்துக் கொண்டு இருந்து கொள்கிறேன்'' என்று சொல்லி விட்டார். ஆந்திராவிலிருந்து வந்த தம்பதிகள் இருவரும் தாங்களும் அந்த முறையைத்தான் பின்பற்ற முடியும் என்று சொல்லி விட்டனர். அதுவும் ஒரு விதத்தில் நன்மைதான் என்று எண்ணிக் கொண்டு எங்கள் திட்டத்திற்கேற்றபடி சாமான்களே எல்லாம் தயாராக எடுத்து வைத்துக்கொண்டு மறுநாள் காலே புறப்படத் தயாராக இருந்தோம்.

ஜுலே மாதம் 4ஆம்தேதி.அவர்கள் நேரப்படி காலே ஆறு மணிக்கே எல்லாரையும் எழுப்பித் தயாராகும்படி சொன்னுர்கள். எல்லாரும் எழுந்து காலேக் கடன்களேயும் காலேச் சிற்றுண்டியையும் முடித்துக் கொண்டு லாரியில் சாமான்களே ஏற்றிவிட்டு நாங்களும் ஏறினேம். பலவீனமாக உள்ளவர்கள் மூன்று பேர் ஜீப்பிலும் மற்றவர்கள் லாரியிலும் ஏறிக் காலே ஏழரை மணிக்குத் தக்களக் கோட்டையை விட்டுப் புறப்பட்டோம். அங்குச் சீனர்கள் அலுவலகத்தில் இருந்தவர்கள் எல்லாரும் சேர்ந்து ''நன்கு தரிசனம் செய்து வாருங்கள். பாதை மோசமானது. கைலாசம் சுற்றி வருவதும் கஷ்டமானது; இருந்தாலும் வெற்றிகரமாக முடித்து வாருங்கள்'' என்று அவர்கள் மொழியில் வாழ்த்துக் கூறி அனுப்பி வைத்தார்கள். திபேத்தில் நாங்கள் சென்று வந்த வழியில் சாலே எங்கும் இல்லே. தரை பெரும்பாலும் சமமாக இருந்தது. இடையிடையே சுமாரான மேடு, பள்ளங்கள் இருந்தன. திபேத்தில் மழை பெய்வதில்லே. மேகம் கூடினுல் பனியாகப் பெய்துவிடும். அது உருகிப் பல இடங்களில் ஊற்ருக, சிறு சிறு ஓடைகளாக ஓடுகின்றது. லாரி திபேத்திலிருந்து சிறிது வடமேற்காகச் சென்றது. பாதை முழுவதும் குண்டும் குழியுமாக இருந்தது. மேடுகளில் ஏறியும் பள்ளங்களில் டபார் என்று சக்கரங்கள் விழுந்தும் ஒரே புழுதி மண்டலமாக இருந்தது. சிறிய ராணுவ லாரியில் சாமான்கள், பிரயாணிகள் இருபத்துமூன்றுபேர் எல்லாம் போட்டு அடைத்துக் குலுக்கி இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் சாய்ந்து சாய்ந்து ஒருவரோடு ஒருவர் மோதியும் திண்டாடிக் கொண்டும் சென்ருேம்.இப்படி நான்குமணி நேரம் பிரயாணம் செய்த பிறகு ஒரு பெரிய ஏரிக்கரையின் மீது லாரி சென்றது. சிலர்

அதைப் பார்த்து மானசரோவரம் என்றுர்கள். சிறிது நேரத்தில் அது ராக்ஷஸ ஏரி என்று எல்லார்க்கும் தெரிய வந்தது. அதன் கரைகள் ஒழுங்கற்றவையாகவும் தண்ணீர் கறுப்பு நிறமாகவும், அதன் இடை இடையே மலைக் குன்றுகளும் பார்ப்பதற்கே விகாரமாய் இருந்தன. அத்தண்ணீரைத் தொட்டுப் பார்க்கக்கூட யாரும் விரும்பவில்லை. அதை யாரும் தொடக்கூடாது என்றும் லாரியில் வந்த சைனுக்காரர்கள் சொன்னுர்கள். அந்தக் கரையில் சுமார் பத்து மைல் தூரம் சென்றிருப்போம். வடமேற்குப் பக்கத்தில் ஓர் உயரமான சிகரம் வெள்ளைவெளேரென்று பார்ப்பவர் மனத்தையெல்லாம் கொள்ளை கொண்டு போகும் வகையில் ஜோதிசொருபமாய்த் தோன்றிற்று. அதைப் பார்த்த உடனே எல்லாரும் 'கைலாயபதிக்கு ஜே' என்று பெரிய கோஷம் போட்டோம். அதைக் கண்டவுடனே யாருக்கும் இது கைலாயமா வேறு சிகரமா என்ற சந்தேகமே ஏற்படவில்லை. "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள" என்பது போன்று கயிலையைக் கண்டகண்கள் வேறெதையும் காண விரும்பா. வைத்த கண் வாங்காது அதைப் பார்த்துக்கொண்டு சென்றுேம். இதுவரை இத்தனை நாள் யாத்திரையில் பட்டகஷ்டம், இனிமேல் படப்போகிற கஷ்டம் எல்லாம் மறந்து விட்டோம். இன்னும் எவ்வளவு கஷ்டப்பட்டாவது இக்காட்சி காணத் தகுந்தது. இனி இந்தத் தேகமே அழிந்துவிட்டாலும்இதைப்பற்றிப்பொருட்படுத்த வேண்டியதில்லை. கயிலைக்காட்சி காணப்பெற்றதால் பிறவிப் பெரும்பயனை அடைந்து விட்டதாக ஒரு குதூகலமான இனிய உணர்வு அனைவர் உள்ளத்திலும் ஏற்பட்டது. இப்படிப் பார்த்துக் கொண்டே சுமார் ஐந்தாறு மைல் தூரம் சென்றதும் ஓர் அழகான மைதானத்தில் லாரி சென்றது. அங்கு லாரியை நிறுத்தி 'அதோ பாருங்கள்,மானசரோவரம்' என்றுர்கள். எல்லாரும் லாரியை விட்டு இறங்கி ஓடினேம். அப்போது நேரம் காலை பத்து மணி இருக்கும். ஏரியின் நீர் அமைதியாக இருந்தது. கண்ணுக்கெட்டியவரை ஒரே கண்ணுடிக் கம்பளம் விரித்தாற் போன்றும் மெல்லிய பச்சை மரகதம் போன்றும் அதனுடைய ஆழமும், அகல நீளங்களும் கண்ணுக்கெட்டாதும் இருந்தன. கண்ணுக்கெட்டிய வரையில் தண்ணீருக்கடியில் உள்ள மணல், கல் முதலியவைகள் சுத்தமான கண்ணுடிக்கடியில் உள்ளவைகள் போன்று தெளிவாகத் தெரிந்தன. முதலில் ஒவ்வொருவரும் பேருக்கு இரண்டு மூன்று கை நீரைஅள்ளிக் குடித்தோம். குளிராக இருந்தாலும் குடிப்பதற்கு அது இனிமையாக இருந்தது. அதனுடைய கரை அமைப்பும், காலை நேரத்தில் அவ்வளவு பெரிய நீர்த்தேக்கத்தின் தண்ணீர் சலனமில்லாது அமைதியாக இருப்பதும், அதனுள் தூய வெண்ணிறம் கொண்ட அன்னப் பறவைகள், சிறிது மங்கலான நிறங்கொண்ட பறவைகள், கூட்டம் கூட்டமாக மகிழ்வோடு நீந்தி ஓடுவதும், பெரிய பெரிய மீன்கள் பயமில்லாது கரை ஓரத்தில் ஓடித்திரிவதும், அவ் ஏரியினுள் ஒருவகை நீல நிறமான தாமரை போன்ற மலர்கள் சில இடங்களில் இருப்பதும் நாம் எவ்வளவு நேரம் பார்த்துக்கொண்டிருந்தாலும் நேரம் போவது தெரியாது, மனம் சாந்தமும் இனிமையும் அடைந்து, அவற்றைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம் போன்று தோன்றியது. ஆனுல் லாரிக்காரர்கள் எல்லாரையும் விரைவில் வரும்படி கூப்பிட்டார்கள். மானசரோவரக் கரையில் சீன அரசு ஒரு கூடாரம் அமைத்துள்ளது. அதில் பன்னிரெண்டுபேர் தங்கலாம். அதற்குப் பக்கத்தில் நிரந்தரமாக இருக்கக்கூடிய கட்டடம் ஒன்றையும் சுமார் இருபது பேர் வரை தங்கக்கூடிய அளவில் அவர்கள் கட்டிக் கொண்டுள்ளார்கள். எங்கள் குழுவில் இருந்தவர்களில் ஆந்திராத் தம்பதிகள் இருவரும் சென்னை அன்பர் ஒருவரும் "மானசரோவரம் சுற்றுப் பிரதட்சணம் செய்வது எங்களுக்கு இயலாது. நாங்கள் மூவரும் நீங்கள் பிரதட்சணம் செய்து வரும்வரை மானசரோவரக் கரையில் உள்ள கேம்பிலேயே தங்கி இருக்கிறேம். பிறகு உங்களோடு சேர்ந்து கைலாயம் வருகிறேம்" என்று

சொன்னார்கள். குஜராத்திலிருந்து வந்த அன்பர் ஒருவரும் தமக்கு உடல் நலம் சரியில்லையென்றும் தாமும் அங்கேயே தங்கி இருப்பதாகவும் மானசரோவரக் கரையில் உள்ள கேம்பிலேயே தங்கிவிட்டார். லாரி ஓட்டிவந்த டிரைவர் எங்களிடம் மானசரோவரக் கரையில் உள்ள அடுத்த கேம்ப் வரையில் லாரி போய்வர வேண்டிய வேலை இருப்பதாகவும் கைலாயத்தின் அடிவாரக் கேம்பிற்குச் செல்லவேண்டியவர்களை அங்குக் கொண்டுபோய் விட்டுவிட்டு எங்களை மானசரோவரக் கரையில் உள்ள இரண்டாவது கேம்பில் கொண்டுபோய் விடுவதாகவும் சொன்னார். அதுவும் கைலாசபதியின் கருணையென்று ஏற்றுக்கொண்டோம். கைலாயக் கேம்பில் தங்குகின்ற குழுவில் பதினான்குபேர், நாங்கள் எட்டுப் பேர் ஆக இருபத்திரண்டுபேர் சென்றோம். அங்கிருந்து வடமேற்காகச் சுமார் முப்பது மைல் தூரம் மானசரோவரத்தை ஒட்டியும் சிறிது எட்டியும் ஓரளவு சமமான தரைப் பகுதியில் லாரி சென்றது. இரண்டு மூன்று இடங்களில் மானசரோவரத்திலிருந்து தண்ணீர் ஓடையாக வெளியே ஓடிக்கொண்டிருந்தது. அதில் லாரி கொஞ்சம் கஷ்டப்பட்டுத்தான் சென்றது. அந்த வழியில் ஒரு சிறிய ஊர் இருக்கிறது. அங்குச் சீன அரசின் ஆட்களிருக்கின்றனர். சிறிய அலுவலகமும் பண்டகசாலையும் உள்ளன. வழியில் இரண்டு மூன்று இடங்களில் ஆடு, மாடுகள் மேய்க்கும் திபேத்தியர் குடும்பங்களைப் பார்த்தோம். அங்குக் கிடைக்கும் கற்களைக் கொண்டு குடிசை மாதிரி அடுக்கியும் கற்கள் கிடைக்காத இடத்தில் சிறிய கூடாரம் போல் அமைத்துக்கொண்டும் தங்கி ஆடு மாடுகளை மேய்த்து வருகின்றனர். சீன அரசு அங்கெல்லாம் லாரியுடன் சென்று அவர்களிடமுள்ள ஆடுமாடுகளின் ரோமங்களை மாதம் ஒரு முறை எடுத்துக்கொண்டு அவர்களுக்கு ரேஷன் மாதிரி கோதுமை மாவு போன்ற உணவு வகைகளை ஓரளவு கொடுத்து வருகின்றனர். அவர்களுடைய உடை, குடியிருப்பு வசதிகளைப் பார்த்தால் அவர்கள் மேய்க்கும் ஆடு மாடுகளுக்கு அடுத்தபடியாகத்தான் இருந்து வருகிறார்கள். கம்யூனிஸ்டு ஆட்சியின் அடிமைத்தனத்தின் கொடுமையின் துயரம் அவர்கள் முகத்தில் தெற்றெனத் தெரிகிறது. பகல் ஒருமணிக்கு லாரி கைலாய அடிவாரத்திலுள்ள கேம்பிற்குப் போய்ச்சேர்ந்தது. முதலில் கைலாயம் சுற்றி வருகின்ற குழுவின் பதினான்கு பேரும் அவர்களுடைய சாமான்களுடன் அங்கு இறங்கிக் கொண்டார்கள். சிலபேர் எங்களைப் பரிகாசத்துடனும் சிலபேர் அனுதாபத்துடனும் ''கைலாயம், மானசரோவரம் ஆகிய இரண்டும் பரிக்கிரமம் வருவது முடியாத காரியம். இதுவரை அப்படி யாரும் செய்ததாகவும் தெரியவில்லை. முட்டாள்தனமாக நீங்கள் முடிவு செய்துள்ளீர்கள்'' என்று சொன்னார்கள். ''கயிலைநாதனின் கருணை இருந்தால் முடியாத காரியத்தை முடித்து விடுவோம்'' என்று சொல்லி அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு நாங்கள் எட்டுப் பேர்மட்டும் எங்கள் சாமான்களுடன் லாரியில் சென்றோம். மானசரோவரத்தை வலம் வரும் முறையிலேயே மேடு, பள்ளங்கள் குண்டு, குழி இவைகளில் எல்லாம் படார் படார் என்று இப்படியும் அப்படியும் சாய்ந்து அடித்துக்கொண்டு சுமார் இருபது மைல் தூரம் லாரி சென்றது. வழியில் பள்ளத்தாக்கான இரண்டோர் இடங்களில் திபேத்தியர்கள் குடும்பத்துடன் ஆடு மேய்த்துக்கொண்டிருப்பதைப் பார்த்தோம். வழியில் கொஞ்சம் பெரிய ஓடை ஒன்று மானசரோவரத்துக்குள் வந்துசேர்ந்தது. பிற்பகல் மூன்று மணிக்கு எங்களை மானசரோவரத்தின் முதல் நாள் கேம்பில் கொண்டுபோய் விட்டார்கள். அந்த இடத்தில் நான்கு வீடுகள் இருந்தன. ஆங்குத் திபேத்தியர்கள் ஆடு, மாடு மேய்த்துக் கொண்டு குடியிருந்து வந்தார்கள். எங்களுக்கு இரண்டு அறைகளில் பத்துச் சிறிய கட்டில், மெத்தை, தலையணைகளெல்லாம் போட்டு வைத்திருந்தனர். லாரியில் கொண்டுவந்து விட்டவர்கள் அங்கிருந்த ஓர் ஆளிடம் எங்களுக்கு வேண்டியதைத் தரும்படி சொல்லிவிட்டு நாளைக் காலையில் நான்கு

குதிரைகளை எங்களுக்கு அனுப்பி வைப்பதாகச் சொல்லிவிட்டுப்போனார்கள். கேம்பில் இருந்தவர்கள் திபேத்தியர். அவர்களுக்கு நாம் பேசுவது புரியாவிட்டாலும் கைச் சாடைகாட்டி ஒரு கிரசின் அடுப்பு, இரண்டொரு பாத்திரங்கள் வாங்கிச் சாதம் சமைத்துக் கொஞ்சம் பருப்பும் ரசமும் வைத்து மாலை 5½ மணிக்குச் சாப்பிட்டோம். டெல்லியில் இருந்து புறப்பட்டபிறகு 10 நாட்களுக்குப் பிறகு அன்றுதான் சாப்பிட்ட மாதிரி உணர்வு ஏற்பட்டது. ரசத்தை எல்லாரும் மிக ரசித்துச் சாப்பிட்டோம். அங்குக் குடியிருந்த திபெத்தியர்கள் நாங்கள் சமைப்பதையும் சாப்பிடுவதையும் வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். அன்று இரவு மாலை ஆறு மணிக்குப் படுத்து நன்றாகத் தூங்கினோம். மறுநாள் காலை 5½ மணிக்கு எழுந்து சிற்றுண்டி தயார் செய்து சாப்பிட்டுப் பால்பவுடரில் காப்பி தயார் செய்து சாப்பிட்ட பின் புறப்படத்தயாரானோம். காலை 7 மணிக்கு நான்கு குதிரைகளும் மூன்று ஆட்களும் வந்து சேர்ந்தனர். சாமான்கள் குறைவாக இருந்ததால் மூன்று குதிரைகளில் பெண்கள் மூன்று பேரை ஏறச்சொல்லி ஒரு குதிரையில் சாமான்களை ஏற்றிக்கொண்டு பிரதட்சணம் செய்ய ஆரம்பித்தோம். கரையோரமாகத் தண்ணீருக்கும் கரைக்கும் மத்தியில் நடந்து சென்றோம். முற்பகல் 12 மணிவரை மானசரோவரத்தில் காற்றில்லாமல் இருக்கிறது. தண்ணீருக்கடியில் பச்சை, மஞ்சள், நீல நிறங்களில் மணல்கள், கற்கள் இருக்கின்றன. முப்பது மைலுக்கப்பாலுள்ள கைலாய சிகரத்தின் பிம்பம் மரகத நிறமான தண்ணீருக்குள் வெள்ளிமலையொன்று முளைத்து வருவதுபோன்று பிரகாசத்துடன் மினிர்கிறது. அதைப் பார்த்து ரசிக்காமல் இருக்கமுடியாது. சமுத்திரம் போன்ற பெரிய நீர்த்தேக்கம் பார்ப்பதற்குப் பளிங்கு போலும் இளம் பச்சை மரகதத்தில் முலாம் பூசியது போன்றும் அருந்துவதற்கு இனிய இளநீர் போன்றும்இருந்தது.அதனுள் வெள்ளியை உருக்கி வைத்ததுபோன்ற கயிலை மலையின் பிம்பத்தைக் காணும்போது ஒரு கணத்தில் நாம் எங்கு நிற்கிறோம், என்ன பார்க்கிறோம் என்பதை மறந்து விடுகின்றோம். இன்ப உணர்வு ஏற்படுகின்றது. "நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே" என்பதின் பொருளை ஓரளவு உணர்கின்ற நிலையில் நின்று கொண்டே இருக்கலாம் எனத் தோன்றுகின்றது. இந்த நிலையில் மானசரோவரத்தை நோக்கும் போது ஸ்ரீமத் பகவத்கீதையில் 17ஆவது அத்தியாயத்தில் பதினாறுவது சுலோகத்தில் பகவான் மனதை எப்படிப் பயன்படுத்த வேண்டும், அப்படிப் பயன்படுத்திப் பண்பட்ட மனது எப்படி இருக்கும் என்பதை "மன: ப்ரஸாத: ஸௌம்யத்வம் மௌனமாத்மவிநிக்ரஹ: பாவஸம்சுத்திரித்யேதத்தபோ மானஸமுச்யதே" என்று சொல்லியுள்ள சுலோகத்திற்கு விளக்கவுரையாகவும், நிதர்சனமாகவும் காட்சி கொடுப்பதாகத் தோன்றிற்று. அதாவது நம்முடைய மனதை இனிமையும் அமைதியும் உடையதாக வைத்திருக்கப் பழகிக் கொண்டே போனால் நம்முடைய சிந்தனையும் உணர்வும் அந்தர்முகமாகச் செல்லும். அப்போது உள்ளத்தினுள் ஆத்மபோதம் அல்லது பேருணர்வு உண்டாகும். உள்ளங்கவர்கள்வனாக உள்ள பரமாத்ம சொரூபத்தை நன்கு உணரமுடியும் என்பதற்குப் படம்போட்டுக் காட்டுவது போன்று அமைந்துள்ளது மானசரோவரம். அதன் பரிக்கிரமப் பாதையானது மேடு பள்ளமில்லாது சமமாய் அமைந்திருந்தாலும், பத்துப் பன்னிரண்டு இடங்களில் பனிக்கட்டி உருகி ஓடைகளாக ஓடி வந்து உள்ளே சேர்வதும் அதிலிருந்து பல நதிகள் வெளியே போய்க்கொண்டும் இருப்பதால், அந்த இடங்களிலெல்லாம் பூட்ஸ், சாக்ஸ் முதலியவற்றைக் கழற்றி எடுத்துக்கொண்டு குளிர்ந்த தண்ணீரிலே நடந்து போகவேண்டியிருக்கிறது. இரண்டோர் இடங்களில் நடந்துபோக முடியாத அளவு ஆழம் அதிகமாக உள்ளது. அந்த இடங்களில் குதிரையின் மேல்தான் போக வேண்டியுள்ளது. இரண்டாம் நாள் முப்பது கிலோ மீட்டர் தூரம் நடந்து கூடாரம் அமைத்துள்ள இடத்துக்கு மாலை ஆறு

மணிக்கு வந்து தங்கினோம். அதற்குப் பக்கத்தில் வீடுகள் ஒன்றும் இல்லை. அங்கு ஒரு திபெத்தியன் அந்தக் கூடாரத்திற்குக் காவற்காரன் போன்று இருந்தான். அங்கும் ஒரு ஸ்டவ், சில பாத்திரங்கள் முதலியன இருந்தன. வழி நடந்த களைப்பால் ஏதோ சிற்றுண்டி தயார் செய்து சாப்பிட்டுப் படுத்துக்கொண்டோம். அங்கு நல்ல குளிர் இருந்தது. இடமும் நெருக்கடியாக இருந்தது. மறுநாள் காலை ஆறு மணிக்கே எழுந்து பவுடர்பாலும் சிறிது சிற்றுண்டியும் தயார் செய்து சாப்பிட்டு விட்டுக் கரையோரமாகவே நடந்தோம். மானசரோவரத்தைச் சுற்றி வரும்போதும் கயிலை மலையைப் பல கோணங்களில் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கிறது. கயிலைமலையைச் சிறிது நேரமும், மானசரோவரத்தைச் சிறிது நேரமும் நின்று பார்த்துக்கொண்டு இருக்கும்போது மாறி மாறிக் காணும் அக்காட்சி உலகத்திலேயே எங்கும் காணமுடியாத காட்சியாக உள்ளத்தை ஓர் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வதாக அமைந்துள்ளது. இப்படி ஒரு நாள்லாரியில் முப்பதுகி.மீ.தூரமும்இரண்டு நாள் தினம் முப்பது கி. மீ. வீதம் நடந்தும், மூன்றாம் நாள் மாலை 4 மணிக்கு முதல்நாள் புறப்பட்ட கைலாயம் செல்லும் பாதையில் உள்ள மானசரோவரக் கேம்பிற்கு வந்து சேர்ந்தோம். மாலை சுமார் 3-30 மணிக்கு அப்பகுதியில் ஒரு பெருங்காற்று அடித்தது. அப்போது பொங்கி வரும் கடல் போன்று மானசரோவரத்தில் அலைகள் பயங்கரமாக அடித்துக்கொண்டிருந்தன. ''ஆசையெனும் பெருங்காற்றூடு இலவம் பஞ்செனவும் மனதலையுங்காலம் மோசம் வரும், இதனாலே கற்றதுங் கேட்டதும் தூர்ந்து முத்திக்கு ஆன நேசமும் நல்வாசமும் போய்ப் புலனாய்க் கொடுமைபற்றி நிற்பர் அந்தோ தேசு பழுத்து அருள்பழுத்த பராபரமே நிராசை இன்றேல் தெய்வமுண்டோ'' என்னும் தாயுமானவர் வாக்கிற்கு நிதர்சனமாகவும் நல்ல விளக்கவுரையாகவும் அக்காட்சி தென்பட்டது. சுமார் அரைமணி நேரம் அந்தக் காற்றில் சிக்கிக்கொண்டோம். உடம்பெல்லாம் ஊசியைக்கொண்டு குத்துவது போன்றும், லேசான நெருப்பு மேல் படுவது போன்றும் உணர்ந்தோம். சிவபெருமான் இயற்கையின் செயல்களை நமக்குச் சிறிதளவு காட்டித்தருகின்றார் என்று முடிந்த அளவு ஓட்டமாக ஓடிவந்து கூடாரத்துக்குள் புகுந்து அடுப்பை மூட்டிச் சிறிது நேரம் உடலைச் சூடாக்கி உள்ளேயும்சூடாக்குவதற்குக் காபி, டீ குடித்த பிறகுதான் ஒருவாறு ஓய்வெடுக்க முடிந்தது. அதன் பிறகு யாருக்கும் சமையல் செய்து சாப்பிடக்கூடிய அளவிற்குத் தெம்பு இல்லை. இருந்தாலும் இரண்டு நாளாக உலர்ந்த பழங்களையும் பிஸ்கட் போன்றவைகளையுமே சாப்பிட்டுக்கொண்டு இருந்ததால் நானும் இன்னோர் அன்பரும் சிரமத்தைப் பொருட்படுத்தாது கொஞ்சம் அரிசி போட்டுச்சமைத்து ரசப்பவுடரைக்கொண்டு ரசம்மட்டும் தயார் செய்து ரேஷன்போன்று பேருக்குக் கொஞ்சம் கொடுத்தோம். சிலர் அதை மிகவும் ரசித்துச் சாப்பிட்டனர். இரண்டொருவர் சாப்பாடு சாப்பிடவும் சக்தி இல்லாது படுத்துக்கொண்டனர். மறுநாள் காலை பௌர்ணமி நாளாக இருந்ததால் காலை 7 மணிக்கு எழுந்து இரண்டொருவர் மானசரோவரத்தில் குளித்தபின் பூஜை செய்தனர். மற்றவர்கள் சிறிது சிற்றுண்டி தயார் செய்து சாப்பிட்டுவிட்டு 10 மணி அளவில் நன்குகுளித்துப் பூஜைசெய்துவிட்டு ஓரளவு அன்று நல்லமுறையில் சமையல் செய்து பருப்பு, ரசம், அப்பளம் முதலியன செய்து சாப்பிட்டுவிட்டு நன்கு ஓய்வெடுத்தோம். அன்று மாங்காய் ஊறுகாய் கிடைத்தது. எல்லாரும் அதை அமிர்தம் போன்று ரசித்துச் சாப்பிட்டார்கள். 'நிழல் அருமை வெயிலிலே' என்பது போன்று உணவின் பெருமையை நாங்கள் அங்கு நன்றாக உணர்ந்தோம். அன்று முழுதும் மானசரோவரக் கேம்பிலேயே ஓய்வெடுத்தோம். மறுநாள் 8 மணிக்குத் தக்களக் கோட்டையிலிருந்து லாரி வந்தது. எங்களை அழைத்துக்கொண்டு போய்க் கையிலை மலையின் அடிவாரத்தில் உள்ள கேம்பில் விட்டுவிட்டு அங்கிருந்த குழுவினரைக் கொண்டு வந்து மானசரோவரக் கேம்பில் விட்டார்கள்.

(தொடரும்)

# குறிப்புகள்

( சுவாமி பிரணவானந்தர் )

**கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏழுநாட்கள்**

கார்த்திகைமாதம் தமிழகமெங்கும் ஆறு நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்படும் கந்தர்சஷ்டி விழாச் சமயத்தில்—கன்னியா குமரிமாவட்டத்திலுள்ள சில இந்து கிராமங் களுக்குச் சென்று. அங்குள்ள ஏழை எளிய மக்களின் பக்தியுணர்வை அறியும் வாய்ப்புக் கிடைத்தது. குமரி மாவட்ட விசுவ ஹிந்து பரிஷத் ஸ்தாபனத்தாரும் பொதுமக்கள் சிலரும் இதில் கலந்து கொண்டார்கள்.

16–11–82 செவ்வாய்க்கிழமை மாலை ஐந்தரை மணியளவில்—நாகர்கோவில் டவுன்—விசுவ ஹிந்து பரிஷத் அலுவலகத்திலிருந்து புறப்பட்டுத் திருநடுக்காடு என்ற இடத்தி லுள்ள இசக்கியம்மன் கோவிலை அடைந் தோம். சிறிய, அழகான கோவில்—கோவி லுக்கு முன்னால் 150க்கும் மேலான பெண் கள் திருவிளக்கின் முன் அமர்ந்துகொண்டு பக்தி சிரத்தையுடன் பூஜை நடத்திக் கொண்டிருந்தார்கள். கிட்டத்தட்ட ஆயி ரத்துக்கும் மேலான பக்தர்கள் அப்பூஜை யில் கலந்துகொண்டார்கள். ஒரு மணி நேரம் சிறப்பாகப் பூஜை நடந்தது. எங்கள் குழு அன்பர்கள் சிலர் அங்குக் கூடி யிருந்த பக்தர்களுக்குச் சக்தி வழிபாட்டின் சிறப்பை எடுத்து விளக்கினார்கள். குறிப் பாக—அன்னை பராசக்தியின் குழந்தை களான ஜீவராசிகளுக்குச் செய்யும்சேவையே வழிபாடுகளில் சிறந்தது என்ற கருத்து விளக்கப்பட்டது. சொற்பொழிவுக்குப் பின் கோவிலில் தீபாராதனை நடந்தது. தீபா ராதனைக்குப்பிறகு கிட்டத்தட்ட 1500 பக்தர்களுக்கு அன்னப் பிரசாதம் வழங் கப்பட்டது. பிடியரிசித் திட்டத்தின் மூலம்சேகரிக்கப்பட்ட அரிசியைக்கொண்டு பிரசாதம் தயாரிக்கப்பட்டிருந்தது. விழா முடிந்து நாகர்கோவிலுக்குத் திரும்பும் பொழுது இரவு 11 மணியாகிவிட்டது.

17—11—82 அன்று காலை 8 மணியள வில் புறப்பட்டுச் சமீபத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடந்த கலவரத்தால் மிக வும் பாதிக்கப்பட்ட ஈத்தாமொழி கிரா மத்தைச் சென்று கண்டுவிட்டு, கணபதி புரம் என்ற கிராமத்திற்குச் சென்றோம். கணபதிபுரம் கிராமத்தில் உள்ள மஹரிஷி வித்யாபீடத்தைச் சென்று பார்வையிட் டோம். எங்களை ஆசிரியர்களும், பக்தர் களும், சிறுவர் சிறுமியர்களும் மகிழ்ச்சி யுடன் வரவேற்றார்கள். தேச பக்தி, தெய்வ பக்தி மிகுந்த பாடல்களைக் குழந்தைகள் பாடக் கேட்டோம். குழந்தைகளின் நிகழ்ச்சி களுக்குப் பிறகு அறிவுரை வழங்கும் பாங் கில் அவர்களுக்கு 'சுவாமி விவேகானந் தரின்' வாழ்க்கையிலிருந்து சில நிகழ்ச்சி கள்–எளிய முறையில் கதையாகச் சொல்லப் பட்டன. இந்நிகழ்ச்சிக்குப்பின் நாங்கள் உணவு ஏற்றுக்கொண்டு வெள்ளை மடம் என்ற கிராமத்திற்குச் சென்றோம். திரளான மக்கள் கிராம வாயிலில் எங்களை மலர்தூவி வரவேற்று எங்களை அவ்வூரின் மத்தியில் உள்ள கணபதி கோவிலுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்குப் பஜனை நடந்து கொண்டிருந்தது. நாங்களும் அவர்களு டன் பஜனையில் கலந்துகொண்டோம். பஜனைக்குப் பின் எங்களில் சிலர் அக்கிராம மக்களுக்கு நம் இந்து மதத்தின் சிறப்புக் களைப் பற்றி விளக்கமாகச் சொன்னார்கள். சொற்பொழிவுக்குப்பின் அந்த ஊர்ச் சிறுமி கள் தேச பக்தி, தெய்வ பக்தி மிகுந்த அழகான பாடல்களைப் பாடி எங்களை மகிழ் வித்தார்கள். பின்னர் பூஜை விமரிசையாக நடந்தது. பூஜைக்குப்பின் கிராமவாசி களில் சிலர் ஐயப்ப மலைக்கு மாலை அணிந்து கொண்டார்கள். அதன் பிறகு சில வீடு களுக்கு எங்களை அழைத்துச் சென்று உப சரித்தார்கள். நாங்கள் நாகர்கோவிலுக்குத் திரும்புகையில் இரவு மணி 10 இருக்கும்.

18–11–82 அன்றுகீழக்குஞ்சன்விளை என்ற கிராமத்தை அடைந்தோம். அங்கே புதிதா கக்கட்டப்பட்ட ஒரு சிறு முருகன் கோவில் முன்னால் அமைந்துள்ள பந்தலின்கீழ் அக் கிராம மக்கள் அமர்ந்து பஜனை செய்து

கொண்டிருந்தார்கள். எங்களைப் பக்தி சிரத்தையுடன் வரவேற்று உபசரித்தார்கள். பின்னர், அபிஷேக ஆராதனையுடன் விசேஷ பூஜை நடைபெற்றது. அதன் பின் நடைபெற்ற சொற்பொழிவில் 'தர்மத்திற்கு நிகரான செல்வம் இகபரத்தில் கிடையாது' என்ற அரிய கருத்து எளிய முறையில் விளக்கப்பட்டது.

19-11-82 அன்று காலை 9 மணிக்குவெட்டுரணிமடம் என்ற இடத்திலுள்ள மஹரிஷி ஆங்கிலப் பள்ளிக்கூடத்தை அடைந்தபோது அங்குள்ள ஆசிரியைகள், நூற்றுக் கணக்கான மாணவ மாணவிகள் எங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். வரவேற்புரை, இறைவணக்கம், தனிப் பாடல்கள், குழுப்பாடல்கள்-இப்படிப் பலநிகழ்ச்சிகளைச் சிறுவர், சிறுமியர்கள் நடத்தி எங்களைப் பரவசப்படுத்தினார்கள். எங்கள் பங்காக அவர்களுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் வாழ்க்கையிலிருந்து சில நிகழ்ச்சிகளைச் சொல்லி மகிழ்வித்தோம். நிகழ்ச்சிக்குப் பின் பிள்ளைகளுக்கு இனிப்புக்கள் வழங்கப்பட்டன. அன்று மதிய உணவுக்குப் பின் நாங்கள் தோவாளை என்ற கிராமத்திற்குச் சென்றோம். அக்கிராம மக்கள் எங்களை வரவேற்று, மாலை அணிவித்து, வாத்தியக் கோஷங்கள் முழங்க, மலைமேல் குடிகொண்டிருக்கும் பாலமுருகனின் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார்கள். கோவிலில் விசேஷ வழிபாடு, பஜனை நடைபெற்றுக் கொண்டிருந்தன. வழிபாட்டுக்குப்பின் நிகழ்ந்த சொற்பொழிவில் பாலமுருகனின் சிறப்புக்களும் கோவில் வழிபாட்டின் தத்துவங்களும் விளக்கப்பட்டன. அக்கிராம மக்கள் எங்களுக்கு அன்புடன் சிற்றுண்டி வழங்கினார்கள். எட்டு மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு ஒன்பது மணிக்கு மாலையணிந்தான்குடி என்ற கிராமத்தையடைந்தோம். பூஜை முடிந்து தேவார பஜனை மிகப் பிரமாதமாக நடந்து கொண்டிருந்தது. கோவிலின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமான பக்தர்கள் குழுமியிருந்தார்கள். தேவார பஜனை முடிந்தது. அடுத்த நிகழ்ச்சி கூட்டுவழிபாடு. பஜனை, நாமாவளி, அர்ச்சனை, தியானம் முதலியவைகளுடன் வழிபாடு நடத்தி எங்களைப் பிரமிக்கச் செய்தார்கள். வழிபாட்டுக்குப்பின் நிகழ்ந்த சொற்பொழிவில் 'சூரசம்ஹாரத்தின் அடிப்படைத் தத்துவம்' விளக்கப்பட்டது.

20-11-82 அன்று மாலை சுமார் 4-30மணியளவில் புறப்பட்டுப் பிரசித்தி பெற்ற மருங்கூர் முருகன் கோவிலுக்குச் சென்றோம். கோவிலில் விசேஷ பூஜை நடந்து கொண்டிருந்தது. பூஜைக்குப்பின் கண்ணைக் கவரும் வகையில் முருகப்பிரானை அலங்கரித்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். வழிபாட்டிற்குப் பிறகு அங்கிருந்த பக்தர்களை ஒன்றுபடுத்தி 'முருகா சரணம்' என்ற நாமாவளியைப் பாடவைத்தோம். பின்னர் 'மனித வாழ்க்கையின் குறிக்கோள் இறைவனை அடைவது' என்ற கருத்தைத் தழுவிய சொற்பொழிவு நடைபெற்றது. நிகழ்ச்சி முடிந்து இரவு 10 மணியளவில் நாகர்கோவில் வந்துசேர்ந்தோம்.

21-11-82 அன்றுமாலைநாகர்கோவில் நாகராஜர்கோவிலுக்கு நாங்கள் அனைவரும்சென்றோம். நாகராஜர் கோவிலிலுள்ள சுவாமி, அம்மன் சன்னிதிகளைத் தரிசித்துவிட்டு முருகன் சன்னிதிக்கு நாங்கள் சென்றோம். அங்கு பக்தர்கள் கூட்டம் உருக்கமாகப் பஜனை செய்துகொண்டிருந்தனர். பஜனையில் கலந்துகொண்டு பின்னர் அரைமணி நேரம் 'இந்துசமயத்தின் பெருமையைப்பற்றிப்' பக்தர்களுக்கு விளக்கும் வாய்ப்புக் கிட்டியது. மதிய உணவுக்குப் பிறகு பெருஞ்சக்கோணம் என்ற கிராமத்திற்குச் சென்றோம். சமீபத்தில் நடந்த கலவரத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட கிராமங்களில் அதுவும் ஒன்று. அங்குள்ள இந்துக்களின் கஷ்டமான நிலைமை எல்லார் உள்ளத்தையும் உருக்குவதாக இருந்தது. எத்தனையோ பிரச்னைகளுக்கிடையில் வாழ்ந்தபோதும் பக்தியில் மேம்பட்டவர்களாகத் திகழ்ந்தார்கள். எங்கள் வரவுக்காக மதியம் இரண்டு மணிமுதல் காத்துக் கொண்டிருந்தார்கள். வழிபாடு செய்யக் கோவில் இல்லாத காரணத்தால்சாலை ஓரத்தில் ஒரு பிள்ளையார் சிலையைப் பிரதிஷ்டை

செய்து அதன் முன் அமர்ந்திருந்தார்கள். வழிநெடுக வானளாவி நிற்கும் கிறிஸ்துவ ஆலயங்களைச் சாலையின் இருமருங்கிலும் கண்டோம். இந்துக்களின் ஆதரவற்ற நிலையையும்கண்டோம். வழிபாட்டிற்குப்பிறகு அவ் ஊர் இளைஞர்கள் பக்திப் பாடல்களைப் பாடினார்கள். பின்னர், ஏழுமணியளவில் சித்திரங்கோடு என்ற கிராமத்திற்குச் சென்றோம். அங்கு ஒருசிறிய கிருஷ்ணன் கோவிலில் ஆயிரத்துக்கும் மேலான மக்கள் கூடியிருந்தார்கள். சுமார் 150 பெண்கள் குத்துவிளக்குகளின் முன் அமர்ந்து வழிபாடு நடாத்திக்கொண்டிருந்தார்கள். நிகழ்ச்சிகள் முடிய இரவு மணி 11ஆயிற்று.

22—11—82 அன்றுகாலை 8 மணியளவில் புறப்பட்டு மேலபுரம் என்ற கிராமத்தை அடைந்தோம். அங்கு விசுவ ஹிந்து பரிஷத் நடத்தும் பாலர் பள்ளிக்குச் சென்றோம். அமைதியான சூழ்நிலையில், மரங்களடர்ந்த பகுதியில் ஒரு சிறு குடிசையில் இப்பள்ளிக்கூடம் நடந்து வருகிறது. எங்களைக் கண்டதும் அக்கிராமத்து மக்கள் சிலரும் வந்து சேர்ந்தார்கள். கிராம மக்களுக்குச் சுவாமி விவேகானந்தர் வாழ்க்கையிலிருந்து சில நிகழ்ச்சிகள் கதை வடிவில் ஒருமணி நேரம் சொல்லப்பட்டன. பின்னர் அங்கிருந்த குழந்தைகளுக்கும், கிராம மக்களுக்கும் இனிப்புகள் வழங்கினோம். அங்கிருந்து புறப்பட்டு மார்த்தாண்டம் என்ற ஊருக்குச் சென்றோம். அங்குள்ள மஹரிஷி பாடசாலையைப் பார்வையிட்டோம். அப்பள்ளிச் சிறுவர், சிறுமியர்கள் தேசபக்தி, தெய்வபக்தி மிகுந்த பாடல்களைப் பாடிக் காட்டி எங்களைப் பரவசப்படுத்தினார்கள். நிகழ்ச்சிகளுக்குப்பின் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. மதிய உணவுக்குப்பின் பெருவிளை என்ற கிராமத்திற்குச் சென்றோம். அன்று கந்தர் சஷ்டியின் கடைசிநாள். அழகான முருகன் கோவில் முன்னால் அமைக்கப்பட்டிருந்த பெரும் பந்தலின்கீழ்ஆயிரக்கணக்கானமக்கள்கூடியிருந்தார்கள். முருகனைத் தரிசித்தோம். பின்னர் ஆங்கு நடந்த கூட்டத்தில் இந்து சமய முன்னேற்றத்துக்கான கருத்துக்கள் ஆராயப்பட்டன. இத்துடன் எங்கள் யாத்திரையும் இனிது முடிந்தது.

---

## செய்திகள்

### நிகழ்பவை

19-12-82 ஞாயிற்றுக்கிழமையன்று திருநெல்வேலி ஜில்லா, சேரன்மஹாதேவி பாரத்வாஜ ஆச்ரமத்தில் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் ஒருநாள் அந்தர்யோகம் நடாத்துவார்கள். அன்று கோவை ஜில்லா குமரன் குன்று ஆலயத்தில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் ஒருநாள் அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

டிசம்பர் மாதம் 25 ஆம் தேதி சனிக்கிழமையன்று ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல பழைய மாணவர்கள் சங்கம் தபோவனத்தில் கூடும்; அன்று கிறிஸ்து ஜயந்தியை முன்னிட்டு இரவு 6-30 மணியிலிருந்து 7-30 மணிவரை ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்களும் பழைய மாணவர்களும் ஐக்கிய வணக்கம் செய்வார்கள்.

26-12-82 ஞாயிற்றுக்கிழமையன்று வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் உபவாசமிருந்து இருபத்து நான்குமணி நேரம் அகண்ட நாம பஜனையும், ஸ்ரீமத் பகவத் கீதை முழுவதும் ஒரு முறை பாராயணமும் செய்வார்கள்.

5-1-83 புதன்கிழமையன்று ஸ்ரீ விவேகானந்த ஜயந்தியை முன்னிட்டு ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் இருபத்து நான்கு மணி நேரம் அகண்ட நாம பஜனையும் நண்பகல் ஒருமணி நேரம் ஐக்கிய வணக்கமும் செய்வார்கள்.

7-1-83 வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் பொங்கல் விடுமுறைக்காக மாலை 4 மணிக்கு மேல் அவரவர்கள் ஊருக்குப் புறப்படுவார்கள்.

9-1-83 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 5-30 மணியிலிருந்து இரவு 9 மணிவரை விருதுநகர் சக்திசங்கத்தில் நடைபெறும் ஆண்டு விழாவுக்கு ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் தலைமைதாங்கிச் சொற்பொழிவாற்றுவார்கள்.